Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් நவ . 19-25 , 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 383

# நோர்வே வருகையின் பின்னணியும் பிரபாகரனின் பேச்சுவார்த்தையும்




கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## சமூக உரிமை மீறல்!

***அன்புள்ள உங்களுக்கு,***
***வணக்கம்.***

புதிய பாராளுமன்றத்தின்
சம்பிரதாய பூர்வ
ஆரம்ப விழாவின்போதே
துர்க்குறியான ஒரு சம்பவம்
நிகழ்ந்து விட்டது.

இம்முறைதான் முதன் முறையாக
பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட
மட்டக்களப்பு கூட்டணி பா.உ
நிமல் சவுந்தரநாயகம்
சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.
தனது கன்னியுரை தன்னும்
நிகழ்த்த முன்னரே,
மட்டக்களப்பில்
அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்றவர்,
துப்பாக்கிக்குப் பலியாகிவிட்டார்.
இதன் மூலம்
மட்டக்களப்பு மக்களின்
விருப்பு வெறுப்புக்கு
இக்கொலைக் களத்தில்
மதிப்புக் கிடையாதென்ற
செய்தியைத்தான் இத்
துப்பாக்கியின் பாஷையில்
புரிந்து கொள்ளக் கூடியதாக
உள்ளது.

கடந்த தேர்தலில்
என்றுமில்லாத அளவு
ஆர்வமுடன் போட்டியிட்ட
பெருந்தொகையான
கட்சிகளும் குழுக்களும்
சுயேச்சை அணிகளும்
ஜனநாயக வழிமுறை பற்றிக்
கொண்டிருந்த நம்பிக்கை
இந்தச் சம்பவத்துடன்
கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது.

இப்பாராளுமன்ற உறுப்பினரின்
படுகொலைகள் மட்டுமல்ல,
அண்மையில், பத்திரிகையாளர்கள்
நிமல்ராஜன் மற்றும்
செழியன் பேரின்பநாயகம்
போன்றோருக்கு
வாழும் உரிமை
மறுக்கப்பட்டதும்
இத்தகைய நிலைமையை
எடுத்துக் காட்டுவனவே.

இதேவேளை
உயிர் பறிப்பு என்பது
பிரபல்யமானவர்களுக்கு
நிகழ்ந்தால் மட்டுமே
ஊடகங்களின் கண்களில்
படுவனவாக உள்ளன.
சாதாரண நபர்களின்
உயிர்கள் பறிக்கப்பட்டால்
இரண்டு வரிச் செய்திக்குள்
பத்திரிகைகளில் அடங்கிவிடுகிறது.


உண்மையில்,
சாதாரண மக்களுக்காகவே
அரசியல் வாதிகளும்
பத்திரிகையாளர்களும்
மனித உரிமை வாதிகளும்
செயற்படுவதாகச்
சொல்லிக் கொள்கின்றனர்.

ஆனால், அவர்களுக்கு ஏதும்
ஆபத்து நிகழ்ந்தால்
ஆர்ப்பரிப்பது போலன்றி,
சாதாரண நபர்கள்
பலியாக்கப் படும்போது
கண்டுகொள்ளாமல் விடப்படுவதுதான்
பரிதாபம்.
நிமல்ராஜன் படுகொலைபற்றி
கண்டனக் குரல்கள்
உலகெங்கும் ஒலித்தன.
அவ்வாறு ஒலிப்பது
அவசியமான ஒன்றும் கூட;
ஆனால் அதேவேளை
இது நிகழ்ந்து
இரண்டொரு நாட்களின்பின்
உழவு இயந்திர உரிமையாளர் ஒருவர்
யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டிருந்தார்.
ஆனால் அந்தச் சம்பவத்துக்கு
எந்த முக்கியத்துவமும்
வழங்கப்படவில்லை.
இந்த வித்தியாசம் தான்
மனதை உறுத்துவதாக உள்ளது.
சாதாரண மனிதர்கள்
பெறுமதியற்றவர்களாக
உதாசீனப் படுத்தப்படும்
மனோபாவத்தை
ஊடகத் துறை
மாற்றிக் கொள்ள வேண்டும்.
எல்லாப் படுகொலைகளும்
சமமான அளவில்
கண்டிக்கப்பட வேண்டும்.
ஒருவர் கொண்டிருக்கும்
கருத்துகளும் செயற்பாடும்
சரியா பிழையாவெனத்
தீர்மானிக்கும் உரிமையை
துப்பாக்கிகள் எடுத்துவிடக்கூடாது.
அப்படியானால்,
இத் துப்பாக்கிகளின் செயற்பாடு
சரியா பிழையாவென
யார் தீர்மானிப்பது?
சாதாரண மக்களின்
உரிமைகளை
வென்றெடுக்கவென்றே
புறப்பட்ட துப்பாக்கிகள்
சாதாரண மக்கள்
தமக்கு விருப்பமானவர்களைத்
தேர்ந்தெடுக்கும் உரிமையைப்
பறிப்பதென்பதே
உரிமை மீறலல்லவா?
இந்த வகையில்
கூட்டணி உறுப்பினர்
யாரால் படுகொலை செய்யப்பட்டிருந்தாலும்
அது மனித உரிமை மீறல் மட்டுமல்ல,
மட்டக்களப்பு மக்களின்
சமூக உரிமை மீறலும் கூடவே தான்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்



## பரமாத்மா, ஆத்மா, சரீரம்

ஏ! ஆத்மா, சிவன் ஆகிய என் ஒருவரிடம் எல்லா சம்மந்தங்களையும் இணைத்து விடு. அதனால் என்னிடமிருந்து எல்லையற்ற சுகம் உனக்குக் கிடைக்கும். தேகதாரியிடமிருந்து அற்ப நேரம் நீடிக்கும் சுகம் உனக்குக் கிடைத்தது. இப்பொழுது எல்லையில்லா நிரந்தர சுகம் பரமாத்மா சிவனிடம் இருந்து கிடைக்கிறது.

பரமாத்மா-சிவன்-தந்தை எப்படிப்பட்ட சுகத்தைத் தருகின்றார்? இச்சுகத்தில் பணம், பொருள் பற்றிய பேச்சே கிடையாது. ஈஸ்வரிய சுகம் பெற்றவருக்கு தேக அபிமான சுகம் நினைவுக்கு வராது. தேசாபிமானம் கொடுப்பதோ துக்கம். மற்றவரது சரீரத்தை ஊடுருவிப்பார். உள்ளே என்ன இருக்கிறது? ஒவ்வொரு ஆத்மாவும் சுயநலத்துடன் இருக்கிறான்.

இந்த சரீரம் இப்பொழுது ஆரோக்கியமாக இருக்கிறது. இதை வைத்து சிவனை நினைவு (யோகம்) செய்தும், அனேக ஆத்மாக்களுக்கு சேவையில் உதவி செய்தும் வருமானம் செய்ய முடிகிறது. ஆகவே, எமது உடலை ஆத்மாவுக்கு ஒரு பாதுகாவலன் ஆக்கினால் நாம் ஒரு தேவதையாகி தெய்வீக சேவையாற்ற சரீரம் துணை புரியும்.

பி.கு.விக்கி-கல்முனை.

## இறைமறைபோதிக்கும் தான தர்மம்

பொருளைச் சேர்த்துவைத்துக் கொண்டு அதை அநாதைகளுக்கும், அல்லற்படுவோருக்கும், வறியவருக்கும் வழங்காதவன் இறைவனிடத்தில் ஈடேற்றம் பெற மாட்டான்.

தான் பாடுபட்டுத் தேடியதிலிருந்து பிறருக்கும் கொடுத்து உதவும் மனிதன் விசாலமான இதயம் படைத்தவன். தியாக உள்ளம் கொண்டவன். இவன்தான் அல்லாஹ்விடத்தில் மேன்மையுள்ளவன்.

இறை மறை கூறுகிறது.

"நபியே! தான தருமங்களில் எதைச் செலவு செய்ய வேண்டுமென்று உம்மிடம் கேட்கின்றனர்."

"உங்கள் தேவைக்குப் போக மீதமுள்ளதை என நீர் கூறுவீராக."

அல்குர் ஆன் (2:219)

ஆம்! சிந்தித்துப் பார்ப்போருக்கே இந்த திருவாக்கியத்தின் பொருள் நன்கு புலனாகும். இப் பெருமையைப் பற்றி சிந்தியாது பணம், பணம் என்று பேயாகப் பறந்து பொருளைச் சேர்த்து வைப்பவனின் இவ்வுலக வாழ்விலும் இன்பமில்லை; இதைத் தொடர்ந்து வரும் மறு உலக வாழ்விலும் பாக்கியமில்லை.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

## பலவீனம்

"அவர்தாமே நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார்." (மத்.8:17)

இயேசுகிறிஸ்து இப்பூமியிலே நம்மில் அன்புகூருவதோடு, நிறுத்திவிடவில்லை. பாவச் சேற்றில் இருந்து நம்மை தூக்கி எடுத்தார். அது மாத்திரம் அல்ல, நம்முடைய பலவீனங்களை ஏற்று நம்முடைய நோய்களையும் சுமந்தார். இந்த உலகம் சுயநலமானது, மற்றவர்களைப் புரிந்து கொள்ளாதது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ மகிழ்ச்சியோடு நம் பலவீனங்களை ஏற்றுக்கொண்டார். அநேகர் சோதனை வேளையில் அதைரியப்பட்டு விடுகிறார்கள். விசுவாசத்தில் உறுதியில்லாமல், 'தேவன் இருக்கிறாரா? அவர் எங்கே போனார்?' என்றெல்லாம் புலம்புகிறார்கள். அருமையானவர்களே! நீங்கள் எவ்வளவு கர்த்தரோடு நெருங்கி வருகிறீர்களோ, அவ்வளவு விசுவாசத்தில் பலமுள்ளவர்களாவீர்கள். எவ்வளவுக்கெவ்வளவாக தேவ வசனத்தைக் கைக் கொண்டு கிறிஸ்துவை சார்ந்து கொள்வீர்களோ, அவ்வளவாய் ஆன்மீகத்தில் வலிமையுள்ளவராவீர்கள்!

திருமதி.க.மேரி மாகிரட்-கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல.383



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.11.2000

கவிதைப் போட்டி இல.383
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.380

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### பரிசுக்குரிய கவிதை

### ஜாக்கிரதை!

பந்தாக இருந்தால்
பிடித்து விளையாடு!
குண்டாக இருந்தால்
தூர விலகி ஓடு!

லி.கிரிசாந்தி-
மட்டக்களப்பு.

### வீரனாய்...

ஒன்றும் அறிய எப்
பிள்ளையென்றா...
பந்தாய் குண்டைத் தந்தீர்....!
ஏற்றுக் கொள்கிறேன் வீரனாய்
பெருகியிருக்கும் உறவுகளுடன்
ஒன்றாய்ச் சேர!

எம்.டி.தில்ஷாந்த பேகம்-ஹெட்டிபொள

### பந்துபோல...

உலகம் இன்று
சுருங்கி விட்டதோ....?
உன் கையில்
பந்து போல்....!

வீணைவேந்தன்-திருமலை.



### எங்கே..!

தம்பி!
உலகம் வரண்டு ஓடினாலும்
யுத்தம் தான் நம் நாட்டில்!
சமாதானம் எங்கே
கிடைக்கப்போகிறது?

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

### விட்டுவிடாதே

முயற்சியுடையார்
இகழ்ச்சியடையார்
கெட்டியாய்ப் பிடி
விட்டு விடாதே...!

அ.யாழினி-
மட்டக்களப்பு.

### அச்சமில்லை

அகத்தினிலே வஞ்சமில்லா
அழகு முகம் ஒளி சிந்தும்
குழந்தை இரு கரங்களிலே
தவழுவது அழகு பந்தோ!
மனித உயிர் குடிக்கும்
வெடிகுண்டோ யானறியேன்!

முஸ்தபா நம்சானி-ஏறாவூர்.

### வஞ்சமில்லா இதயமே

வஞ்சனைமிக்க உலகில்
எதனை எடுத்து விளையாடுகிறாய்...!
தொட்டதெல்லாம் வெடிக்கும்
கவனமடா.....!

அழகு நிலா நிலவன்-இளவாலை.

### மழலை வாழ...?

மழலைகள் வாழும்
குவலயம்
அது ஆலயம் அன்றோ...?
ஆனால் இம் மழலை வாழ
குவலயம் ஏது....?

ம.றொபின்சன்-
இளவாலை.

### உலகம்

இன்றைய உலகம் நாளையோர்
கையில் என்பார்கள்
அது இதுதானோ?
இன்றைய உலகுக்கு நாளையோர்
இருந்தால் இது பொருந்தும்!

ச.சசிதரன்- தெஹிவளை.

### பச்சடி

பந்தைப் பிடித்துப் பழகினால் போல என்ன
சேர்க்கவா போறார் உன்னைக் கிறிக்கெட்டில்!
பந்தம் பிடித்தாவது பழகு-அதனால்
பச்சடியாவது கிடைக்கும் உன் பரம்பரைக்கு!

கே.தங்கராஜா-சீனன்குடா.

### போருலகு

பாலகன் கைப் பந்துபோல்,
பாருலகு இன்று;
போரரக்கனின் கையில்,
உருண்டு புரளகின்றது.

எஸ்.ஞானராஜா-
வாழைச்சேனை.

### ஒத்திகை

பந்தாட்டம் ஆடுவதற்கு
பார்ப்பது என்ன ஒத்திகையோ?
பந்தாட்டம் தான் முடிந்துவிட்டதே
பிறகு எதற்கிந்த ஒத்திகை?

த.தமயந்தி-திருகோணமலை.

### குண்டு

விளையாட்டுப் பொருள் என்றெண்ணி
விளையாடும்
பிஞ்சு மழலையின் கையிலுமா.....?
நஞ்சைக் கொடுக்கும்-
பிசாசுகள்?

எஸ்.பி. ஆர்-யாழ்ப்பாணம்.

# வாசக[ர்]சாலை

முரசே..

## தெவிட்டாத தேர்தல் ஜோக்ஸ்

ஞாயிறு தினம் வந்துவிட்டாலே எங்கள் கைகளில் தவழும் முரசைப் பத்திரப்படுத்திக்கொள்வோம். அதில் பிரசுரமாகும் அத்தனை அம்சங்களும் அருமையே...

நரன் தரும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அதிரடி அய்யாத்துரை', 'அலசுவது இராஜதந்திரி' போன்றவை பிரமாதம்.

376வது முரசில் 'ஒலிம்பிக் திருவிழா' தலைப்பிலான அம்சம் உண்மையில் நாம் அறிந்திராத சில உண்மைகளை அறியவைத்தது. 'தேன் கிண்ணம்' தேனான கவிதைகளைத் தெவிட்டாது தருகிறது.

கலை உலகில் கால் பதித்தவர்களை நாம் அறிந்து கொள்வதில் ஆனந்தம்தான்,, அந்தவகையில் 'கலை உலகில் கருணாநிதி' என்ற அம்சம் வரவேற்கத்தக்கது. சிறுகதைகள் அனைத்தும் அருமை, அதில்.... வீணைவேந்தனின் 'நினைவஞ்சலி' சற்று வித்தியாசமானதாக இருந்தது. பாராட்டுக்கள்.

'தேர்தல் கால ஜோக்ஸ்' வயிறுகுலுங்கச் சிரிக்கவைத்தது. முரசுக்கு நன்றி. உன் பணி தொடரட்டும்.

என்.எல்.முஸம்மில்-குவைத்.

✉✉

மூச்சோடு கலந்துவிட்ட முரசே...!

பத்திரிகைத்துறையால் சிலருக்குப் பெருமை. ஆனால் உன்னால் பத்திரிகைத்துறைக்கே பெருமை. முரசு 379ல் வந்த லோர்ட் டென்ஸானி எழுதிய சிறுகதை அற்புதம். தமிழாக்கம் செய்தவருக்குப் பாராட்டுக்கள். முரசின் அனைத்து அம்சங்களும் சிறப்பாக உள்ளன. ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டிக் கொண்டு சம நிலையில் உயர்ந்து நிற்கின்றன. 'சிந்தியாவின்' பதில்கள் மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் இருப்பது அவரது மனத் தெளிவைக் காட்டுகிறது.

முரசத்தில் இருந்து இறுதிப் பக்கம் வரை எதையும் தவறவிடாது வாசிப்பேன். ஏனென்றால் எதையும் வாசிக்காது விடமுடியாது. அத்தனையும் அர்த்தமுள்ள ஆக்கங்கள். என்றும் தர்மமே வெற்றி பெறும்; புகழடையும் ஆகவே முரசும் என்றும் வெற்றிகள் பெற்று புகழ் பரப்பிக் கொண்டிருக்கும். முரசிற்கு என் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.

க.சத்தியறாஜி-அளவெட்டி.

✉✉

தித்திக்கும் தேனமுதான தினமுரசின் ஆயிரமாயிரம் வாசகர்களில் நானும் ஒருத்தி. முதற்கண் மறைந்த எம் ஆசிரியர் அற்புதராஜா அவர்களுக்கு எனது ஓராண்டு நினைவஞ்சலி உரித்தாகட்டும்.

ஒவ்வொரு ஞாயிறும் நீ சுமந்து வரும் 'மன்னாதி மன்னன்', 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', தொடர்கதை, 'செய்திச் சிதறல்', 'சிந்தியா பதில்கள்', 'தேன் கிண்ணம்' அத்தனை அம்சங்களும் இனிமையிலும் இனிமை. முரசே திசைகள் எட்டும் உன் பணி தொடர என் வாழ்த்துக்கள்!

கே.எம்.ராபியா-குவைத்.

முத்தான முரசே!

புல்லறிவாளர்களாகிய அற்பர்களால் அற்புதராஜாவின் பூதவுடலை மட்டுமே அழிக்க முடிந்தது. அவரது புகழுடலை அவர்களால் என்ன செய்ய முடிந்தது?

அவரை அழிப்பதன் மூலம் முரசையும் முற்றாக அழித்து விடலாம் என்று அவர்கள் நினைத்தார்கள் போலும்! இனிய தமிழ் 'முரசு' எட்டுத் திக்கும் முழங்குவதற்குரிய அத்திவாரத்தை அவர் இட்டதையும், அதனை நிலை குலையச் செய்ய முடியாது என்பதையும் அந்த அற்பர்கள் மறந்து விட்டார்கள்! பேனா முனை கொண்டு முரசிலே அவர் எழுதியவை அத்தனையும் உண்மையிலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையே! அத்தகைய ஓர் அரும் பெரும் எழுத்தாளரை முரசு இழந்தது. யுகங்கள் பல கடந்தாலும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பேயாகும்.

அற்புதராஜா, அஜந்தகுமார் என்போரின் மறைவையடுத்து முரசில் சூடு சுவை சுவாரசியம் என்பன சற்றுக் குறைந்து போனதும் குறிப்பிடத்தக்கதே. அந்தச் சந்தர்ப்பத்தில் பலரது வாய்களிலும் "முரசும் இத்தோடு சரி" என்ற ஏக்க வாசகம் நிலவியமை பலரும் அறிந்ததே! ஆனால் முரசு அவ்வாறு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த வேளையில் படிப்படியாக பழையபடி மெருகேறி வந்து பத்திரிகை உலகில் இன்றும் முத்திரை பதித்து வருவது பாராட்டத்தக்கது! இதற்கு எந்த வாழ்த்து மொழியும் நிகராகாது!

முத்தான முரசே! நீ தாங்கி வரும் அத்தனையும் முத்தானவைகள் தான். இனி வரும் காலங்களிலும் இதனையும் விட மேலான தமிழ் பேசும் நெஞ்சங்களின் குரலாக முழங்க வேண்டும் என்று வாழ்த்துவதோடு அற்புதராஜா, அஜந்தகுமார் என்போரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

சரவணமுத்து கலாராணி-எருவில்.

முத்தான முரசுக்கு!



நீ சுமந்து வரும் ஒவ்வொரு பக்கங்களும் விலையுயர்ந்த முத்துக்களால் கோர்க்கப்பட்ட மாலைபோல அனைத்து அம்சங்களும் மிகவும் அருமையாகவுள்ளன.

நாங்களும் நாட்டில் நடக்கும் ஒவ்வொரு அம்சமும் உனது அங்கத்திலிருந்தே தெரிந்து கொள்கின்றோம். இப்படிப்பட்ட முரசு இன்று போல் என்றும் தழைத்தோங்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர் 05.

✉✉

உன்
தித்திக்கும் 'தேன் கிண்ணத்தி'ல்
திகட்டாத கவிரசம் பருகுகின்றோம்.
கவிதைப்போட்டியில் ரசிகர்களின்
கற்பனை வளம் காண்கின்றோம்.
'தகவல் பெட்டி'யில்-இத்
தரணியையே கண்டுகொள்கிறோம்.
'நில்-கவனி-முன்னேறு' சிகரம்
தொடவைக்கும் ஏணி.
'சிந்தியா பதில்கள்' சிந்திக்கவைக்கும்
புதிர்கள்.
'மன்னாதி மன்ன'னுக்கு வைர மகுடம்
அணிவிக்கலாம்.
எம்
இதயத்தோடு இணைந்துவிட்ட
இனிப்பான முரசே!
வியாழனின் உன் வரவு-எமக்கு
பல்சுவை நிறைந்த உணவு;
இணையவேண்டிய உறவு.
இனிய உன் சேவைகள்
வளர வாழ்த்துக்கள்.

சஜா, சஜிதா-மருதமுனை 04.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# கடற்படை, விமானப்படை விஸ்தரிப்பு

## இந்திய -பாகிஸ்தான் ஒத்துழைப்புக்கு முஸ்தீபு!

**இலங்கை அரசப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடரும் மோதல்களினால் இலங்கை இராணுவம் பல இழப்புகளைச் சந்திக்க நேர்கிறது. இந்தக்காலகட்டத்தில் இலங்கைக் கடற்படையை விஸ்தரித்து நவீனமயப்படுத்த இந்தியக் கடற்படையின் உதவியை இலங்கை நாடியிருக்கிறது. இதேபோல் விமானப்படையின் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பாகிஸ்தானுடைய ஒத்துழைப்பைப் பெறலாமா? என்பதை ஆராய்ந்தறிய விமானப்படைத்தளபதி பாகிஸ்தான் சென்றிருப்பதாக தகவல் ஒன்று கூறுகிறது.**

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. தரையில் மட்டுமல்லாமல் கடற்போரிலும் கடற்புலிகளின் நடமாட்டம் அதிகரித்து, இலங்கைக் கடற்படைக் கப்பல்களுக்கும் ரோந்துப் படகுகளுக்கும் சேதங்கள் விளைவிக்கப்படுகின்றன.

புலிப்படையினர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் பயன்படுத்த ஆரம்பித்திருப்பதனால், அரசுக்குச் சொந்தமான விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் வானில் பறந்து புலிகளின் நிலைகள் மீது குண்டுகளை வீசித் தாக்குவதும் கடினமாகி வருகிறது.

பிறநாடுகளிலிருந்து புலிகளுக்கு பெருமளவிலான ஆயுதங்கள் வந்து குவிந்த வண்ணமேயுள்ளன. இதனைத் தடுப்பதற்கும் இலங்கை கடற்படையினால் முடியாமல் இருப்பது கண்கூடு. இதேவேளை நாட்டின் கிழக்குக் கடலில் சஞ்சரிக்கும் பிறநாட்டுக் கப்பல்களுக்கும் புலிகளின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாகவே விளங்குகின்றன. இந்த நிலையில் அயல் நாடான இந்தியாவின் துணையை இலங்கை அரசு நாடி இருக்கிறது.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த கடற்படைத் தளபதி அட்மிரல் சிசில் த சேரா, அந்நாட்டின் கடற்படை உயரதிகாரிகளைச் சந்தித்து இந்து சமுத்திரத்தில் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இலங்கைக்கு உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இலங்கை கடற்படைக்கு இந்தியாவிடமிருந்து விமானத் தாங்கிக் கப்பலை இலங்கை அரசு கொள்வனவு செய்திருக்கிறது.

இந்தக் கப்பலை இயக்குவதற்கும் இக் கப்பலின் தளத்தில் தரித்து வைக்கப்பட்டிருக்கும் விமானங்களைச் செலுத்தி எதிரிகளைத் தாக்குவதற்கும் இலங்கைக் கடற்படையினருக்குப் பயிற்சியளிக்கவும் இந்திய கடற்படையைச் சேர்ந்த பயிற்றுநர்களும் அதிகாரிகளும் வரப்போவதாகவும், கூறப்படுகிறது. இதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடற்பிராந்தியத்தில் புலிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த இந்தியக் கடற்படையினருடன் இலங்கைக் கடற்படையினரும் இணைந்து கடலில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இலங்கையில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி பாகிஸ்தானுக்குச் சென்று அந்நாட்டு விமானப்படை உயரதிகாரிகளைக் கண்டு கலந்துரையாடி விட்டு வந்திருப்பதாகவும் மற்றுமொரு செய்தி கூறுகிறது. இலங்கை விமானப்படையின் நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் விமானப்படையின் ஒத்துழைப்புகளைப் பெறுவதற்கும் முயற்சிகள் நடைபெற்றிருப்பதாகவும் மற்றுமொரு செய்தி கூறுகிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் பனிப்போருடன் மட்டும் நின்றுவிடாமல் அடிக்கடி நேரிடையான மோதல்களிலும் ஈடுபட்டுவருகின்றன.

இப்படியிருக்கும் போது இருநாடுகளுக்கும் பொதுவாக நடுநிலை வகிக்கும் நாடான இலங்கை அவ்விரு நாடுகளுடனும் விடுதலைப் புலிகளுக்கெதிரான மோதல்களில் உதவிபுரியுமாறு கோரி இருப்பது அவதானிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. ■

## சோ.சிவபாதசுந்தரம் மறைவு!

'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' என்று கனவுகண்ட மகாகவி பாரதியாரின் அந்தக் கனவை நனவாக்கிய பெருமைக்குரியவர் எமது நாட்டைச் சேர்ந்த சோ.சிவபாதசுந்தரம் அவர்கள். இன்று உலகமெலாம் தமிழோசையைப் பரப்பும் பி.பி.ஸி (B.B.C.) தமிழோசையை ஜனரஞ்சகமாக ஆக்கிவைத்த பெருமை சிவபாதசுந்தரம் அவர்களையே சாரும். அன்னார் தமது எண்பதாவது வயதில் இலண்டன் மாநகரில் காலமானார்.

இலங்கை வானொலியில் தமிழ்ச் சேவைக்கு புத்துயிரூட்டி தனிப்பெருமையுடன் திகழ வைத்தவர் அவர். தலைசிறந்த எழுத்தாளரான சோ.சி. அவர்கள் 'ஒலிபரப்புக் கலை' என்ற நூலை எழுதி இந்திய அரசின் விருதினைப் பெற்றவர். இலங்கை வானொலியில் அளப்பரிய பணிபுரிந்த அவருக்குரிய உயர் பதவி வழங்கப்படாமல் பாரபட்சம் காட்டப்பட்டமையினால், 1952ம் ஆண்டு பதவியை விட்டு விலகி தமிழ்நாடு சென்று தனிப்பட்ட அமைப்பை நிறுவி வாழ்ந்துவந்தார். அங்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று சில ஆண்டுகள் பணிபுரிந்தார்.

பல தமிழ் நூல்களையும், எழுதி வெளியிட்டார். இலண்டன் மாநகரிலுள்ள 'ஆகர் ராங்க்' நிறுவனம் தயாரித்து வெளியிட்ட 'புளூ லகூன்' (BLUE LAGOON) என்ற ஆங்கிலப் படத்தை 'நீலக்கடல்' என்று தமிழில் மொழிமாற்றம் செய்தார் சிவபாதசுந்தரம் அவர்கள். திரு.சிவபாதசுந்தரம் தமிழ் தட்டச்சு இயந்திரத்தின் எழுத்து வடிவங்களையும் அமைத்துக் கொடுத்தவர்.

யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து வெளியான 'ஈழகேசரி' வார இதழில் ஆசிரியராக பல்லாண்டுகள் பணிபுரிந்த அவர், செய்த இலக்கியப் பணி ஒப்பற்றதொன்றாகும்.

அன்னாருடைய மறைவு நிரப்பப்பட முடியாத ஒரு பேரிழப்பை உண்டாக்கி இருக்கிறது என்றால் மிகையாகாது. ■

## அமைதிக்கான தூதுவரைக் கைது செய்யக் கோருவோர் மீது கவனம் தேவை!

இலங்கையை ஏறத்தாழ 'இரு தசாப்தங்களாக சீரழித்துவரும் இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வர இதுகால வரை உருப்படியான எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இதேவேளை எத்தகைய சுயநல நோக்கமும் இல்லாமல் சமாதானம் ஏற்படுத்துவதற்காக எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் இருந்து உதவிக்கரம் நீட்டி வந்த ஐரோப்பிய நாடான நோர்வேயின் ஒத்தாசைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கும்பல்கள் மேன்மேலும் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்கவே முனைகின்றன.

அரசாங்கத்துடன் முட்டி மோதிக் கொண்டு வரும் விடுதலைப்புலிகளின் குகைக்குள் துணிந்து புகுந்து புலிகள் இயக்கத் தலைவர் திரு.பிரபாகரனையே கண்டு சமாதானப் பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடுகளைச் செய்த நோர்வேயின் சமாதானத் தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் அவர்களை, அவர் மீண்டும் இங்கு வரும் போது கைது செய்ய வேண்டும் என்று இங்குள்ள பேரினவாதக் கட்சியொன்று கூக்குரலிட்டு வருகிறது.

எமது நாடான இலங்கை போதுமான பொருளாதார வசதிகளைக் கொண்ட நாடல்ல. இன்று வரை அந்நிய நாடுகளையே உதவிக்குக் கையேந்தி நிற்கிறது. முக்கியமாக ஐரோப்பிய நாடுகள் ஆண்டு தோறும் ஏராளமான நிதியை எமது நாட்டின் மேம்பாட்டுக்காக அள்ளிவழங்கி வருகின்றன. இந்த நாடுகளுள் நோர்வே நாடு தான் மிகக் கூடுதலான பணத்தையும் வேறு பல உதவிகளையும் வழங்கி வருகின்றது. இவற்றைக் கொஞ்சம் கருத்திற்கொள்ளாமல் அந்த நாட்டைத் தூஷிப்பது மேலும் அந்த நாட்டின் தேசியக் கொடியை தீ முட்டி எரிப்பதும், அந்த நாட்டிலிருந்து வந்த தூதுவரைக் கைதுசெய்ய வேண்டுமென்று கூக்குரலிடுவதும் எத்தகைய கீழ்த்தரமான நடவடிக்கைகள்-அநாகரிகச் செயல்கள் என்பதை ஏன் இவர்கள் உணரவில்லையென்பது விஷனத்தை தருகின்றது. இத்தகைய விசமத்தனமாக கூச்சல் போடுபவர்கள் நிச்சயமாக இந்த நாட்டில் மீண்டும் இனக்கலவரங்களை தோற்றுவிக்கத் தயங்கமாட்டார்கள் என்பது திண்ணம். ஆகவே இத்தகைய-அமைதிக்கு அச்சுறுத்தல் விடும் நபர்கள் மீது அரசாங்கம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு நோர்வே நாடு தான் முன்வந்த போதிலும், அந்நாட்டிற்கு இந்தப் பணியில் பின்னணியாக இன்று உலகில் அதிகளவு பொருளாதார பலம் பெற்ற ஐரோப்பிய ஒன்றியம் தீர்க்கிறதென்பதை கருத்திற்கொள்ள வேண்டும் அதுமட்டுமல்லாமல் எமது அயல்நாடான இந்தியாவும் நோர்வேயின் இந்தச் சமாதான நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருக்கிறது.

ஏற்கெனவே இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை சந்தித்து பேசிய பின்னர் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்தியா சென்று இந்தியத் தலைவர்களையும் சந்தித்து, இங்கு தலைவர்களை சந்தித்த போது இடம்பெற்ற கருத்து பரிமாற்றங்களையும் அவர்களுக்கு தெரிவித்துள்ளார் என்பதை இங்கு சுட்டிக் காட்டுகின்றோம் ■

## ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும் மகஜர்!

பண்டாரவளை 'பிந்துனுவெவ' புனர்வாழ்வு தடுப்பு முகாமில் நிகழ்ந்த படுகொலைகளை கண்டித்தும் இது தொடர்பான பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்த வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தும் திருகோணமலைத் தமிழ் பொதுமக்கள் பதினைந்தாயிரம் பேர் கையெழுத்திட்ட மகஜர் 12.11.2000 அன்று திருகோணமலை ஐ.நா. அகதிகள் உயர்ஸ்தானிகர் (U.N.H.C.R.) பணிமனையின் பிரதம அதிகாரி செல்வி. அலெக்ஸ்சாண்டரா மொரளியிடம், திருகோணமலையில் பிரபல கல்லூரி அதிபர்கள் வண. சகோதரி திரேஸ் ராணி, மெதடிஸ்த மகளிர் கல்லூரி அதிபர், செல்வி த.பொன்னம்பலம், குறளமுதம் அதிபர் கா.விநாயக சோதி திருகோணமலை மாவட்ட முன்னேற்ற சங்கத் தலைவர் திரு. கா.சிவபாலன் மற்றும் பலர் முன்னிலையில் கையளிக்கப்பட்டது.

ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கு என விலாசமிடப்பட்ட மேற்படி மகஜரை தாங்கள் தமது இராஜதந்திர தபால் மூலம் உடனடியாக ஐ.நா.செயலாளர் நாயகத்திற்கு கிடைக்கச் செய்வதாக செல்வி.அலெக்ஸ்சாண்டராமொரளி கருத்து தெரிவித்தார்.

## மூதூர் செ.ச.அலுவலகம் மீண்டும் இயக்கம்!

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மூதூர் அலுவலகம் 13ம் திகதி திங்கள் முதல் மீள் இயக்கம் பெற்றிருக்கிறது. கடந்த மாதம் 2ம் திகதி சிலரால் அலுவலகம் தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது. எனினும் மக்கள் பலரின் கோரிக்கைகளுக்கமைய மீண்டும் திறக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் அலுவலகம் இருந்த அந்த இடத்திலேயே தற்போதும் அலுவலகம் இயங்கி வருகிறது. செல்வி.சாலம் ஹவோட் பொறுப்பாளராக இன்று பணிகளை கவனித்து வருகின்றார். இவர் பொறுப்பில் தான் அலுவலகப் பணிகள் முன்னர் நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

வழமையான சேவைகளான, இடம் பெயர் மருத்துவச் சேவை சுகாதார நோய்த் தடுப்புச் சேவை காணாமற் போனோரைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், பிரிந்த உறவினர்களிடையே தொடர்பு ஏற்படுத்தல் போன்ற சகல சேவைகளும் இடம் பெறுமென திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் தி.புஷ்பராசா முரசுக்குத் தெரிவித்தார்.

## நிமலனுடன் சென்றவர் சிகிச்சையின் பின்னர் கைது

சுட்டுக் கொல்லப்பட்ட நிமலநாயகம் எம்.பியுடன் கூடச் சென்று காயப்பட்டவர் செ.லோகநாதன். துப்பாக்கிச் சூடு நிமலநாயகம் எம்.பி.க்குப் பட்டபோது அவருடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்த லோகநாதன் காலில் காயம்பட்டுக் கீழே விழுந்தார்.

பின்னர் அவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பொலிஸ் பாதுகாப்புடனேயே அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது.

கடந்த 13ம் திகதி குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய அவரை நாசகாரத் தடுப்புப் பொலிஸார் மேல் விசாரணைக்காகத் தம்முடன் அழைத்துச் சென்றனர்.

நிமலநாயகம் எம்.பி. சுடப்பட்ட சம்பவத்தை நேரடியாகக் கண்ட சாட்சி இவர் என்பதாலும் சுடப்பட்ட அன்றைய தினம் அவர்கள் புலிகளைச் சந்தித்து விட்டு வந்தனர் என்பதாலுமே அவர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே நிமலநாயகம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தேர்தலுக்குப் பின் இடம்பெறும் 18வது கடையடைப்புச் சம்பவம் இதுவாகும். 7வது தடவையாக ஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்படிப்பட்ட சம்பவங்களுக்குப் புறம்பாக முக்கியத்துவமற்ற ஹர்தால்களும் நடத்தப்படுகின்றன. ஆனால் அவை யாரால் ஒழுங்கு செய்யப் படுகின்றன என்பது புரியாத புதிராக உள்ளது என்று பொது மக்கள் கூறுகிறார்கள்.

## வீட்டை முற்றுகையிட்டுத் தாக்குதல்! இருவர் பலி-ஆயுதங்கள் மீட்பு!

தகவல் ஒன்று கிடைத்ததை அடுத்து சம்பந்தப்பட்ட வீடொன்றை முற்றுகையிட்ட விஷேட அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தியதில் இருவர் கொல்லப்பட்டனர்.

அவ்வீட்டில் இரண்டு சடலங்கள், ரீ-56 ரகத்துப்பாக்கி-1 டொங்கான் என்பன மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கொல்லப்பட்டவரில் ஒருவர் திருமால்-பரமேஸ்வரன் (23) என்று அடையாளம் காணப்பட்டது. மற்றையவரின் சடலம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவினர் மூலமாக புலிகளிடம் ஒப்படைக்க அனுப்பப்பட்டது.

இச்சம்பவம் அக்கரைப்பற்று-திருக்கோவில் சின்னத்தோட்டம் என்ற இடத்தில் 11ம் திகதி இடம் பெற்றது.

## மலையகத் தமிழர்களுக்கு சேவைசெய்ய சிங்கள சமூர்த்தி ஊழியர்கள்?

அந்தந்த கிராம, பிரதேச அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டே சமூர்த்தித் திட்டம் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் அந்தந்தப் பிரதேச வாசிகளுக்கே சமூர்த்தி ஊக்குவிப்பாளர் நியமனங்களை வழங்க வேண்டும் என்பதும் கருத்தில் கொள்ளப்பட்டது.

ஆயினும் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு மலையகத் தமிழ்ப்பகுதிகளில் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்களுக்கே சமீப சில நாட்களுக்கு முன்னர் சமூர்த்தி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதிகளில் நியமனம் வழங்கப்பட்டுள்ள சிங்கள சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு மொழிபுரியாத நிலை ஏற்பட்டுள்ளது, ஒருபுறமிருக்க; அவர்கள் வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் தோட்டப் புற மக்களின் உண்மையான நிலை பற்றி அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

சமூர்த்தி பயன்பட வேண்டிய பல குடும்பங்கள் நிர்க்கதியான நிலையிலுள்ளன. முழுக்க முழுக்க அரசியல் நியமனங்களாக சமூர்த்தி வேலைவாய்ப்புக்கள் உள்ளதால், உண்மையான வறிய குடும்பங்கள் மலையகப் பகுதிகளில் பாரபட்சமாகவே உள்ளதாக தன்னை இனம் காட்டிக் கொள்ளவிரும்பாத சமூர்த்தி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ■

## சமூர்த்தி ஊழியர்களுக்கு சம்பளம் கொடுபடவில்லை?

தேர்தல் பிரசார காலத்தின் போது சில சமூர்த்திவுத் (சுபீட்சத்திட்ட) ஊழியர்கள் அரசினால் நியமிக்கப்பட்டார்கள். கடந்த ஒகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

கடந்த 4 மாதங்களாக அவர்கள் பணிபுரிகின்ற போதும், இன்னமும் அவர்களுக்கான சம்பளங்கள் வழங்கப்படவில்லை என்று குறை கூறப்படுகிறது.

இதனிடையே இடைத் தறுவாயில் நியமிக்கப்பட்ட இந்த சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களை கிராம சேவகர்களாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கான அனுமதியை பொது நிர்வாக அமைச்சு வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எதுவித போட்டிப் பரீட்சைகளுமின்றி வெறும் அரசியல் நோக்கங்களுக்காக இந்த நியமனங்களை வழங்கத் தீர்மானித்திருப்பது குறித்து ஏற்கெனவே சமூர்த்தி நியமனம் பெற்றிருப்போரும் தற்போதைய கிராம சேவகர்களும் அதிருப்தி தெரிவிக்கிறார்கள்.

## மின்மாற்றி தகர்ப்பு!

கந்தளாய்-முள்ளிப் பொத்தானைக்கு அருகே இருந்த மின்மாற்றியொன்று கடந்த 11ம் திகதி காலை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது.

கிழக்கில் நீண்ட நாட்களுக்குப் பின் மீண்டும் மின்மாற்றித் தகர்ப்பைப் புலிகள் செய்துள்ளனர். ■

## நிமலநாயகம் படுகொலை! பின்னணியில் இருந்தவர் யார்?

தேர்தலில் பெற்ற வெற்றியை கொண்டாடும் முகமாக கட்டப்பட்டிருந்த கொடிகள் பறந்து கொண்டிருக்கின்ற வேளையிலேயே, துயரத்தைப் பறைசாற்றும் கறுப்பு மற்றும் வெள்ளைக் கொடிகளையும் கட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மட்டக்களப்புப் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் கடந்த தேர்தலில் பங்கேற்று அமோக வெற்றியீட்டிய நிமலநாயகம் சௌந்தரநாயகம் (நிமலன் மாஸ்டர்) சற்றும் எதிர்பாராத வகையில் நவம்பர் 7ம் திகதியன்று மாலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியிலுள்ள கிரான் என்ற இடத்தில் வைத்தே நிமலன் எம்.பியும் அவருடன் மோட்டார் சைக்கிளில் வந்த லோகநாதன் என்பவரும் சுடப்பட்டனர். நிமலன் அந்த இடத்திலேயே மரணமானார். லோகநாதனுக்கு காலில் காயம் பட்டது.

குறிப்பிட்ட இடத்துக்கு அவ்விருவரும் வந்து சேர்வதற்கு முன்னரே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அவர்களுக்குக் கேட்டிருக்கிறது. லோகநாதன் இச்சத்தம் கேட்டதும் நிமலநாயகத்தை எச்சரித்துள்ளார். ஆனால் அவரோ "பயப்படவேண்டாம். தைரியமாக இரு," என்று கூறிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தனர். சில நொடிப் பொழுதுகளில் சரமாரியான துப்பாக்கி வேட்டுகளுக்கு உட்பட்டு அவர் துடிதுடித்துச் செத்தார்.

(தொடர்ச்சி... 16ம் பக்கம்)

## மனிதநேய அமைப்புகள் ஒன்றியம்

# அனுப்பிய மகஜர்

(யாழ் நிருபர்)

நவீனரக ஆயுத்தளபாடங்களால் பேரழிவே ஏற்பட்டதே தவிர இராணுவச் சமநிலை மாற்றம் அடைய முடியவில்லை. எனவே இதற்கு ஒரேவழி நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே. இவ்வாறு யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் அண்மையில் நடத்திய விசேட கலந்துரையாடலின் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருக்கும் அனுப்பப்பட்ட மகஜருடன் மேற்கண்ட மகஜரின் பிரதிகளும் இணைக்கப்பட்டன.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தாங்களும் தங்களது அரசும் இப்பிரச்சனையை அதிமுக்கியமான விடயமாகக் கொண்டு சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு அயராது உழைப்பீர்கள் என நம்புகிறோம். சமாதானத்திற்கான போர் என்பது தக்கவைக்க முடியாததோர் கொள்கையாகும். புலிகள் இயக்கத்தை தமிழ்மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தி இராணுவரீதியில் அதை நசித்து விடுவதே முக்கிய குறிக்கோளாகும். எனினும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு புலிகள் ஒரு முக்கிய பகுதியாக உள்ளடக்காது விட்டால் சமாதானம் தொடர்ந்தும் நழுவிக் கெண்டே இருக்கும். ஏனெனில் புலிகள் இயக்கத்தை நிர்மூலமாக்குவதற்கு 1970ம் ஆண்டின் பிற்பகுதிகளில் இருந்து பலதடவைகள் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. நவீன ஆயுதங்களின் மூலம் நாசகாரச் சக்தி அதிகரிக்கின்றதே தவிர ஒப்பீட்டு ரீதியில் இராணுவப் பலச் சமன்பாட்டில் மாற்றம் ஏற்படுவதாகவில்லை.

## முஸ்லிம்களின் தொப்பி

# சந்தேகத்திற்கிடமான முறையில் வாங்கப்பட்ட விவகாரம்?

கொழும்பு நகரிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் தொப்பி அதிகளவில் வாங்கிச் செல்லப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பாக பேசப்படுகிறது.

இவ்வளவு அதிகமான தொப்பிகள், குறித்த சில நபர்களால் கொழும்பின் பல பகுதிகளில் வாங்கப்பட்டிருப்பது ஏன் என்ற சந்தேகம் பரவலாக எழுந்துள்ளது.

இத்தறுவாயில் இனங்களுக்கிடையில் மோதல்களை ஏற்படுத்தி விட தீவிரவாத சக்திகள் முயலக் கூடும்.

பண்டாரவளை பிந்துனுவெவ சம்பவம் இன்னும் கொடுமையாக நினைவில் நிற்கிறது. இதற்கிடையே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களின் வேடத்தில் இனக் கலகத்தை ஏற்படுத்தி விட முடியும். இதுகுறித்து சகல இன மக்களும் மிகவும் நிதானமாகவும் விழிப்புடனும் செயற்படவேண்டும் என்று சமூக நல விரும்பிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இத்தகைய முஸ்லிம்களின் தொப்பிகளைக் கொள்வனவு செய்தவர்கள் யார் என்பதும் என்னநோக்கத்திற்காக பெருமளவில் வாங்கினார்கள் என்பதும் மர்மமாகவே இருக்கிறது. ஆனால் நாசகாரிகளின் சதிகளிலிருந்து மிகுந்த விழிப்பாகவிருப்பது கட்டாயமாகிறது.

## தமிழ்ப் பயணிகள் தனியாகப் பதியப்படும்

# பாரபட்சம் நீக்கப் பட வேண்டும்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை-கொழும்பு போக்குவரத்து மார்க்கத்தில் 3 இடங்களில் தமிழ்ப் பயணிகள் தனித்துப் பதியப்படும் பாரபட்ச நடைமுறையை நிறுத்த நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் இரா.மனோகரனிடம் தமிழ்ப் பயணிகள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

மகா ஓயா-கண்டி ஊடான மார்க்கத்தின் போது உதயபுர பியங்கல, மகா ஓயா, பதியத்தலாவ ஆகிய 04 இடங்களின் பெயர், விலாசம், போகுமிடம், அடையாள அட்டை இல. உட்பட பல விபரங்கள் பதியப்படுகின்றன.

இவற்றில் பியங்கல, மகாஓயா, பதியத்தலாவ ஆகிய மூன்று சோதனைச் சாவடிகளில் தமிழ்ப் பிரயாணிகளை மாத்திரம் வேறாகப் பிரித்து தனியான பதிவுப் புத்தகங்களில் பதியப் படுகின்றன.

இது தவிர மகாஓயாவில் தமிழ்ப் பிரயாணி இரு பதிவுப் புத்தங்களில் பதிய வேண்டும். ஒன்று பொதுவான புத்தகம், மற்றது தமிழர்களுக்கான விஷேட புத்தகம்.

ஏனைய இனத்தவர் முன்னிலையில் அவமானப்படுத்தும் ஒரு செயலாக இதனைக் கருதுவதால், உடனடியாக தனிமைப் படுத்தும் நடைமுறை நீக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது.


SPOKEN ENGLISH

By K.M.N. NALRAVI

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வகுப்பில் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)



COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

D.S. COMPUTER STUDIES
Internet & E-mail dsocm@mail.visual.com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.



மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY
50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349



சித்தர் மாந்திரீகம்

— கவலை வேண்டாம் —

சோதிட, வைத்திய பரிகார, மாந்திரீகத் துறையில் ஏழு தலைமுறையின் நம்பகத்தன்மை இன்றும் வெற்றிகரமாக "கலாநிதி-சக்தி சரவணா"வினால் பேணப்படுவதால் உங்கள் பிரச்சனை எதுவாயினும் உடனடியாய் வெற்றிகரமான தீர்வுபெற ஒருதடவை தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்-தொழில் விருத்தி, திருமண-பிரயாணத் தடங்கல்கள் , பாலியல் குறைபாடுகள்; அந்தரங்கமான விடயங்களை தீர்வு காணுதல் என்பவற்றோடு; நினைத்த காரியம், ஜாதக பலன், எண் சோதிடம் முதலான சோதிட ஆலோசனை துல்லியமான முறையில் பெறலாம். வெளிநாட்டு அன்பர்கள் துரித சேவை மூலம் பலன் பெறலாம். அந்தரங்கம் பாதுகாக்கப்படும். நேரில்:- காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தொடர்பு:
"DR.SHAKTHY SARAVANA"
48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA.
T.P 723646

வியாழன் விடுமுறை.



தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேகை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலுசோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது ஃபக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"



மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் நவம்பர் 20 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கல்முனையில் டிசம்பர் 02, 03 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் நவம்பர் 11, 12 திகதிகள்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு :
RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



ஹோமியோபதி சிகிச்சை

தமிழ் நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சை நிபுணரும் தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான,

Dr. R. தியாகராஜன் D.H.M.S,AMRSH (LON) நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக்குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.

காலம் : 23.11.2000-28.11.2000
இடம் : ஹோட்டல் கிறீன் லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : 585592, 581986.
HOTLINE : 077-602513.


## மரண அறிவித்தல்



திரவியம் விஜிதரன்

பிறப்பு
1968.11.05
இறப்பு
2000.10.27

நாவற்குழியை பிறப்பிடமாகவும், முடமாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் விஜிதரன் 27.10.2000 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். அன்னார் காலஞ் சென்ற திரவியம் தவமணியின் அன்பு மகனும், தம்புவின் அன்புப் பேரனும், முரளிதரன் (கொழும்பு), பாபுதரன் (லண்டன்), சுபத்திரா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு.திருமதி.தெய்வேந்திரம், திரு.திருமதி.ராசேந்திரம் ஆகியோரின் மருமகனும், திரு.திருமதி.செல்லத்தம்பி, திரு.திருமதி.யோகநாதன், திரு.திருமதி.ராசாவின் பெறாமகனும், திருமதி தயாளினியின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 1.11.2000 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மரணச் சடங்கில் கலந்து கொண்டு எங்களுக்கு உதவி செய்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம்.

தகவல்
திருமதி. தவமணி (தாய்), சகோதரர்கள்.யாழ்ப்பாணம்.


மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.
Tel-466620, 466820 தேவைகளுக்கு:-

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



உலகப் புகழ்பெற்ற

எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

SINGHA HOLDINGS (PVT) LTD
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நோர்வே வருகையின் பின்னணியும் பிரபாகரனின் பேச்சுவார்த்தையும்

மீண்டும் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் பற்றிய முஸ்தீபுகள் ஆரம்பித்துள்ளன. பொதுத் தேர்தல் முடிந்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அமைத்த கையோடு இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகள் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ள நோர்வே நாட்டினால் உற்சாகத்துடனும் பரபரப்பூட்டும் வகையிலும் முன்னெடுக்கப்பட்டது. அதன் உச்சக்கட்ட நிகழ்வாக நோர்வே தூதுக்குழுவொன்று முல்லைத்தீவு சென்று, புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையே நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் யாதெனில் கடந்த 5 வருடங்களாக வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவரையுமே சந்திக்காதிருந்த புலிகள் தலைவர் பிரபாகரன் இம்முறை நோர்வே பிரதிநிதிகளைச் சந்தித்திருப்பதுதான். வழமையாக பிரபாகரன் தனது பிரதிநிதிகளைத்தான் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள அனுப்புவார். அதி முக்கியத்துவமான கட்டங்களில் மட்டுமே நேரில் கலந்துகொள்ளுவார். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1994ல் பதவிக்கு வந்தபோது, புலிகளோடு நடத்திய பேச்சு வார்த்தைகளிலும் பிரபாகரன் நேரடியாகக் கலந்து கொண்டிருக்கவில்லை. அதற்கு முன்னர் முன்னாள் ஐ.தே.க. ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளிலும் அவர் நேரடியாகக் கலந்து கொண்டிருக்கவில்லை. இந்நிலையில்தான் இப்போது நோர்வே பிரதிநிதிகளை நேரடியாக அவர் சந்தித்தது முக்கியத்துவம் பெறுகிறது.

நோர்வே பிரதிநிதிகள் பிரபாகரனைச் சந்தித்த ஏற்பாடானது இலங்கை அரசாங்கத்துக்கு அசௌகரியமான ஒரு வேளையில் நடந்துள்ளது. அதாவது இங்கு பொதுத் தேர்தலொன்று நடந்து முடிந்து அரசாங்கம் அமைப்பதற்கு எந்தத் தனிக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத நிலையில் கூட்டரசாங்கம் அமைக்கும் முஸ்தீபுகளில் ஆளும் கட்சி மும்முரமாக முனைந்திருந்த வேளையில் நிகழ்ந்துள்ளது. ஒருவாறு இரு சிறுபான்மை இனக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு கட்சிக்குள் இருந்த நிர்ப்பந்தங்களைச் சமாளிப்பதற்காக பெருந்தொகையான அமைச்சுக்களை உருவாக்கிப் பகிர்ந்தளித்து, இப்போதுதான் அரசாங்கமொன்றை உருவாக்கிய சூட்டோடு நிகழ்ந்துள்ளது.

இந் நிலையில் அரசாங்கம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டிருக்கவில்லை. எனவே நோர்வே பிரதிநிதிகளை வரும்படியான அழைப்பை இலங்கை அரசாங்கம் விடுத்திருக்க வாய்ப்பில்லை. ஆதலால் புலிகளின் அழைப்பை ஏற்றே அவர்கள் புலிகள் தலைவரைச் சந்திக்க வந்திருக்க வேண்டும். இவ் வருகைக்கு இலங்கை அரச தரப்பு வேண்டாவெறுப்பாகத் தன்னும் உடன்படவேண்டி இருந்திருக்க வேண்டும்.

புலிகள் நோர்வேயை சந்திப்புக்கு அழைத்திருப்பார்களானால் அது மிக முக்கியமான இராஜதந்திர நகர்வொன்றுக்குப் புலிகள் தயாராகி வருகிறார்கள் என்றே பொருள். ஏனெனில், இத் தேர்தல் நிகழ்ந்திருக்கும் தருணத்தில் புலிகளைத் திருப்தி செய்யக்கூடிய ஒரு அரசியல் தீர்வினை வழங்கக்கூடிய நிலைமையில் அரசாங்கம் இல்லையென்பது புலிகளுக்கு நன்கு தெரியும். அரசாங்கத்துக்கு தான் கடந்த பாராளுமன்றத்தின் இறுதித் தருணத்தில் கொண்டுவந்த தீர்வுத் திட்டத்தைக்கூட தற்போதைய நிலையில் நிறைவேற்ற முடியுமென்ற நம்பிக்கை இல்லை. தனது அரசாங்கத்தை நிலைநிறுத்துவதற்கே நான்கைந்து மேலதிக வாக்குகளைத்தான் சிறுபான்மைக் கட்சிகளின் தயவுடன் கொண்டிருக்கும் நிலையில் அரசியலமைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளை எண்ணிப்பார்க்கும் நிலையிலும், அரசாங்கம் இல்லை. அப்படியிருந்தும் அரசாங்கத்துடன் பேசுவதற்கான ஏற்பாட்டை புலிகள் நாடுவது எவ்வகையில் பயனுள்ளதாக அமையும் என்பதுதான் இங்கே கேள்வியாக எழுந்திருக்கிறது.

ஆனால் புலிகளைப் பொறுத்தவரையில் இது மிகச் சாதகமான தருணம். ஏனெனில் இதுவரை அரசாங்கம் புலிகள்தான் சமாதானத்துக்கு முன்வராதிருக்கிறார்களென்றும், அரசாங்கம் அரசியல் தீர்வொன்றை வழங்கத் தயாராக இருக்கின்றதென்றும் பிரசாரம் செய்து வந்தது.

ஆனால் இப்போது இது புலிகளின் தருணமாகிவிட்டது. அதாவது புலிகள் பேசத் தயாரென்றால், அரசாங்கம் என்ன தீர்வைத் தரப்போகிறது என்று திரும்பக் கேட்கின்ற தருணம். அதைத்தான் புலிகள் தவறவிடாமல், பயன்படுத்திக் கொள்ள விழைந்துள்ளார்கள்.

அதாவது இப்போது புலிகள் பேச முன்வந்தாலும் அரசாங்கத்தால் புலிகளைத் திருப்தி செய்யக்கூடிய தீர்வென எதையும் முன்வைக்க முடியாத நிலை. ஏனெனில் அரசியலமைப்பு மாற்றங்கள் எதையும் எதிர்க்கட்சியின் ஆதரவின்றி அதனால் தனித்து செய்ய முடியாத சூழ்நிலை.

கடந்த பாராளுமன்ற இறுதிக் கட்டத்தில் அரசாங்கம் கொண்டுவந்த தீர்வுத் திட்ட ஆலோசனைகளைக்கூட தமிழ்க்கட்சிகளில் ஒருபகுதியினர் எதிர்த்தும், இன்னொருபகுதியினர் பல திருத்தங்கள் செய்யும் பட்சத்தில் அரைமனதுடனேயே ஆதரிக்கும் நிலையிலும் இருந்தனர். அப்படிப்பட்ட தீர்வுத் திட்டத்தைக் கூட எதிர்க்கட்சி ஏற்க மறுத்து விட்டது. பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவித்து, ஆர்ப்பாட்டங்களிலும், ஏன் சாகும்வரை உண்ணாவிரதத்தில் கூட குதித்தன.

ஆனால் இன்று அரசாங்கத்தால் அந்தத் தீர்வைக்கூட முன்வைக்க முடியாத நிலை. புலிகளோ, அதற்குமுன் சந்திரிகா முதன் முதலில் முன்வைத்த கூட்டணியுட்பட ஏனைய தமிழ்க் கட்சிகளாலும் வரவேற்கப்பட்ட 1995 தீர்வு ஆலோசனையைக் கூட நிராகரித்திருந்தார்கள். அப்படிப்பட்டவர்களால், அரசாங்கத்திடம் இன்று வழங்கக்கூடிய என்ன தீர்வு உண்டென நம்பிக் கொள்ள முடியும்?

ஆகவே, புலிகளின் இந்த முன்வருகை நம்பிக்கையினால் விழைந்ததல்ல, மாறாக நம்பிக்கையீனத்தால் விழைந்ததாகவே புலப்படுகிறது. அதாவது அரசாங்கத்தால் தம் அபிலாஷைகளை ஈடுகட்டக்கூடிய எந்தத் தீர்வையும் முன்வைக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுவதற்கான தருணமாக இதைக் கையாளவே இப்போது முனைந்துள்ளார்கள்.

இதன் மூலம் தமது தமிழீழத்துக்கான போராட்டத்துக்கு இன்னும் நியாயமுள்ளது என்று சர்வதேச சமூகத்துக்கு எடுத்தியம்பக் கூடியதாக அவர்களுக்கு இருக்கும்.

இதேவேளை புலிகளுக்கு இப் பேச்சுவார்த்தைகளுக்கான மேலும் சில அவசியங்களும் இருக்கவே செய்கிறது.

இந்தப் பொதுத்தேர்தல் பெறுபேறுகள் கொடுத்த இக்கட்டான நிலைமையால், தமிழ்த் தலைமையொன்றுடன் கூட்டுச்சேரவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. அதனால் ஈ.பி.டி.பி. கட்சிக்கு அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்கவேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டது. இதன் பிரகாரம் வடக்குக்கான புனர்வாழ்வு, புனர் நிர்மாணம் மற்றும் வடக்கு கிழக்குக்கான தமிழ் விவகாரம் ஆகிய அமைச்சுக்கள் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப்பட்டன.

இது சர்வதேசக் கண்ணோட்டத்தில் இலங்கை அரசாங்கத்தை ஒரு மூவினக் கூட்டரசாங்கமென்ற வகையில் நியாயமானதாகக் காட்டக்கூடுமென்பதுடன், தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களை உருவாக்கி, அதைத் தமிழ்த் தலைமையொன்றிடம் கையளித்திருப்பது பெருந்தன்மையானதாகவும், இதன் மூலம் பல நெருக்கடிகள் தீருமெனவும் நம்பச் செய்யும் வகையில் அமைந்துவிடும். இந்தப் பாராளுமன்றத்தின் சம்பிரதாயபூர்வ அங்குரார்ப்பண விழாவில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையில், இவ்வாறு தமிழ்த் தலைமையொன்றிடம் இவ்வமைச்சுக்களைக் கையளித்திருப்பதை தமது ஈடேற்றமாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தார். எனவே இத்தகைய ஒழுங்கமைப்பின் மீது பெருமளவு உலக அக்கறை திரும்புவதென்பது புலிகளின் போராட்டத்துக்கான நியாயாதிக்கத்தை மங்கச் செய்யும் ஒன்றாகிவிடும். அதனால் புலிகள் இத் தருணத்தில் ஒரு கவன ஈர்ப்பை உலகின் கண்களுக்கு மேற்கொள்ள வேண்டிய அவசியமும் உள்ளது. இந்த ஒழுங்கமைப்புகள் அர்த்தமற்றவையென்றும் தம்மீதுதான் சகலதும் தங்கியிருக்கிறதென்றும் புலப்படுத்த வேண்டிய அவசியமும் இங்கு அவர்களுக்கு எழுந்துள்ளது.

இதேவேளை வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நீண்டகால இடையறாத முயற்சியால் பிரித்தானியாவில் தற்போது புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிரான ஒருசில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புலிகளுக்கு நிதி திரட்டும் ஏற்பாடாகக் கருதி அங்கிருந்த தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் (TRO) வங்கிக் கணக்குகள் பிரித்தானிய அரசாங்கத்தால் முடக்கப்பட்டுள்ளன. இவ் ஆரம்ப முயற்சி மேலும் தீவிரமடைந்து புலிகளைத் தடைசெய்யும் அளவுக்குச் செல்லவுள்ளதாக அரச தரப்பு வட்டாரங்களில் தற்போது பேசப்பட்டு வருகிறது.

அவ்வாறான ஒரு நிலை தோன்றினால், புலிகளுக்கு ஒரு சர்வதேச ரீதியான பின்னடைவாக அது அமைந்துவிடும். அதுமட்டுமன்றி பிரித்தானியாவில் வாழும் புலம் பெயர்ந்த மக்களிடையேயும் ஈடுபாட்டைத் தளர்வடையச் செய்துவிடும். ஏனெனில் கனடா போலன்றி பிரித்தானியாவில் தஞ்சம் கோருவோருக்கு உடனடியாக அகதி அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. பலருக்கு அகதி ஸ்தானம் மறுக்கப்பட்டு வழக்கு நிகழ்ந்தபடியிருக்கிறது. அத்துடன் அங்கு வதிவிட உரிமையைப் பெற அகதியொருவருக்கு சுமார் 10 வருடங்கள்வரை காத்திருக்க வேண்டியிருக்கிறது. இந் நிலையில் புலிகளின் செயற்பாடுகள் பிரித்தானியாவில் வேண்டப்படாதவையாகக் கருதப்படுமானால், அவற்றுடன் இனங்காட்டுவது தமது புகலிட வாழ்வுக்கு ஆபத்தானதாக அமையக்கூடுமென்ற பீதி அங்குள்ள தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடும். அதனால் அத்தகையதொரு நிலமை ஏற்படாது தடுத்து நிறுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் புலிகள் கவனம் செலுத்த வேண்டியும் இருக்கிறது.

பேச்சுவார்த்தைக்கு முன்வருவதன் மூலம் புலிகள் தமிழ் மக்களின் நியாயாதிக்கமுள்ள பிரதிநிதிகளாகத் தம்மை உலகுக்கு உணர்த்த முடியும். அவ்வாறான நிலையில், நோர்வே போன்ற ஒரு ஐரோப்பிய நாடு இப் பேச்சுவார்த்தையை பிரதானமானதாகக் கருதி, மத்தியஸ்தப் பணியில் ஈடுபட்டிருக்கையில், புலிகளுடன் பிணக்குள்ளவர்களான இலங்கை அரசாங்கமே அவர்களுடன் பேச முன்வந்திருக்கும் நிலையில் பிரித்தானியா புலிகளைத் தடைசெய்வது என்பது அபத்தமான காரியமாகவே புலப்படும். எனவே அத்தகைய எண்ணமேதும் பிரித்தானியாவுக்கு இருந்தால், அதனைத் தடுக்கின்ற ஒரு நடவடிக்கையாகவும் இப் பேச்சுவார்த்தைகள் அமையும்.

அதுமட்டுமல்லாது, தனது உத்தேச அரசியல் சட்டச் சீர்திருத்தத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில் அரசாங்கம் இனப்பிரச்சனைத் தீர்வுக்காக என்ன செய்யப் போகிறது என்ற கேள்வியை எதிர்நோக்கியுள்ளது. இதற்கான வழியொன்றை ஜனாதிபதி சந்திரிகா தனது பாராளுமன்ற அங்குரார்ப்பண உரையில் குறிப்பிட்டிருந்தார். அதாவது மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபையை அமைக்கப் போவதாக அவர் கூறியிருந்தார்.

கடந்த 6 வருட ஆட்சிக் காலத்தில் ஏனைய அனைத்து சிங்கள மாகாண சபைகளும் இயங்கிய போதும், வடக்கு கிழக்கு மாகாணசபையை அமைக்க அவர் அனுமதிக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று அம் மாகாண சபை வட-கிழக்கு இணைந்த மாகாண சபையாக இருந்தது. அதைத் தொடர்ந்து இயக்கினால் இணைப்பு நிரந்தரமாகுவதை அங்கீகரிப்பதாகிவிடும். மற்றையது, அரசியல் போட்டி. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியால் வழங்கப்பட்ட ஒரு தீர்வையே தானும் நடைமுறைப் படுத்துவதா என்ற எண்ணம். அதனால் பிறிதொரு தீர்வை உருவாக்கி, தன்னால்தான் தீர்வு காணப்பட்டது என்ற பெயரை நிலைநாட்டுவதற்கான நப்பாசை. இறுதியில் கடந்த ஜனாதிபதிக் காலம் முழுவதும், கடந்த அரசாங்க ஆட்சிக் காலம் முழுவதும் முயன்றும் எதையுமே சாதிக்க இயலாத நிலையில், இப்போது எதையாவது பார்வைக்குப் புலப்படக்கூடியதாக செய்தாக வேண்டியவர்களாக ஆட்சியாளர்கள் உள்ளார்கள்.

எனவேதான் இவ்வளவு காலத்தின் பின்னராவது மீண்டும் வட-கிழக்கு மாகாண சபையை உருவாக்கும் வகையில் இடைக்கால நிர்வாக சபையை அமைக்கப் போவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இத்தகைய இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுமானால் அதுவும் புலிகளுக்கான ஓர் அரசியல் சவாலாக அமையும். அதாவது தமிழ் பேசும் மக்களுக்கான ஓர் அரசியல் நிர்வாகம் இயங்குவதாகவும் அதற்கான ஓர் அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவுமான தோற்றப்பாடு, சர்வதேச நாடுகளுக்கு, புலிகளின் வழிமுறையையும் மார்க்கங்களையும் விட வேறு மார்க்கங்களும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு உள்ளனவென எடுத்தியம்புவதாகிவிடும்.

எனவே பேச்சுவார்த்தைக்கு செல்வதென்பது இத்தகைய முனைப்புகளை அரசாங்கம் மேற்கொள்ளுவதனையும் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தப் பயன்படும்.

இதேவேளை புலிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய நோர்வே தூதுக்குழு அது குறித்து நம்பிக்கை வாய்ந்த கருத்துக்களைக் கூறியிருந்தது. தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தை குறித்து ஆர்வமாக உள்ளாரெனவும், நிபந்தனைகள் எதுவும் விதிக்கவில்லையெனவும் கூறியிருந்தனர். அத்துடன் தாம் அவருக்கு சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடுகளைத் தெரிவித்திருந்ததாகவும் கூறினார். அந்நிலைப்பாடுகளானது, பிரிவினையல்லாத, ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டும். தமிழ் பேசும் மக்களின் உச்ச அளவு அபிலாஷைகளை ஈட்டுவதாக இத் தீர்வு அமைய வேண்டும். ஆகிய இரண்டு விதிகளுக்கு உள்ளடங்கியதாகவே இப் பேச்சுவார்த்தை நிகழ வேண்டுமென தாம் பிரபாகரனுக்குத் தெரிவித்ததாக அவர்கள் கூறினர்.

ஆனால் இவ் விதிகளை புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்றுக்கொண்டாரா என்பது பற்றி அவர்கள் எதுவும் கூறவில்லை. ஏனெனில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வைக் காணுவது என்பதற்கு புலிகள் உடன்படுவதானது 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்' என்ற கோஷத்துக்கு முரணானது. அத்தோடு இதுவரை புலிகள் எந்தவொரு மாற்றுத் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காததற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ள அவர்களின் நிலைப்பாட்டையும் மாற்றுவதாகும்.

அதாவது, புலிகளைப் பொறுத்த வரையில் தமிழீழமொன்றே தமிழ் மக்களின் இன்னல்களுக்கான ஒரே தீர்வு. அதற்கு மாற்றான வேறொரு தீர்வை அவர்கள் முன்வைக்க மாட்டார்கள். அப்படி மாற்றுத் தீர்வு ஒன்றால் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென அரசாங்கம் கூறுமெனில், அத்தகைய மாற்றுத் தீர்வை அரசாங்கமே முன்வைக்க வேண்டும். அது ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வா என புலிகள் பரிசீலிக்கத் தயார். இதுவே புலிகளின் நிலைப்பாடாக இருந்து வருகிறது. தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டு அதைப் புலிகள் பரிசீலித்து ஏற்றுக் கொள்ள முன்னர் ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வுகாண புலிகள் இணங்குவதென்பது அவர்களின் நிலைப்பாட்டுக்கு மாறானது.

எனவே நோர்வே தெரிவித்த விதிகளுக்கு புலிகள் இணங்கினார்களா? என்பது பற்றி இத் தூதுக்குழுவினர் தெளிவான கருதுக்கள் எதையும் கூறவில்லை. அதனால் இவ் விதிகளின் பிரகாரம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது என்பதைச் சட்டை செய்யாமல் பேச்சுவார்த்தைகளை நடத்திச் செல்லவே புலிகள் விரும்புவார். ஆனால் இவ்விதிகளை கட்டாயமான முன்நிபந்தனைகளாக நோர்வே வலியுறுத்தி நிற்குமானால் இப் பேச்சுவார்த்தை தடங்கலுறும்.

இதேவேளை இப் பேச்சுவார்த்தை முயற்சி குறித்து பாராளுமன்ற அங்குரார்ப்பண உரையில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்களும் இவை வெற்றி பெறுமா என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. அவ்வுரையை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு 'புலிகளுடன் அரசாங்கம் பேசத் தயார்' என்று பிரபல்யப் படுத்திய பத்திரிகைத் தலைப்புக்களுக்கு மாறாக அவ்வுரையில் விடுக்கப்பட்ட செய்தி என்ன என்பதை ஆராய்ந்தால் இது புரியும்.

நோர்வே தூதுக்குழுவினர் சில நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளதாகவும் அந் நிபந்தனைகள் என்னவெனத் தமக்குத் தெளிவுபடுத்தப்பட்டு அவை பற்றி ஆராய்ந்த பின்னரே பேச்சுவார்த்தை பற்றி முடிவெடுக்க முடியுமெனவும் அவரது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இப்பேச்சுவார்த்தைகளை எந்தவித நம்பிக்கையோடும் அவர் பார்க்கவில்லையென்பது, "15 வருடகாலமாக பல்வேறு அரசாங்கங்களை ஏமாற்றிய விதத்தில் இவர்கள் (புலிகள்) மீண்டும் என்னை ஏமாற்ற வருவார்கள் என்ற விடயம் தீவிரமாக ஆராயப்படுதல் வேண்டும்" என ஐயம் தெரிவித்ததில் புலப்படுகிறது.

அத்தோடு அவர் அவ்வுரையில் "எல்.ரீ.ரீ.ஈ இயக்கம் பொருள்களுக்கான கட்டுப்பாட்டினை நீக்குதல், உணவுகளை அனுப்புதல் போன்ற அவர்களுக்குப் பயன்படும் கோரிக்கைகளை விதிப்பார்களாயின், அதனால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை" எனக் கூறி, "எங்களுடன் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கம் உறுதியான அரசியல் விடயங்கள் பற்றியே பேச்சு வாாததை நிகழதத வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். இது புலிகள் பொருளாதாரத் தடைகளை நீக்கக் கோரி விடுக்கக்கூடிய நிபந்தனைகளை முன்கூட்டியே நிராகரிப்பதாக அமைந்துள்ளது. அத்துடன் அவற்றைச் செய்வதற்குத்தான் புதிய தமிழ் அமைச்சு உள்ளதெனவும் அதுபற்றி புலிகள் பேசத் தேவையில்லையெனவும் இவ்வுரையில் சுட்டிக்காட்டப்பட்டுமுள்ளது.

பொ.ஐ.மு. அரசாங்கத்துடன் 1994ல் நடத்திய பேச்சுவார்த்தைகளைப் புலிகள் மக்களின் அன்றாடத் தேவைகள் தொடர்பான விடயங்கள், அரசியல் தீர்வு குறித்த விடயங்கள் என இரண்டாகப் பிரித்து நடத்தினர். அதில் முதலில் அன்றாட தேவைகளை நிறைவுசெய்துகொண்டு பின்னர் அரசியல் பேச்சுக்களுக்கு செல்வது என்ற ஒழுங்கை முன்வைத்தனர். ஆனால் அரசியல் தீர்வு பற்றி பேசப்படாமல் அன்றாட பிரச்சனைகளுடனேயே பேச்சுவார்த்தை முறிந்துவிட்டது. இதனை மனதிற்கொண்டே, அன்றாடப் பிரச்சனைகளைப் புலிகள் கையிலெடுக்காது, அரசியல் பற்றியே பேசவேண்டுமேன அவர் வலியுறுத்துகிறார்.

எனவே புண்ணுக்கு அவசரமா, மருந்துக்கு அவசரமா என்று சிந்திக்காமல் இப்பிரச்சனைக்கு தீர்வு காணுவதைவிட அதை அணுகுவது குறித்த விதிமுறைகள், நிபந்தனைகள், சந்தேகங்கள், தயக்கங்கள், கௌரவப் பிரச்சனைகள், மற்றும் அதனை அரசியல் ஆதாயமாக்கும் முனைப்புகள் என்பவற்றோடு பேச்சுவார்த்தைக்கு இறங்குவார்களாயின் அது அர்த்தமுள்ள பேச்சுவார்த்தையாக அமையுமென்று எதிர்பார்க்க முடியாது. இந்நிலையில் பேச்சுவார்த்தையையே ஆரம்பிக்குமா என்பதும் சந்தேகத்துக்கிடமானதாக உள்ளது.

நரன்

## செய்திச் சிதறல்

✪ கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் விமானப் பயணச்சேவைகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. பருவகாலச் சூழ்நிலையால் கடல் கொந்தளிப்பு அதிகரித்துள்ளது. இதனால் திருகோணமலையிலிருந்து கடல் மார்க்கமாக பயணங்கள் மேற்கொள்ளப்படுவது தற்காலிகமாக தடைப்பட்டுள்ளது. எனவே விமானம் மூலம் பயணத்தை மேற்கொள்வது பலருக்கு வசதியாக இருக்கும். இதற்கென ஐம்பது பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய இரு விமானங்களை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இருப்பினும் ஒரு வழிப்பயணத்துக்கு ஒரு நபர் ரூ3500/- கட்டணமாக செலுத்த வேண்டும். இப் பெருந்தொகை கொடுத்து பயணம் செய்வதற்கு எத்தனை பேர் ஆயத்தமாக உள்ளனர் என்பது தான் கேள்வி.

✪ மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் அவர்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தது தொடர்பாக அரசுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது.

✪ அண்மையில் மலையகத்தில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக மலையக இளைஞர்களும் யுவதிகளும் திடீர்திடீரென கைது செய்யப்பட்டு வருகிறார்கள். இதனை ஆட்சேபித்து மலையக மக்கள் முன்னணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் நுவரெலியா பொலிஸ் அத்தியட்சகர் சமர கோணைச் சந்தித்து, தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்

✪ மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களிலுள்ள இராணுவ முகாம்கள் பல மூடப்பட்டு படையினர் வாபஸ் பெறப்பட்டு வருகின்றனர். இவர்களுக்குப் பதிலாக விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டு வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இங்கிருந்து பணியாற்றிய படையினர் வட பகுதியில் இடம் பெற்று வரும் புலிகளுடனான மோதல்களில் ஈடுபடுத்தவே அனுப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

✪ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினத்தையொட்டி புலிகளின் பாரிய தாக்குதல் எங்காவது நடைபெறக் கூடுமென்று இராணுவத் தலைமையகம் உசாராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொழும்பு மாநகரைக் குறிவைத்து புலிகளின் தாக்குதல் இடம் பெறக் கூடுமென்று கருதப்படுவதனால் நகரத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முறுக்கி விடப்பட்டுள்ளன. பிரதான வீதிகளில் காவலரண்கள் பல புதிதாக ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் வாகனங்களில் சுற்றித் திரிந்து ஆங்காங்கே தற்காலிகமான காவரண்களை ஏற்படுத்தி வாகனங்களையும் மக்களையும் பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதேவேளை அம்பாறை மாவட்ட எல்லைப் புறப்பிரதேசங்களில் பாதுகாப்புப் பணியில் இதுவரை ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினர் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுப் பதிலாக இராணுவத்தைக் கொண்டு வந்து குவிப்பதை அப்பிரதேச மக்கள் எதிர்த்து வருகின்றனர். ▭

# அண்டை மண்டலத்தில்...

# மூன்று மாறன்களுக்கிடையே கருணாநிதி

தமிழக முதல்வர் கருணாநிதிக்கு கடந்த வாரம் மிகவும் சோதனையான ஒரு காலமாகவிருந்தது. மருமகன் முரசொலி மாறன் ஒரு புறம், தமழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இன்னொரு புறம், சந்தனக் கடத்தில் வீரப்பனுடன் இப்போது கூட்டணி அமைத்திருக்கும் தமிழர் விடுதலைப் படையினைச் சேர்ந்த மாறன் இன்னொருபுறம் என ஆளாளுக்கு அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தனர்.

எமர்ஜென்சியின்போது அல்லது ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் கூட கலைஞர் இவ்வளவு அவதிப்பட்டிருப்பாரா என்பது சந்தேகமே.

இந்தியாவின் தொழில்துறை அமைச்சர் முரசொலி மாறன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். உலகின் பல மூலைகளிலிருந்தும் வல்லுநர்கள் பறந்து வந்து சிகிச்சை செய்தவண்ணமிருந்தனர்.

கலைஞருக்கு வயது 77. மாறனுக்கு 66 தான். மருமகன் உயிருக்கு ஆபத்து என்றவுடன் மாமனுக்கு மனம் பதைக்கத்தானே செய்யும்? மாறனே தனது மனசாட்சி என்று பலமுறை கருணாநிதி கூறியிருக்கிறார் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

தன்தோளில் சுமந்து வளர்த்த பிள்ளை, பின்னாளில் தனது அந்தரங்க ஆலோசகராகவும் மாறியவர், அவரது உடல்நிலை மிக மோசமடைந்ததைக்கண்டு கலைஞருக்கு உலகமே ஸ்தம்பித்துவிட்டதைப் போலிருந்தது என்று கூறப்படுகிறது. அடிக்கடி சென்னை அப்போலோ மருத்துவமனைக்குச் சென்று மாறன் உடல்நிலை எப்படியிருக்கிறது என்று விசாரித்த வண்ணமிருந்தார். இரவெல்லாம் பல மணிநேரங்கள் அங்கேயே கழித்தார். சட்டமன்றத்தில் தவறாது ஆஜராகும் அவர் தொடர்ந்து அதன் நடவடிக்கைகளைப் புறக்கணித்தார்.

நெடுமாறன் வீரப்பனிடம் தூது போவது பற்றி கடுமையான விமர்சனங்கள் எழுந்த நேரத்தில்கூட கலைஞர் பதிலளிக்கும் மனநிலையிலில்லை. பின்னர் சட்டமன்றத்திற்கு வருவதையே அவர் தவிர்த்தார். அவைத் தலைவர் பழனிவேல் ராஜன், முதல்வர் எப்போது பிரச்சனை குறித்து விளக்க வருகிறாரோ அதுவரை நெடுமாறன்-வீரப்பன் தொடர்பாக எதுவும் பேசவேண்டாமென்று உத்தரவிட்டார். அவ்வளவு நிலைகுலைந்து போயிருந்தார் கருணாநிதி. இக்கட்டுரை எழுதும் நாளன்று (நவம்பர் 10) மாறன் உடல்நிலை சற்று முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டதாக செய்திகள் வந்தன.

கருணாநிதியின் அக்காள் மகன் சண்முகசுந்தரம் தான் பின்னாளில் முரசொலி மாறனானார். இரத்த சம்பந்தம் மட்டுமல்ல இருவருக்கிடையேயுமான உறவு-பொதுவாழ்வில் இருவரும் இணைந்தே வளர்ந்தனர். பத்தாம் வகுப்பு வரைமட்டுமே படித்த கருணாநிதி எம்.ஏ.பட்டதாரியான மாறனைத் தன் உற்ற தோழனாக ஏற்றுக்கொண்டார். அவர் அரசியலில் எடுத்த அனைத்து முக்கிய முடிவுகளுக்குப் பின்னணியிலும் மாறன்தான் இருந்திருக்கிறார், என்று நம்பப்படுகிறது.

கருணாநிதி பொதுவாக தொண்டர்களிடம் இனிமையாகப்பழகுவார், எல்லோரையும் அரவணைத்துச் செல்லவேண்டும் என்று நினைப்பார், திராவிடக் கொள்கைகளில் தனக்கு ரொம்பவும் பிடிப்பு இருப்பதாகக் காட்டிக் கொள்ள விரும்புவார்.

ஆனால் அதற்கெல்லாம் நேர் எதிரிடையான குணங்களைக்கொண்டவர் மாறன். தொண்டர்களுக்கும், ஏன் கட்சிக்கும் அவருக்குமே தொடர்பு கிடையாது. எல்லோரிடமும் எரிந்து விழுவார்; விரட்டி விரட்டி வேலை வாங்குவார்; எல்லாவற்றிற்கும் மேலாக யதார்த்தவாதி; காரியம் ஆக வேண்டுமானால் யார் காலையும் பிடிக்கலாம்; கழுத்தையும் அறுக்கலாம், கொள்கை என்பது மேடைகளில் பேசப்படுவது என்று உறுதியாக நம்புபவர் அவர்.

ஒரு காலத்தில் தாராளமயமாக்கல் கொள்கைகளை கடுமையாக விமர்சித்த மாறன், இப்போது அத்தகைய கொள்கைகளை தன்னால்தான் சிறப்பாக நிறைவேற்றமுடியும் என்கிறார். அதைவிடுங்கள், திராவிட இயக்கத்தினை குழிதோண்டிப் புதைக்கும் செயலாகக் கருதப்படுவத பாரதீய ஜனதாவுடன் தி.மு.க. கூட்டுசேர்ந்ததுதான்; அந்த முடிவினை கருணா நிதி எடுப்பதற்கே காரணம் முர சொலி மாறன்தான்.


1996ல் வாஜ்பேயி ஆட்சி அமைத்தபோதே மாறன் பாரதீய ஜனதாவை ஆதரிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறினார். கூட்டணிக் கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் அதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாகவே அந்த முயற்சி அப்போது கைவிடப்பட்டது.

இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஜெயலலிதா தனது ஆதரவை வாபஸ் பெற, முகாம் மாற சரியான தருணம் இதுவே என்று வாதாடியவர் மாறன்தான்.

பார்ப்பன ஆதிக்கம், சமூக நீதி, பெரியாரின் கோட்பாடுகள் என்றெல்லாம் ஒரு காலத்தில் முழங்கி வந்தவர், திராவிட இயக்க வரலாற்றை எவரும் படிப்பதில்லை என்று இரண்டாம் மட்டதலைவர்களையும் தொண்டர்களையும் சாடி வந்தவர் இதே மாறன்தான். கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு பெரும் எதிரியாக சித்தரிக்கப்பட்ட பாரதீய ஜனதாவுடன் கைகோர்ப்பதற்கு கருணாநிதி சற்று சங்கடப்பட்டு இருக்கிறார். தொண்டர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று கவலைப் பட்டிருக்கிறார்.

"நீங்கள் கவலைப்படுவதில் பொருளில்லை. இன்று காங்கிரஸ் அழிந்து கொண்டிருக்கும் கட்சி, எதிர்காலம் பாரதீய ஜனதாவிற்குத்தான். ஜெயலலிதா சேர்ந்தார். மக்கள் ஏற்றுக்கொள்வில்லையா என்ன? புதுவாழ்வல்லவா பெற்றார் அவர்? நமக்கு அனுசரணையான ஆட்சி மத்தியில் வேண்டும். அப்போதுதான் நாம் ஜெயலலிதாவையும் எதிர்கொள்ள முடியும்..." என்றெல்லாம் சமாதானம் கூறி கருணாநிதியை சம்மதிக்கவைத்ததே மருமகன்தானாம். இப்போது இருவரும் செழித்துக் கொழிக்கத்தான் செய்கிறார்கள். கருணாநிதி நிச்சயமாக மாறனுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறார். எனவேதான் மாறனின் உடல்நிலை அவருக்கு அவ்வளவு மனக்கிலேசத்தைக் கொடுக்கிறது.

இன்னொரு புறம் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன். முதலில் காங்கிரசில் இருந்தார். இந்திராகாந்தி மீது தி.மு.க.வினர் கல்வீசித்தாக்கியபோது அவரைக்காப்



பாற்றி மாவீரன் என்ற பட்டமும் பெற்றவர்.

பின்னர் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் என்ற ஒன்றைத் துவங்கி ஒரு முறை அ.இ.அ.தி.மு.க. ஆதரவுடன் மதுரையிலிருந்து சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் கட்சி எடுபடவில்லை.



1983ல் இலங்கையில் தமிழர்களுக்கெதிரான கலவரத்திற்குப் பிறகு, தமிழகத்தில் பலவேறு போராளிக்குழுக்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த நேரம், நெடுமாறன் தன்னை விடுதலைப்புகளின் ஆதரவாளராக காட்டிக் கொண்டார்.

புலிகளுக்கும் தாங்கள் சொல்வதை, செய்

**காணகன்**

வதை ஆதரிக்கும் ஒருவர் தேவைப்பட்டார். பலர் அந்த வேலையைச் செய்யத்தயாராயிருந்தாலும், எல்.ரி.ரி.ஈ.யினர் நம்பக்கூடிய, ஓரளவு மக்கள் மத்தியில் பிரலமாகயிருந்த ஒரு நபர் தேவைப்பட்டது. நெடுமாறனைப் பிடித்தார்கள். இருவருக்கும் பயன்தரத்தக்க வகையில் அவர்களுக்கிடையே ஏற்பட்ட உறவு செழித்து வளர்ந்தது.

தமிழினவாதம் பேசிவரும் தீவிரவாதக் குழுக்களிடையே நெடுமாறன் தான் புலிகளின் அதிகாரபூர்வ பிரதிநிதியாகக் கருதப்படுகிறார்.

அந்த அங்கீகாரமே மற்ற குழுவினரிடையில் அவருக்கு தனிப்பெரும் மதிப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. அதற்கோர் எடுத்துக்காட்டுதான் வீரப்பன் குழுவினர் அவரை தங்களிடம், ராஜ்குமார் விஷயமாகப் பேச வருமாறு அழைத்தது.

இரண்டுமுறை இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருப்பவர் அவர், இருந்தும் அவர் காட்டிற்குள் போக சம்மதித்தது மனிதாபிமானத்தின் பாற்பட்டுத்தான். பொதுவாக வீரப்பன் விஷயத்தில் அதிக அக்கறை காட்டியதில்லை அவர்.

ஆனால் சட்டமன்றத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்னன் நெடுமாறனை கடுமையாகப் தாக்கிப் பேசி, அவரைக் கைது செய்யவேண்டுமென்றும் கோரி வெளிநடப்பு செய்தபின், நெடுமாறன் அடித்து வரும் ஸ்டண்டுகள் பலருக்கு அவர் மீதிருந்த கொஞ்ச நஞ்ச மரியாதையினையும் தகர்த்துவிட்டது.

ராஜ்குமார் கடத்தப்பட்டு 100 நாட்கள் ஓடிவிட்டன. என்ன நடக்கப்பேகிறதோ என்று பலரும் கவலைப்பட்டுக்கொண்டிருந்த நேரம் நெடுமாறன் தான் மீண்டும் காட்டிற்குள் செல்லவிருப்பதாக அறிவித்தார். அப்போதுதான் வீரப்பனிடமிருந்து சமிஞ்ஞை வந்தது போலும்.

இந்தச் சூழலில் உச்சநீதி மன்றம், எதிர்பார்த்தது போல் தடா கைதிகளை விடுதலை செய்யமுடி யாது என்று கூறியது. "நாங்கள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இரு மாநில அரசுகளும் ஒரு சில உறுதிமொழிகளைக் கொடுத்திருக் கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு வீரப்பனை சமாதானப் படுத்திவிடுவோம்!" என்று முதலில் அறிவித்தார் நெடுமாறன்.

ஆனால் மறுநாளே சட்டமன்றத்தில் பாலகிருஷ்ணனின் விமர்சனம் பற்றி செய்திகள் வந்தவுடன், "நான் தேசத் துரோகியா? மனிதாபிமான நோக்கில் நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளை கொச்சைப்படுத்துவதா. நான் வீரப்பனை சந்திக்கப் போவதில்லை, தேச பக்தர் பாலகிருஷ்ணனே சென்று ராஜ்குமாரை மீட்டு வரட்டும்" என்று தடாலடியாக ஓர் அறிக்கை வெளியிட்டார். மற்றத்தூதுவர்களுக்கே அவரது முடிவு அதிர்ச்சியை அளித்தது. வேறு வழியில்லாமல் அவர்கள் அந்த முடிவினையேற்றுக் கொண்டார்கள்.

"பாலகிருஷ்ணன்தான் பொறுப்பில் லாமல் பேசுகிறார், தேவையில்லாமல் விஷயத்தை அரசியல் ஆக்குகிறார் என்றால், நீங்கள் சற்றுப் பெருந் தன்மையாக நடந்துகொள்ள வேண்டாமா கர்நாடகத்தில் வாழும் தமிழர் நலன் கருதியாவது அத்தகைய விமர்சனங்களை ஒதுக்கித் தள்ள வேண்டாமா" என்று அவரிடம் கேட்கப்பட்டது.

பதிலுக்கு அவர் "பாலகிருஷ்ணனிடம் போய் ஏன் அப்படிப்பேசினார் என்று கேளுங்கள். மூப்பனாரிடம் சென்று அவர் ஏன் பாலகிருஷ்ணனைக் கண்டிக்கவில்லை என்று கேளுங்கள்" என்றெல்லாம் லாவணி பாடினார்.

ராஜ்குமாரின் மகன்கள், கன்னட திரைப்பட உலக பிரமுகர்கள், டாக்டர் ராம்தாஸ் என்று பல தரப்பினர் நெடுமாறனைத் தேடி ஓடிவந்தனர். உங்கள் முடிவினை மாற்றிக் கொள்ளுங்கள் என்று கெஞ்சினர். டி.வி. காமிராக்கள் அவரை மொய்த்தன, அவர் புளகாங்கிதம் அடைந்தார். ஆகா, இத்தனை நாட்கள் தன்னை உதாசீனம் செய்த நிருபர்கள் இப்போது தனது வீட்டிலேயே தவம் கிடக்கிறார்கள் என்று அவருக்கு மட்டில்லா மகிழ்ச்சி, பிரச்சினையை மேலும் வளர்த்தார்.

இக்கட்டுரை பிரசுரமாகும் நேரம் அவர் மீண்டும் காட்டிற்குள் சென்றிருக்கலாம். ஆனால் கலைஞர்தான் பாவம். அவருக்குப் பொதுவாகவே நெடுமாறனைப் பிடிக்காது. அவரை அழைத்து "நீங்கள் தூதுவராகச் செல்லுங்கள்" என்று வேண்டிக் கொண்டதையே கௌரக்குறைவாக நினைத்திருப்பார். இப்போதோ நெடுமாறன் முறுக்கிக் கொண்ட பிறகு அவரை கெஞ்ச வேண்டிய சூழல் வந்ததற்கு மனம் நொந்திருப்பார்.

கலைஞருக்கு இன்னொரு தலைவலி-தமிழ்நாடு விடுதலைப் படைத் தலைவர் மாறன்தான். நக்கீரன் கோபால் இன்னமும், வீரப்பன்தான் காட்டிலிருக்கும் குழுவினருக்கு தலைவர் என்று சொல்லுகிறார். ஆனால் நடக்கும் சம்பவங்கள், வீரப்பனுடைய பேட்டிகள் இவற்றை வைத்துப் பார்க்கும் போது அவர் மாறனின் கைப்பொம்மையாகவே செயல்படுகிறார் என்று தோன்றுகிறது. குறைந்த பட்சம் அரசியல் ரீதியான விஷயங்களை மாறனின் முடிவுக்கே வீரப்பன் விட்டுவிடுகிறார் போலத்தான் தோன்றுகிறது.

விடாப்பிடியாக ராஜ்குமாரை நூறு நாட்களுக்கு மேல் சிறைபிடித்து வைத்திருப்பது, பதிலுக்கு தமிழகச் சிறைகளில் இருக்கும் ஐந்து தமிழ் தீவிரவாதிகளை விடுதலை செய்யவேண்டுமென்று கோருவது, உச்ச நீதிமன்றம் என்னவேண்டுமானாலும் கூறிக் கொள்ளட்டும் எங்கள் ஆட்களை விடுதலை செய்தே ஆகவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பது எல்லாவற்றிற்கும் காரணம் மாறன்தான் என்று கூறப்படுகிறது. அது மட்டுமல்ல நக்கீரன் கோபாலை ஏறக்குறைய டம்மியாக்கி, நெடுமாறனுக்கு தனி முக்கியத்துவம் கொடுத்தற்கும் மாறன்தான் காரணம். இப்படிச் செய்துதான் கருணாநிதியின் வயிற்றரெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறார் அவர்.

வழக்கம் போல் தனது விசுவாசியான கோபாலை மட்டும் அனுப்பி, ராஜ்குமாரை விடுவித்து, கிடைக்கும் புகழை இருவரும் சமமாகப் பங்கீட்டுக் கொள்ளலாம் என்று கருணாநிதி போட்டிருந்த திட்டத்தில் மண்ணைப் போட்டுவிட்டார் மாறன்.

வீரப்பன் பழையமாதிரி வெறும் கொள்ளைக்காரனாக மட்டும் இருந்திருந்தால், இத்தனை நேரம் கோரப்பட்ட பணம் கை மாறியிருந்திருக்கும். பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்திருக்கும். எல்லாவற்றையும் குழப்பிவிட்டார் மாறன் என்று கலைஞருக்கு கடுங்கோபம் என்று கூறப்படுகிறது.

ராஜ்குமார் விடுதலையானவுடனே இருமாநில அதிரடிப்படையினரும் பெரும் தாக்குதலை மேற்கொள்வார்கள் என்று அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. இதை அறிந்தே மாறன் மேலும் தாமதிக்கிறார், நெடுமாறன் உள்ளே சென்றாலும், தாங்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்லும்வரை வீரப்பன் குழுவினர் ராஜ்குமார் காட்டைவிட்டு வெளியேற அனுமதிக்கமாட்டார்கள். இப்படியாக சிக்கலுக்கு மேல் சிக்கல் கருணாநிதிக்கு, எப்படியாவது பிரச்சனைகளெல்லாம் தீரவேண்டும் என்று அவரது குடும்பத்தினர் பல்வேறு கோவில்களில் பூஜை செய்து வருவார்கள். முதல்வர் தனது மஞ்சள் துண்டினை இறுகப்பற்றிக் கொண்டிருக்கிறார். ■

## பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

மண்ணை காப்பவரதும் மக்களை ஆள்பவரதும் நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் இரண்டு அலைவரிசைகளிலும் 9.11.2000 அன்று மாற்றி மாற்றிப் பார்த்தேன். (உதவி றிமோட் கொன்றோல்)

பூவுலகை ஆளும் அன்னையாக, ஆதிபராசக்தியாக இந்துக்களால் ஏற்றிப் போற்றப்படும் மயூராபதி அம்மன் கும்பாபிஷேக நிகழ்ச்சியையும் நாட்டை ஆளும் அம்மையாரின் 11வது பாராளுமன்ற சிம்மாசன பிரசங்கத்தையும் தான் குறிப்பிடுகின்றேன்.

எதிர்பாராமல் ஒரே நேரத்தில் நடைபெற்ற இந்த உன்னத நிகழ்ச்சிகள் பல எண்ணக்கருக்களை ஏற்படுத்தியன.

"மயூராபதித்தாயே அல்லல்படும் எம் இனத்தின் இன்னல் தீர, எம் அகதி வாழ்வு முடிவிற்குவர உன் மீது கும்பநீர் சொரிந்து உன்னை குளிர வைக்கின்றோம்; எம் குறைகள் அனைத்தையும் தீரும் அம்மா" என கண்களில் நீ சொரிய அரோகராகோஷத்துடன் அடியார்கள் கைதூக்கி வணங்கி வழிபட காண்டாமணி ஒலிக்க, கற்பூர ஆராத்தி நடைபெற்ற அதே நேரம்,

பாராளுமன்ற வாசலில் ஜனாதிபதி அம்மையாரை வரவேற்று 'நாட்டை ஆள்பவரே வருக நல்லாட்சித்தருக என்ற 21 பீரங்கி வேட்டுக்களின் முழக்கமும் ஒலித்த ஒற்றுமையை ஒரு நல்ல சகுனமாகப் பார்த்தேன்.

இந்த இடத்தில் 1994ல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அம்மையாரை 17 வருட யுத்த கெடுபிடியால் துன்பப்பட்ட மக்கள் தம்மைக்காக்க வந்த அம்மனாக; தம் துயர்தீர்க்கும் திட்டத்துடன் வந்த தேவதையாக, சமாதனத்தின் வெண்புறாவாக போற்றி புகழ்ந்ததையும் எண்ணிப்பார்க்கின்றேன்.

அது வசந்தகாலம். நம்பிக்கைகள் துளிர்விட்ட; நல்லவை நடக்கப்போகிறதென்ற எதிர்பார்ப்புகள் எல்லோர் உள்ளத்திலும் வேர்விட்ட காலம்.

ஆனால் தொடர்ந்த நிகழ்வுகள் எல்லாம் ஊழிக்காற்றில் வேரோடு பிடுங்கி எறிந்த மரங்களாக, மக்களை இடம்மாற்றியது. அகதிவாழ்வு நிரந்தரமாகியது.

அன்று ஆவலோடு எதிர்பார்த்தபடி சமாதானப் புறா பறக்கவில்லை. மாறாக வானில் வட்டமிடும் விமானங்கள் தான் குண்டுமாரி பொழிந்த வண்ணமுள்ளன. மக்கள் துயரவெள்ளம் தான் தலைக்குமேல் பாய்ந்தோடுகிறது. ஒருவரையெவர் குற்றம் கூறுவதிலும் குறைகூறிக் கொச்சைப் படுத்துவதிலும் தான் காலம் கடந்த போனது.

யார் செய்தது சரி, யார் செய்தது பிழை என்ற வாதத்திற்கப்பால் ஏமாற்றமடைந்தது அப்பாவி பொதுமக்கள் தான்.

எத்தனை அழிவுகள், உயிர்ப்பலிகள், இடம்பெயர்வுகள் இத்தனைக்கும் மேலாக இன்று மீண்டும் துளிர்விடும்-நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்புக்கள்.

ஆம், சிம்மாசனப் பிரசங்கத்தில் இனிவரும் காலம் எப்படி இருக்கும்; இருக்கவேண்டும் என்ற எதிர்வுகூறல் மிகத் தெளிவாக, திடமாக, பகிரங்கமாக; ஏன் வரலாற்றில் முதல் தடவையாக பாராளுமன்றத்தில் ஒலித்தது மிக மிக நல்ல சகுனம்தான். அன்றைய நிகழ்ச்சிகள் இரண்டுமே அந்த நம்பிக்கையைத்தான் ஏற்படுத்தின.

ஆதிபராசக்தி மயூராபதி அம்மன் கர்ப்பக்கிரக ராஜகோபுரஸ்தூபிக்கு கும்பநீர் சொரிந்த அதேவேளையில், நாட்டை ஆளும் அம்மையார் முன்பாக நாட்டிற்கான ஜெயமங்கள நல்லிணக்க கீதம் இசைக்கப்பட்டது.

இரண்டுமே குளிர்ந்தால் (குளிர்ந்

**~குத்தியன்~**

திருக்கும்; குளிர வேண்டும்) மண்ணிற்கும் மக்களிற்கும் நன்மையே நடக்கும் என நம்பலாம்; நம்பவேண்டும்.

ஏனென்றால் நம்பிக்கைதானே எம் இனத்திற்கு இன்று மிஞ்சியுள்ளது! ■

# புலிகளுடனான பேச்சுக்கள் வெற்றிபெற

# விஷமச் சக்திகளுக்கு கால்கட்டு போடுவதே அவசரத் தேவையாகிறது

அலசுவது -இராஜதந்திரி

இலங்கையின் பதினோராவது பாராளுமன்றத்தை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி சந்திரிகா நிகழ்த்திய உரை, இனப்பிரச்சனைத்தீர்வு தொடர்பாக நம்பிக்கையூட்டும் விடயங்களை உள்ளடக்கியதாகவே இருக்கின்றது.

தமது சொந்த சகோதரர் அநுராபண்டாரநாயக்கா பாராளுமன்ற சபாநாயகராக இருக்கும் நிலையில் ஜனாதிபதி பதினோராவது பாராளுமன்றதை ஆரம்பித்துவைத்தார்.

இன்றைய இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் தொடர்பாக ஒரு நீண்ட உரையை ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றில் நிகழ்த்தியிருந்தார்.

உலகில் நீண்டநேரம் பேசும் அரசியல் தலைவர்களைக் கொண்டதாகவே இலங்கை இருக்கின்றது.

விரைந்து சென்று கொண்டிருக்கும் உலகில் எந்தவொரு நாட்டின் தலைவரும் மிகக் குறுகிய நேரத்தையே தமது உரைக்காக ஒதுக்குகின்றனர். அக்குறுகிய நேரத்தில் மிக இரத்தினச் சுருக்கமாக தாம் கூற வேண்டியவற்றை அவர்கள் கூறிவிடுகின்றனர்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பாராளுமன்ற உரைகள் மட்டுமல்ல. எந்தவொரு பிரதான வைபவத்தின் போதும் கலந்து கொள்ளும் எக்கட்சியைச் சேர்ந்த தலைவராயினும் சரி, ஏறத்தாள ஒரு மணி நேரத்தையும் கடந்த நிலையிலேயே தமது உரையை நிகழ்த்துகின்றனர்.

எனவே ஜனாதிபதி சந்திரிக்கா கூட கடந்த வாரம் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக தமது பாராளுமன்ற உரையை நிகழ்த்தியிருந்தார்.

இருப்பினும் இத்தடவை ஜனாதிபதியின் உரை அனைத்துத்தரப்பினராலும் மிக ஆவலுடனேயே எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஏனெனில் அண்மையில் வன்னிப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்த நோர்வே நாட்டின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், தமது சந்திப்புப் பற்றிய விபரங்களை ஜனாதிபதி சந்திரிக்காவிடம் கூறியிருந்தார்.

நோர்வே தனது இராஜதந்திர நடவடிக்கைகளை அந்தரங்கமான முறையில் மேற்கொள்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளது. இதன் காரணமாகவே திரு. பிரபாகரனுடன் பேசியவை பற்றி பத்திரிகைத் துறையினருக்கு எதுவும் தெரிவிக்காது, ஜனாதிபதி சந்திரிகாவிடமே திரு.எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் நடத்திய சந்திப்பின் விபரங்களை வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்குமென்ற கேள்விக்குப் பதிலளிப்பதாகவே அவரது பதினோராவது பாராளுமன்ற உரையும் அமைந்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரனுக்கும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்குமிடையே நேருக்கு நேராக பேச்சுவார்த்தைகள் இடம் பெறவில்லையே தவிர, இருவருமே ஐந்து வருடங்களுக்கு முன்னர் விரிவான முறையில் கடிதத் தொடர்புகளை வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் முதற்தடவையாக ஜனாதிபதி பதவியை ஏற்றுக் கொண்ட போது சமரசமுயற்சிகள் தொடர்பாக நிறையவே எதிர்பாப்புத் தோன்றியிருந்தது.

அக்கால கட்டத்திலேயே வடக்கு கிழக்குப் பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவும், எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனும் நிறையவே கடிதத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இதன் பின்னர் சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ. அமைப்புக்குமிடையே பல சுற்றுப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் நடந்துமிருந்தன. ஆயினும், அப்பேச்சுக்கள் குறிப்பிடத்தக்கதாகவோ அல்லது முன்னேற்றகரமானதாகவோ அமைந்திருக்கவில்லை. மிகக் குறுகிய காலமே ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எல்.ரீ.ரி.ஈ. தலைவருக்குமிடையேயான புரிந்துணர்வு அன்று நீடித்திருந்தது.



இதன் பின்னர் பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் ஆரம்பித்த யுத்தம் கடந்த ஐந்து வருடகாலத்தில் இரத்தப் பிரவாகத்தை உருவாக்கியதாகவே இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி ஆகியவை ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பித்தபோது புலிகளுடனான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

தற்போது இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ஆட்சி ஏற்பட்டு ஓராண்டு பூர்த்தியாவதோடு பாராளுமன்ற ஆட்சியும் இரண்டாவது தடவையாக சந்திரிக்கா அரசினால் அமைக்கப்பட்ட நிலையில் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றி மீளவும் பிரஸ்தாபிக்கப்படுவதையே அவதானிக்க முடிகின்றது.

1983ம் ஆண்டின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலேயே வடக்கு-கிழக்குப் பிரச்சனை மிகவும் மூர்க்க மடைந்ததுடன் உயிர்ச்சேதங்களும் பெருமளவில் ஏற்படலாயின.

அப்போது எதிர்க்கட்சியாகவிருந்த இன்றைய பொது ஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த இடது சாரிப்போக்குக் கொண்ட அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வையையே வலியுறுத்தி வந்தன.

ஆனால் கடந்த ஐந்து வருடகால பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியிலும் வடக்கு கிழக்குப் பிரச்சனை தொடர்ந்து ஒரு யுத்தமாகவே நீடித்து செல்கின்றதே தவிர எவ்விதத்திலும் ஆரோக்கியமான அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்படாமலேயே இருக்கின்றன.

இந்நிலையில் நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் வன்னியில் வைத்து எல்.ரி.ரி.ஈ.தலைவர் வே.பிரபாகரன், சமாதானபேச்சுக்களில் தாம் ஆர்வமாகவே இருப்பதுபற்றித் தெரிவித்ததையடுத்து மீளவும் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக எதிர்பார்ப்புக்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பதிலளிப்பது போலவே ஜனாதிபதி சந்திரிக்காவின் பாராளுமன்ற உரையும் விளங்கியிருந்தது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பினருடனான பேச்சுக்கள் பற்றி ஜனாதிபதி சந்திரிக்கா சாதகமான முறையிலேயே கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை இன்னும் ஐந்து வருடகாலங்களே அவரால் ஜனாதிபதிப் பதவி வகிக்க முடியும். இலங்கையில் தற்போது அமுலில் இருந்து வருகின்ற அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருதடவைகள் மட்டுமே ஒருவரால் பதவிவகிக்க முடியுமென வரையறை செய்யப்பட்டுள்ளது.

இன்றைய அரசியலமைப்பை அறிமுகஞ் செய்த காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன மட்டுமே இருதடவைகள் ஜனாதிபதியாக இருந்து தமது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்திருந்தார்.

அவருக்கு அடுத்தபடியாக ஜனாதிபதி சந்திரிகா தற்போது இரண்டாவது தடவையாகத் தமது ஜனாதிபதி பதவியை வகித்து வருபவராக இருக்கின்றார்.

எனவே தமக்குக் கிடைத்துள்ள இந்த இரண்டாவது பதவிக்கால வாய்ப்பைப் பயன்படுத்தி இனப்பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத்தீர்வைக் காணவேண்டியவராகவே ஜனாதிபதி சந்திரிகா இருக்கின்றார்.

இந்நிலையில் இன்னும் ஐந்து வருடத்தில் தமது பதவிக் காலத்தின் போது இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறும் பட்சத்தில் எதிர்காலச்சந்ததியிடமும் ஒரு யுத்த அனர்த்தம் கொண்ட நாட்டைக் கையளித்த பழிச் சொல்லுக்கே ஜனாதிபதி சந்திரிகா ஆளாக நேரிடும்.

ஜனாதிபதி சந்திரிகா தமது பாராளுமன்ற உரையில் எல்.ரி.ரி.ஈயினருடனான பேச்சுப்பற்றி நிதானமாகக் கருத்து வெளியிட்டுள்ள அதேசமயம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும் தமது அபிப்பிராயங்களை பேச்சுவார்த்தைகள் தெடர்பாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் கூட்டமொன்றில் கடந்தவாரம் பேசிய இராணுவத் தளபதி பலகல்ல, எதிர்காலப் பேச்சு வார்த்தைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பட்சத்தில் போர் நிறுத்தமென்ற பேச்சுக்கே இடந்தரலாகாது என்று குறிப்பிட்டுள்ளார்.

போர்நிறுத்தமின்றியே பேச்சுக்கள் எதுவும் இடம்பெற வேண்டுமென்று தளபதி பலகல்ல தெரிவித்துள்ளார்.

இராணுவ ரீதியாகத் தமது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு தளபதி என்ற ரீதியில் ஜெனரல் பலகல்லவுக்கு அனைத்து உரிமையும் உண்டு.

ஆனால் போர்நிறுத்தம் பற்றிய முடிவுகளை எடுக்கும் பொறுப்பு சர்வ அதிகாரங்களையும் கொண்ட, முப்படைகளுக்கும் பிரதம தளபதியாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவிடமே இருக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர புலிகள் இயக்கமுடனான முக்கிய கட்டப் பேச்சுக்கள் கூட ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், திரு.வே.பிரபாகரனுக்குமிடையே நடைபெற வேண்டுமென்பதையே இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் அக்கறை காட்டுவோர் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளின் போது ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்தங்கள் தோல்வியைத் தழுவியிருந்தன. இராணுவ ரீதியாக இயங்கும் ஓர் அமைப்புடன் பேச்சுக்கள் நடத்தப்படும் போது அதிருப்திகள் ஏற்படும் பட்சத்தில் போர் நிறுத்தங்கள் நிலைத்திருக்கமாட்டாதென்பதையே அறியமுடியும்.


இலங்கையில் மட்டுமல்ல; சர்வதேச அரங்கில் சமகாலப் பிரச்சனைகளாக இருந்துவரும் பிரிட்டனின் வட அயர்லாந்துப் பிரச்சனை, மற்றும் பாலஸ்தீனப்பிரச்சனை என்பவற்றில் கூட போர்நிறுத்தங்கள் ஏற்படுவதும், பின்னர் அவை தோல்வியில் முடிவடைவதையுமே காணமுடிகின்றது.

இந்நிலையில் வெண்ணைதிரண்டு வருமுன்னர் தாளியை உடைப்பது போல, புலிகளுடனான பேச்சுக்களுக் சூழ்நிலைகள் உரியவகையில் உருப்பெறுமுன்னர் அவசரப்பட்ட கருத்துக்கண்ணோட்டங்கள் பொறுப்புள்ளோர் மட்டத்திலிருந்து வெளிவருவது பேச்சுவார்த்தைகளின் நோக்கங்களைத் திசைதிருப்புவதாக அமைந்துவிடுமென்றே கருதலாம்.

எனவே ஜனாதிபதி சந்திரிகா தமது பாராளுமன்ற உரையில் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றி சாதகமாக வெளியிட்ட கருத்துக்கள் மேலும் அர்த்தமுள்ளவையாக மாறவேண்டியதே இன்றியமையாததாகின்றது.

பேச்சுவார்த்தைகளுக்கான சுமுக சூழலை உருவாக்கும் முன்முயற்சியாக தென்னிலங்கையின் இனவாத, மதவாதப் பிற்போக்குச் சக்திகளுக்குக் கால்கட்டுப் போடவேண்டியதே ஜனாதிபதி தாமதிக்காது மேற்கொள்ள வேண்டிய அவசரநடவடிக்கையாகவுமிருக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**அண்மையில்** கொழும்பில் உள்ள பிரபல அம்மன் கோயிலில் மஹாகும்பாபிஷேகம். அதன் முன்னர் மூலஸ்தான விக்கிரகங்களுக்கு பக்தர்கள் எண்ணெய் வைக்கும் நிகழ்ச்சி. இறை பக்தியால் மணிக்கணக்கில் கால்கடுக்க நீண்ட வரிசையில் பக்தர்கள் நின்றனர். ஆனாலென்ன கோயில் தர்மகர்த்தாக்களுக்கு வேண்டியோர் பின் கதவால் அழைத்துச் செல்லப்பட்டு, விசேட சலுகை. இறையருளைக் கூட பின்கதவால் பெற முயற்சி. அதற்கு ஆலயக்காரர்களும் உடந்தை. சக்தியே உன் ஆட்களைப் பாரம்மா!

**அமெரிக்கஜனாதிபதி தேர்தலின்** இறுதி முடிவு வெளியிடப்படுவதில் தாமதம். இரு வேட்பாளர்களுக்குமிடையே கடும் போட்டி. அமெரிக்க அரசியல் வரலாற்றில் அரிதான ஒரு நிகழ்வு. கடுமையான போட்டி காணப்படும் புளோரிடாமாநிலத்தில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளனவாம். இலங்கையின் தேர்தல் மோசடிகாரர்கள் அமெரிக்காவுக்கும் சென்று விட்டார்களோவென்று எண்ண வேண்டியிருக்குது.

**யாழ்ப்பாணத்துக்கு மீண்டும்** பயணிகள் விமானச் சேவை ஆரம்பமாகப் போவதாகப் பேச்சு. இதற்கென விமானங்களும் வாங்கப்பட்டுள்ளனவாம். ஆனால் அவ்விமானங்கள் அன்டநோவ் ரகம் என்ற விடயம் தான் வயிற்றைக் கலக்குகிறது.

**இங்கிலாந்தின் பல** பகுதிகளில் கடும் மழை. பெரு வெள்ளம் ஆனால் அங்குள்ள நம்ம தமிழ் பையன்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்துவதாக இல்லை. வீதிகளில் வாள்ச் சண்டைபோட்டுள்ளனர். இரு குழுக்கள் ஒன்றையொன்று துரத்தி வெட்டுப்பட்டுள்ளனர். ஒருவருக்கு மூக்கறுபட்டுமுள்ளதாம். பாதுகாப்பாக இருக்கச்சென்ற இடத்திலும் இந்த பொடிப்பயல்களுக்கு ஒழுங்காக வாழத் தெரியவில்லை.

**எல்லாம் வல்ல அம்மையார்** கோட்டையிலுள்ள தமது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு இடம் மாறுகிறார். வீதிக்கு குறுக்கே ஏகப்பட்ட முறையில் பாதுகாப்புத்தடுப்புகள். கோட்டையின் மையப் பகுதியில் அங்காடி வியாபாரம் செய்தோரும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். பண்டிகைக்காலம் நெருங்குவதால் வயிற்றில் 'பலத்த அடி'யை வாங்கி திக்குமுக்காடுகின்றனர் அங்காடிகள்.

# திகில் தொடர்



பெண்ணின் அலறல் சப்தம் கேட்டதும், ஏதோ ஒரு பயங்கரம் நடத்திருக்கிறது என்றே படப்பிடிப்புக் குழுவினர் நினைத்தனர்.

சூரியனின் ஒளிக் கிரணங்கள் உலகில் பரவிய காலை நேரம்... உள்ளே வெளிச் சம் ஊடுருவியிருந்தது.

பிரமாண்டமான முன் ஹாலினுள் நுழைந்து பார்த்த போது, அலறிய பெண் இன்னாரென்று தெரிந்தது. அவள் டான்ஸ் மாஸ்டர் கோபி கண்ணாவின் உதவியாளரான உமாதான்! உமா 'சிக்' கென்று அழகாக இருப்பாள். அவள் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தாள். கீழே விழுந்து விடுவோமோ என்ற அச்சம் இருந்ததால் தூணில் சாய்ந்தபடியே நின்று கொண்டிருந்தாள். எல்லாரும் அவளை வந்து சூழ்ந்து கொண்டனர். ஒவ்வொருவர் நெஞ்சுக்குள்ளும் புயல் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது.

நடிகர் சிவப்பிரகாஷ், கும்பலை விலக்கிக் கொண்டு முன்னே வந்து, "மிஸ் உமா... பயப்பட வேண்டாம். நாங்க எல்லோருமே உனக்கு உதவத்தயாராக இருக்கிறோம். என்ன நடந்தது என்று விளக்கமாக சொல்லு, " என்றான்.

ரத்னாவுக்கு அந்த காலை நேரத்திலும் வியர்த்தது. சுதாகரித்துக் கொண்டு, "உமா.... ஏன் அப்படி அலறினே! பயப்படக்காரணம் என்ன?" என்று கேட்டாள்.

உமாவின் கண்ணிமைகள் பெரிதாகி, வில் போல் வளைந்து நின்றன. கண்கள் புடைத்துக் கொண்டு வெளியே உருண்டு வந்து விடுவது போல் எதையோ வெறித்துக் கொண்டிருந்தன. முகத்தில் பீதி படர்ந்து இருந்தது. ரத்னா, உமாவின் கணகள் வெறித்து நோக்கிய இடத்தைப் பார்த்தாள்.

அங்கே சுமார் ஏழு அடி உயரத்தில் பண்டைக்கால குறுநில மன்னர் ஒருவரின் வண்ணப்படம் தெரிந்தது. அந்தச் சித்திரம் தூசி படிந்து காணப்பட்ட போதிலும், உயிரோடு ஒரு மன்னன் நிற்பது போலவே தெரிந்தது.

தலையில் சப்பையாக ஒரு கிரீடம். முறுக்கி விடப்பட்ட தடித்த மீசை, சிறிதளவே தாடி, வயது எழுபதைக் குறிக்கும் தோற்றம்.

பள பளப்பான உடை. கழுத்தில் முத்து மாலை. மன்னன், கண் இமைக்காமல் எல்லாரையும் பார்த்துக் கொண்டிருப்பது போல் அவ்வளவு தத்ரூபமாக வரையப்பட்டிருந்தது அந்த ஓவியம்.!

படத்தின் அடியில் கொண்டல் ராஜா என்ற பெயரும், உதயம்:7.3.1762; மறைவு: 14.2.1814 என்று எழுதப்பட்டிருந்தன.

ரத்னா, மனதிற்குள்ளேயே ஒரு கணக்கு போட்டாள். 'கொண்டல் ராஜா என்ற பெயரைக் கொண்ட இந்த குறுநில மன்னன் 182 ஆண்டுகளுக்கு முன்னால் உயிரோடு வாழ்ந்திருக்கிறான். அரண்மனை போன்ற இந்த வீடுதான் சில மாற்றங்களுடன் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

கொண்டல் ராஜா இங்கே தான் வசித்து வந்தானா? இது அவனுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக இருக்க வேண்டும்!' என்று ரத்னா நினைத்தாள்.

பட அதிபர் தாணு மாலயமாமணி தன்னுடைய குத்துச் செடி மீசைக்குள் பற்களைக் காட்டியவாறு, "ஏ பொண்ணு.... ஏன் வீணாக அலறி கலாட்டா பண்றே..... ஷூட்டிங் நடக்காமல் செய்ய வேண்டும் என்பதற்காக எதிரி ப்ரொடியூசர் கையாளாக வேலை பண்றியா?" என்று கேட்டார்.

உமா பயந்து போய் அழுதே விட்டாள். "நான் அந்த மாதிரியான பொண்ணு இல்லை. சாரே.... நான் விஸ்வாசம் உள்ளவளாக்கும்."

கேரளா திருச்சூர்க்காரியான அவள் நிறையவே பயந்து போயிருந்தாள்.

"பின்னே ஏன் வீணாகக் கூச்சல் போட்டு பயப்படுத்தினே?"

அவள் என்ன சொல்லப் போகிறாள். என்பதை அறியும் ஆவலுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

மிகுந்த பிரயாசையுடன், வியர்வையை துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்:

"ஈ ஈ ஓவியத்துக்கு உயிர் இருக்கு சாரே.... அது என்னைப் பார்த்து சிரித்து, கண்ணடித்தது," என்றாள்.

அவள் பேச்சைக் கேட்டதும், அனைவரும் கேலியாக சிரித்து விட்டனர்.

உமாவுக்கு அது வெட்கத்தையும், கூச்சத்தையும் ஏற்படுத்தியது.

"ஏன் சிரிக்கிறீங்க...? எனிக்கி பிராந்துப் பிடிச்சிருக்குன்னு சம்சியத் தோ....? என்றே குருவாயூரப்பன் மேலே சத்தியம் செய்து பறையுது. நான் பைத்தியம் பிடித்தவள் இல்லா. நான் நோக்கியது சத்தியம். கள்ளம் இல்லா," என்றாள் உறுதியான குரலில்.

அப்போது, முரட்டு உடம்புடன், ஜிப்பா, லுங்கி சகிதம் வில்லன் நடிகர் பீமராஜ், உதடுகளின் இடுக்கில் புகையும்சிகரட்டுடன் வந்தான்.

"சிஸ்டரின் அழகில் மயங்கி, உயிரற்ற ஓவியத்திற்கு கூட உயிர் வந்து விட்டது போலிருக்கிறது! ப்ரொடியூசர் சார்....! இது நம்ப முடியாத அதிசயமாக இல்லையா? மிஸ் உமாவை பார்த்து பல்லிளித்ததாம்..... கண்ணடித்ததாமே! எத்தனை இன்ர்ரஸ்டிங் நியூஸ்!" என்றான் கிண்டலாக.

உடனே ஹீரோ நடிகர் சிவப்பிரகாஷ், குறுக்கிட்டு, "இந்த சைத்தான். படம் யாருடையது?" என்று கோபமாகக் கேட்டான்.

பட அதிபர் தாணு மாலயமாமணிக்கு ஹீரோ நடிகர் அதிரடியாகப் பேசியது பிடிக்கவில்லை. உடனே கண்டிக்கும் முகத்தோடு பேசினார்:

"சிவா.... முட்டாள்தனமாக பேசாதே! சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த பிரதேசத்தை ஆண்டு வந்த குறுநில மன்னன் தான் இவர். பெயர் கொண்டல் ராஜா.

இந்த மங்களவிலாஸ் மாளிகையில் தான் முன்பு அவர் வசித்து வந்தார். நான் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் அவருடைய வாரிசான தீர்த்தகிரி என்பவரிடமிருந்து வாங்கி, பழைய அமைப்புக்கெடாமல் சில மாற்றங்கள் மட்டும் செய்து புதுப்பித் தேன். நினைவுச் சின்னமாக அவருடைய பெரிய படம் இங்கே இருக்கு. யாரும் அவதூறு பேச வேண்டாம். அது எனக்குப் பிடிக்காது" என்றார்.

பட அதிபர் கண்டிப்புடன் இப்படி சொல்ல எல்லாரும் பயந்து வாயை மூடிக் கொண்டனர்.


ஒருவாறு பிரச்சனை முடிந்ததும், நடிகர்களும், நடிகைகளும் இதர கலைஞர்களும் பொருத்தமான அறைகளில் தங்கவைக்கப் பட்டனர். ரத்னாவின் அறைக்கு பக்கத்து அறையில் பட அதிபர் தங்கிக் கொண்டார்.

காலையிலேயே குளியல், சிற்றுண்டி முடித்து மேக்கப் சகிதம் படப்பிடிப்புக்காக ஏரிக்கரைப்பக்கம் வந்து விட்டனர்.

காதலர் டூயட் பாடும் காட்சி படமாக்கப்பட இருந்தது.

ரத்னா, சுடிதார் உடையில், கதாநாயகன் சிவப்பிரகாஷை தழுவிக் கொண்டு ஆடிப் பாடிய போது அவன் திடீரென்று மரணப் பீதியுடன் அலறினான்.

(திகில் தொடரும்)



## திகில் கதை மன்னன்

## பி.டி.சாமி

# தத்துவம் பாடிய முத்தையா 2

டாக்டர்.சு.சண்முகசுந்தரம்


**1957ல்** 'கண்ணதாசன் ஃபிலிம்ஸ்' உருவானது. கதை வசனம் பாடல்கள் எழுதினார். தன் படத்துக்கு எழுதுவது இவருக்குச் சுகமான அனுபவம் ஆயிற்று. திடீரென்று ஒரு நாள் பாட்டு தோன்றும். உடனே விசுவநாதனைக் கூப்பிட்டு எழுதத் தொடங்கிவிடுவார். அப்படி உருவானது 'மாலையிட்ட மங்கை'. இதில்,

"எங்கள் திராவிட பொன்னாடே
கலை வாழும் தென்னாடே"

பாடல் பிரபலம்

கட்டபொம்மனுக்குப் போட்டியாகச் 'சிவகங்கை சீமை' உருவானது. இவரது பாடல்கள் அதிகம். ஆனால், படமோ தோல்வி.

பின்னர் சிவாஜிகணேசனின் மன நிலை மாறியது. அவர், வேட்டைக்காரன் புதூர் நண்பர் முத்து மாணிக்கத்தை கவிஞரிடம் அனுப்பி வைத்து மீண்டும்



உறவு கொண்டார். நல்ல தொகையை அச்சாரமாகக் கொடுத்தார். 'விடி வெள்ளி', 'பாசமலர்', 'பாவமன்னிப்பு', 'பாகப்பிரிவினை', 'படிக்காத மேதை' எனப் பல்வேறு படங்களுக்கு எழுதினார். அத்தனையும் சூப்பர் ஹிட்.

கையில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் 'கவலை இல்லாத மனிதன்' தயாரித்தார். அதனால் கவலையுள்ள மனிதன் ஆனார். 1961ல் 'வானம்பாடி', அது கொஞ்சம் கை கொடுத்தது. பின்னர் 'கமைதாங்கி' அதுவும் பரவாயில்லை.

எம்.ஜி.ஆரோடு ஏற்பட்ட விலகல் இவரைப் பாதிக்கவில்லை. எனினும், எம்.ஜி.ஆர் இவரைப் பாதித்துவிட விரும்பினார். வாலி, புலமைப்பித்தன், நா.காமராசன், பூவை செங்குட்டுவன் எனப் பல்வேறு கவிஞர்களுக்கு ஆதரவு கொடுத்தார். தன் படங்களில் கண்ணதாசனுக்கு வாய்ப்பு இல்லாமல் செய்துவந்தார்.

இதனால் கண்ணதாசன், விசுவநாதன், டி.எம்.சௌந்தரராஜன், சிவாஜி கணேசன் என்ற அணி சிறப்புடன் செயல்பட்டது.

கண்ணதாசனும் 'கறுப்புபணம்', 'இரத்தத் திலகம்', 'லட்சுமி கல்யாணம்' போன்ற படங்களைத் தயாரித்தார். அவ்வப்போது படத்தில் முகம் காட்டினார். ஸ்ரீதர், தேவர் போன்றோர் இவருக்குப் பெரிதும் உதவி வந்தனர். இவரே சொல்வதுபோல் "கம்பனுக்குச் சடையப்பன், கண்ணதாசனுக்கோ சின்னப்பன்." பின்னர் எம்.ஜி.ஆரோடு உடன்பாடு கொண்டு அரசவைக் கவிஞர் ஆனார். காரணம் அப்போது எம்.ஜி.ஆர். முதலமைச்சர்.

1981ல் அமெரிக்காவுக்குப் போன இவர் அங்கேயே இறந்து போனார். 34 ஆண்டுகள் முடிசூடா மன்னராகச் சினிமாப் பாட்டுலகில் சிறகடித்தவர். ஒரு சிகரம்தான். "இவர் கும் என்று வளர்ந்த குழந்தை. 'இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட அவை இரண்டும் சேர்ந்தொரு பொம்மையைச் செய்தன தாம் விளையாட' என்ற வரிகளை இப்போது நினைத்தாலும் கண்கள் கசிகின்றன" என்பார் வலம்புரி ஜான். "வாழையடி வாழையென வந்து நிற்கும் திரைப்பாடல் ஆசிரியர்களின் முழு நிலவாக முத்திரைப் பொன்னாக முதிர் இமயமாக முத்தமிழ் வித்தகராக விளங்குபவர்" என்று தமிழ்ப் பித்தன் இவரைப் பாராட்டுவார்.

தமிழ்த் திரைப்படங்களுக்குப் பாட்டெழுதுவது சங்கப்பலகை மாதிரி. ஒரு காலத்தில் பாபனாசம் சிவன், பின்பு உடுமலை நாராயணகவி, அதன் பின்பு பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம், இப்படி வரிசையாக.... ஏக சக்ராதிபத்யம் நடத்தி வந்தார்கள். பட்டுக் கோட்டையின் திடீர் மரணம் திரைப்படத் தயாரிப்பாளர்களைக் கண்ணதாசன் பக்கம் திரும்பியது. அவரது வளமான கற்பனைத் திறன் அவரை மேலும் உயர்த்தியது" என்பார் முக்தா சீனிவாசன்.

"கண்ணதாசனை இரசிப்பதற்கு மனம் வேண்டும்; தெளிவு வேண்டும்; படிப்பும் பக்குவமும் வேண்டும்" என்பார் பூவை எஸ்.ஆறுமுகம்

"முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ"
"மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ
பூவின் மணமல்லவோ பொன்போன்ற உடலல்லவோ"

என்ற பாடல் வரிகள் அந்த ரகம்தான்.

பெரிய விஷயங்களைக் கூட அழகிய சிறிய வார்த்தைகளில் மக்களின் மனதில் நன்கு பதியும் படி செய்தவர் இவர்.

"பூஜ்யத்துக்குள்ளே ஒரு ராஜ்யத்தை ஆண்டு கொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன்- அவனைப்
புரிந்துகொண்டால் அவன்தான் இறைவன்"

என 'வடிவுக்கு வளைகாப்பு' படத்தில் எழுதினார்.

"இவரைப் பொறுத்தமட்டில் வார்த்தைகள் அவர் முன்னே நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு நிற்கும். ஒரு சமயம் வார்த்தைகள் அவருக்குக் கைகட்டி சேவகம் புரிகின்றனவோ என்று நினைக்கும் அளவுக்கு அவை பொருத்தமான இடங்களில் வந்து அழகுக்கு அழகு செய்வதைக் காணலாம்" என்று சலன் சொல்வதும் சரிதான்.

"மழைகூட ஓர் நாளில் தேனாகலாம்
மணல் கூட ஓர் நாளில் பொன்னாகலாம்
அவையாவும் சேர்ந்தாலும் நீயாகுமா
அம்மாவென்று அழைக்கின்ற சேயாகுமா?"

என்ற இவரது பாடல் 14 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

'துலாபாரம்' படத்தில் இவர் வயலாரின் "காற்றாடிச்சூ" என்ற பாடலைத் தமிழில் 'காற்றினிலே' என்று எழுதியுள்ளார். இதில் கருத்துக்களை மட்டுமின்றி சொற்களையும் மாற்றாமல் எழுதினார். வெள்ளம் போல் சுய கவிதை எழுதுகிற ஒரு கவிஞனுக்கு இது எளிதல்ல. மூலப் பாடலில் ஏற்பட்ட பிடிப்பையும், சுய கட்டுப்பாட்டையும் இது காட்டுகிறது. இது பற்றி வயலார் கூறும்போது. "It is one poets tribute to another" என்று குறிப்பிட்டாராம்.

'குழந்தையும் தெய்வமும்' படம் இந்தியில் 'தோ கலியான்' என்றாயிற்று.

"கோழி ஒரு கூட்டிலே சேவல் ஒரு கூட்டிலே
கோழிக்குஞ்சு ரெண்டும் இப்போ அன்பில்லாத காட்டிலே"

என்ற பாடலைச் சாஹர் துதியானா மொழி பெயர்ந்தார். அப்போது இப்பாட்டின் திறனைப் பெரிதும் பாராட்டினார்.

'காதலிக்க நேரமில்லை' என்ற படத்துக்கு,

"என்ன பார்வை உந்தன் பார்வை
இடை மெலிந்தாள் இந்தப் பாவை"

என்று எழுதினார். இதில், பார்வை என்ற சொல் மெலிந்து பாவை ஆயிற்று என்று நயம் சொன்னார்கள். 'ர்' வேறு இடையெழுத்து. கவிஞருக்கோ சந்தோஷம். 'எலந்தப் பயம்' என்ற 'பணமா பாசமா' படப் பாடலில் கூட நயமுண்டு என்பார்கள் கவிஞர் முத்துலிங்கம்.

"எட்டி எடு ஏழு பைசா- நான் தொட்டுத்தந்தா எட்டு பைசா" என்ற வரிகளில் 'என் கை பட்டால் விலை அதிகம்' என்று கூறுவது நயமானது.

"கண்ணதாசன் காளிதாசன் கவிதை நீ நெருங்கிவா படிக்கலாம் ரசிக்கலாம்" என்ற கவிஞர் வாலியும், (சூரக்கோட்டை சிங்கக் குட்டி) பழைய பாடல் போலே புதிய பாடலில்லை என்று கவிஞர் வைரமுத்துவும் (தாய்க்கு ஒரு தாலாட்டு) கண்ணதாசனைப் பாராட்டுகிறார்கள். அத்தகைய சிறப்பான பாடல்களை இவர் அளித்து வந்தார். கண்ணதாசனின் வாழ்க்கை அனுபவங்களும் அவருக்குப் பாட்டெழுத கை கொடுத்திருக்கின்றன. இதற்குப் பல்வேறு சான்றுகளைக் காணலாம்.

கவிஞர்தன் சின்ன வயதில் ஒரு பெண்ணைக் காதலித்தார். அது நிறைவேறாமல் போயிற்று. எனவே ஊரை விட்டு வெளியேறி கவிதைகள் எழுத ஆரம்பித்தார். சினிமா உலகிலும் காலடி வைத்தார். இந்த வண்ணமே, "அவள் கவிஞன் ஆக்கினாள் என்னை?" என்று ஒரு பாட்டில் எழுதத் தூண்டியதாம். படம் 'பாவ மன்னிப்பு'

1972ல் கண்ணதாசன் பச்சையப்பன் கல்லூரி தமிழ் மன்ற விழாவில் பேசினார். அப்போது "சென்னை வீதியில் ஒரு நாள் என் பழைய காதலியைப் பார்த்தேன். அவளும் பார்த்தாள். முற்றிலும் மாறிப்போன தோற்றம். என்னால் அவளை மறக்க முடியவில்லை. அன்று 'பாலும் பழமும்' படத்திற்குப் பாடல் எழுத வேண்டும்; எழுதினேன்.

"என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்
இது யார் பாடும் பாடலென்று நீ கேட்கிறாய்
தினம் உனக்காக நான் பாடும் இசையல்லவா"

என எழுதினேன்" என்றார்.



## அசத்தல் அறிமுகம்

← சில வாரங்களுக்கு முன் சிலைகள் போன்று வர்ணப்பூச்சுப் பூசப்பட்ட ஆண் மொடல்கள் நடுவே பெண்ணொருத்தி வந்த படத்தை முரசில் பார்த்திருப்பீர்கள்.

கிட்டத்தட்ட இதுவும் அது போன்ற ஒன்றுதான். இத்தாலியைச் சேர்ந்த மொடல் அழகி ரொபேர்டினா மக்னாரோ, 'கோடை காலம் - 2000' என்ற ஆடை அணிவகுப்பை மிலான் நகரில் சமீபத்தில் நடத்தினார்.

இந்த ஆடை அணிவகுப்பில் ஆண் மொடல்களை ஆடை எதுவும் இல்லாமல் போஸ் கொடுக்க வைத்து, தனது புதிய ஆடை டிஸைன்களை அசத்தலாக அறிமுகம் செய்தார் இந்த அழகி.

அத்துடன் அணிவகுப்பில் மொடல் அழகன்களை கட்டிப்பிடித்து கிளு கிளுப்பையும் ஏற்படுத்தினார் மக்னாரோ. ■

↓ ஆவென வாய் பிளந்திருக்கும் சிற்பத்தினுள்ளே புகுந்து வந்து அதிசயித்து மகிழும் இச்சிறுவனின் பெயர் சார்லி கருணே. இந்தச் சிலை மட்டுமன்றி இதற்குப் பக்கத்தில் சிறுவர்களுக்கு அறிவியலில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பல சிலைகள் உள்ளன.

எங்கே?

அமெரிக்காவில் உள்ள மிச்சிக்கன் நகரில் இருக்கும் லான்ஸிங் என்ற அறிவியல் அரும்பொருளகத்தில் தான்.

## வா(வ்)ய்

## தலைகீழ் வேகச் சாதனை



↑ படத்தில் ஆக்ரோஷமாக ட்ரம்ஸ் என்ற தாள வாத்தியக் கருவியை வாசிப்பவர் ரொறி பிளக்வெல் இசையால் உள்ளங்களை வசப்படுத்திய இவர் உலகசாதனை ஒன்றையும் படைத்திருக்கிறார்.

என்ன சாதனை என்கிறீர்களா?

உலகத்திலேயே வேகமாக ட்ரம்ஸ் வாசிப்பவர் என்ற சாதனை. அதுவும் தலைகீழாக நின்று.

## தகவல் பெட்டி





## வித்தை காட்டும் விலங்குகள்

← வன விலங்குகளையும் பறவைகளையும் அவற்றின் இயற்கைச் சூழல்களில்லிருந்து கடத்தி வைத்து விளையாட்டுக்கள் பழக்குவதற்கு கண்டனக் குரல்கள் எழுகின்றன. இருப்பினும் இத்தகைய விளையாட்டுக்கள் தொடரவே செய்கின்றன. இங்கே பயிற்சியாளரின் உதவியுடன் கரடிகள் இரண்டும் சைக்கிள் ஓடுகின்றன. சீனாவில் உள்ள ஷங்காயில் அண்மையில் முதல் தடவையாக தேசிய வனவிலங்கு விளையாட்டுக் காட்சிகள் நடைபெற்றன.

இப்போட்டியில் கலந்து கொண்டு பல விலங்குகள் தமது வித்தைகளைக் காட்டின. அரங்கில் கரடிகள் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தபோது, சைக்கிளை இன்னும் வேகமாக ஓட்டுமாறு உற்சாகப்படுத்துகிறார் பயிற்சியாளர்.

# கஸ்தூரிராஜாவின் சாதனை

'அவள் ஒரு தொடர்கதை' படத்தில் இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் 27 புதுமுகங்களை அறிமுகப்படுத்தினார். தமிழில் இப்படி அதிக புதுமுகங்களை பாலச்சந்தரைத் தவிர யாருமே அறிமுகப்படுத்தியதில்லை.

கிட்டத்தட்ட இதேபோன்றதொரு சாதனையைத் தனது படத்தில் நிகழ்த்துகிறார் இயக்குநர் கஸ்தூரிராஜா. கஸ்தூரிராஜாவின் இரண்டாவது மகன் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் முழுக்க முழுக்க புதுமுகங்களே நடிக்கிறார்கள்.

# பிரபு-கார்த்திக் ஸ்டைலில் விவேக்-வடிவேலு

தமிழ்த்திரையுலகில் இன்று நகைச்சுவையில் கலக்கிக் கொண்டிருப்பவர்களில் முதலிடம் பெறுபவர் விவேக் என்றால் அது மிகையில்லை.

அண்மையில் வெளியான 'பாளையத்து அம்மன்' படத்தில் 'பராசக்தி' படத்தில் நீதிமன்றக் காட்சியில் நடிகர்திலகம் சிவாஜி கணேசன் நடித்தது போன்று நகைச்சுவையாக நடித்திருந்தார் விவேக்.


இதைப் போன்று சத்யராஜ் நடிக்கும் 'ஜூட்டி' படத்திலும் 'அக்னி நட்சத்திரம்' படத்தில் பிரபு-கார்த்திக் மோதிக் கொள்வது போன்று நடிக்கிறார் விவேக். இதில் விவேக்குடன் மோதுபவர் வடிவேலு.

# ஷாலினிக்குப் பதில் ஹேமமாலினி

'பிரியாத வரம் வேண்டும்' படத்தில் ஷாலினி நடிக்க மறுத்துவிட்டதால் அவர் நடிக்க வேண்டிய சில காட்சிகளை அசப்பில் அவரைப் போலவே இருக்கும் ஹேமமாலினியை வைத்து எடுத்துள்ளார்கள்.

மாதவ… ரவளி

முகப்பில்



பிரசாந்த்-ஜோமோள்
படம்: பிரியாத வரம் வேண்டும்



# சின்னத் திரையில் 'ரிதம்'

'சங்கமம்' படம் திரைக்கு வந்த சில நாட்களிலேயே அதை சன் டி.வி.க்கு விற்று விட்டார் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன். கடந்த சித்திரைப் புத்தாண்டுக்கு சன் டி.வி.யில் ஒளிபரப்பான 'சங்கமம்' தீபாவளிக்கு சக்தி தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டது. நடராஜன் தயாரித்து அண்மையில் வெளியான 'ரிதம்' படத்தையும் சன் டி.வி.க்கு விற்று விட்டார். இதையும் விரைவில் சின்னத்திரையில் பார்க்கலாம்.

சினி விசிட்

# மினி சினி

★ கார்த்திகை வைத்து 'லக்கிமேன்' என்ற படத்தைத் தயாரித்தவர் காட்ர காட்ட பிரசாத் என்பவர். இவர் மீண்டும் கார்த்திகை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

★ அஜீத் ஜோடியாக 'உயிரோடு உயிராக' படத்தில் அறிமுகமான ரிச்சா, தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து வருகிறார். இப்போது இவர் மணிரத்னம் தயாரிக்கும் 'டும் டும் டும்' படத்தில் இரண்டாவது நாயகியாக நடித்து வருகிறார்.

★ கே.பாக்யராஜ் இயக்கி நடித்த 'டார்லிங் டார்லிங் டார்லிங்' படம் கன்னடத்தில் தயாராகவுள்ளது. இந்தக் கன்னடப்படத்தை நடிகர் சரத்குமார் தயாரிக்கிறார்.

★ பாரதிராஜாவின் 'கடல் பூக்கள்' படத்தில் அறிமுகமாகும் பிரதிக்ஷா இப்படம் வரும் முன்னரே முரளி ஜோடியாக 'மனுநீதி' படத்தில் நடித்து வருகிறார். இப்போது இவர் பிரபு நடிக்கும் படமொன்றிலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

★ லிவிங்ஸ்டன் நடித்த 'சுந்தரபுருஷன்' தெலுங்கில் தயாராகவுள்ளது. தமிழில் தயாரித்த சௌத்ரியே தெலுங்குப்படத்தையும் தயாரிக்கிறார். 'மகா கணபதி...' பாடலுக்கு நடனமாடிய லாரன்ஸ் இப்படத்தில் நாயகனாக நடிக்கிறார்.

★ சேரன் இயக்கத்தில் பிரசாந்த்-ஷாலினி நடித்துப் பாதியிலே நின்று போன 'விண்ணோடும் முகிலோடும்' படத்தை தூசி தட்டி எடுத்து மறுபடி படப்பிடிப்பைத் தொடரவுள்ளனர்.

★ விஜயகாந்தை வைத்து 'வாஞ்சிநாதன்' படத்தை இயக்கிவரும் பிரபல மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ் இது முடிந்ததும் அர்ஜுன் நடிக்கும் தமிழ்படமொன்றையும் இயக்கவுள்ளார்.

★ எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் படத்திற்கு 'தோஸ்த்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் சரத்திற்கு ஜோடியாக ரம்பா நடிக்கிறார்.



புதுமுகம் மஞ்சு
படம்: கடலோரக் காதல்

# கௌசல்யாவின் தீபாவளிப் பரிசு

கௌசல்யா தமிழில் நடிக்க வந்தபோது ஹோட்டலில் தான் தங்கியிருந்தார். இப்போதும் ஹோட்டல் வாசம் தான். இவர் தான் நடிக்கும் படங்களில் பணியாற்றுபவர்களுக்கு படப்பிடிப்பின் முடிவில் பரிசளித்துப் பரவசப்படுத்துவார்.

கடந்த தீபாவளி தினத்தன்று கௌசல்யா தான் தங்கியிருக்கும் ஹோட்டலில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கைக்கடிகாரங்கள் பரிசளித்தார்.

# பிரசாந்த் ஜோடியாக வடிக நடிகை

பிரசாந்த் நாயகனாக நடிக்கும் படங்கள் என்றால் நாயகி இந்தி நடிகையாக இருப்பது, பாடல் காட்சிகள் வெளிநாட்டில் படமாக்கப்படுவது எல்லாம் வழக்கம்.

இதே போல பிரசாந்த் நடிக்கும் புதிய படமொன்றில் இவருக்கு ஜோடியாக பிரபல இந்தி நடிகை ரிங்கி கன்னா நடிக்கவுள்ளார்.

இந்தி நட்சத்திரங்களான ராஜேஷ்கன்னா-டிம்பிள் கபாடியா தம்பதிகளின் இரண்டாவது மகள் தான் ரிங்கி. இவரது அக்கா டுவிங்கிள் கன்னாவும் இந்தியில் நடித்து வருகிறார்.

# பாரதிராஜாவின் 'மானஸ்தன்'

'கடல் பூக்கள்' படத்தை அடுத்து பாரதிராஜா இயக்கும் படத்திற்கு 'மானஸ்தன்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ராஜ்கிரண் கதாநாயகனாக நடிக்கும் இந்தப்படத்தில் இளையராஜா-வைரமுத்து இணைந்து பணியாற்றுவதாக இருந்தது. இருந்தும் இந்த முயற்சிகள் கைகூடவில்லை. வேறொரு இசையமைப்பாளர் இப்படத்திற்கு இசையமைக்கவுள்ளார்.

# மீண்டும் நளினி

ராமராஜனுடன் ஏற்பட்ட மணமுறிவை… தொடர்ந்து படங்களில் நடிக்க முயற்சி செய்து வந்தார் நளினி. இப்போது புதிய படமொன்றில் நடித்து வருகிறார்.

'முகவரி' படத்தை இயக்கிய துரை … போது விக்ரம் நடிக்கும் பெயரிடப்படாத படமொன்றை இயக்கி வருகிறார். இதில் இரண்டாவது நாயகனாக நடிக்கும் ரோஜா…திற்கு அம்மாவாக நடிக்கிறார் நளினி.

## பாபிலோனா–ஷகிலா–ஷர்மிலி இணைந்து சூடேற்றும் 'ஆன்டி ப்ளீஸ்'

பாபிலோனா-ஷகிலா-ஷர்மிலி மூவரும் இணைந்து நடிக்கும் புதிய படம் 'ஆன்டி ப்ளீஸ்'.

கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இப்படத்தின் கதாநாயகனாக இம்ரான் கான் என்னும் மும்பாய் புதுமுகம் அறிமுகமாகிறார்.

இப்படத்தின் கதை, திரைக்கதை அமைத்து வெங்கட் என்பவர் இயக்குகிறார்.



சத்யராஜ்-மும்தாஜ்
படம்: லூட்டி

## விக்ரம்-சௌந்தர்யா இணையும் 'கண்டேன் சீதையை'

சில வருடங்களுக்கு முன் மலையாள இயக்குநர் பாலசந்தரமேனன் தமிழில் கமல் நடிக்க இயக்குவதாக இருந்த படம் 'கண்டேன் சீதையை'.

ஏனோ இப்படத்தின் வேலைகள் தொடரவில்லை. இப்போது 'கண்டேன் சீதையை' பெயரில் விக்ரம்-சௌந்தர்யா நடிக்கும் படமொன்று வெளியாகவுள்ளது.

தெலுங்கில் 'தொம்பதி நிலா' என்ற பெயரில் வெளியான படம் தான் தமிழில் 'கண்டேன் சீதையை' என்ற பெயரில் மொழிமாற்றபட்டு வருகிறது.

இப்படத்தின் கதை, திரைக்கதை அமைத்து இயக்கியுள்ளார் பிரபல தெலுங்கு இயக்குநர் கிராந்திகுமார்.

## காதோடு சொல்லுகிறோம்

ரசில் நடிகையின் பெயருடன் தயாரிப்பாளர் ஒருவரது பெயரையும் இணைத்தால் வரும் பெயருடைய வட நாட்டு நடிகைக்கும், ஷாஜகானின் மனைவியின் பெயரைக் கொண்ட நடிகைக்கும் இடையே படவாய்ப்புப் பெறுவதில் கடும் போட்டியாம். இவர்கள் இருவரும் வாய்ப்புகளைப் பெறுவதற்காகப் போட்டிபோட்டுக் கொண்டு தயாரிப்பாளர்களை 'அன்பாகக்' கவனித்து வருகிறார்களாம்.

கேரளத்தில் இருந்து தமிழுக்கு வந்த 'சுவர்ண' நடிகைக்குப் படங்கள் இல்லாததால் சின்னத்திரைக்குப் போனார். அங்கும் வாய்ப்புக்கள் சரிவர அமையாததால் பணத்தேவைக்காகக் 'கலைச்சேவை' செய்ய அடிக்கடி மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய் வருகிறாராம். அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு ஓர் ஆடம்பர பங்களா ஒன்றையும் வாங்கி விட்டாராம்.

இரண்டெழுத்து பூ நடிகை இப்போதெல்லாம் படப்பிடிப்புக்குச் செல்லும் போது இவருக்குப் பாதுகாப்பாக இவரது காதலரான இயக்குநரும் கூடவே செல்கிறாராம். முன்னர் தனியாக படப்பிடிப்புக்குச் செல்லும் போது ஜாலியாக இருக்கும் நடிகை இப்போது காதலர் கூடவே இருப்பதால் 'கம்'மென்று இருந்து வருகிறாராம்.

மூன்னாள் நாயகியான மூன்றெழுத்து 'மா' நடிகைக்கு தமிழில் மட்டுமல்ல வேறு எந்த மொழியிலும் ஒரு படம் கூட இல்லையாம். தயாரிப்பாளர்கள் யாராவது அக்கா, அண்ணி வேடங்களில் நடிக்க, நடிகையை அணுகினால் பதினைந்து லகரம் ஊதியமாக வேண்டும் என்று கறாராகக் கூறுகிறாராம். இதனால் தயாரிப்பாளர்கள் நடிகையின் பக்கம் எட்டிக் கூடப் பார்ப்பதில்லையாம்.



அம்சவிர்தன்-ரேஷ்மா-விசு-சுமித்ரா
படம்: ஆனந்தம் ஆனந்தம்

## ...திகாவுக்குப் போட்டி

...டத்தில் இருந்த சிம்ரானை ஆட்டம் ...வைத்த ஜோதிகாவுக்குப் போட்டியாக ... புதுமுக நடிகை ஒருவர்.

...யான இந்த நடிகை பலருக்கும் ...னவர்தான். சிம்ரானின் உயரம், ... முகச்சாயல் கொண்ட இவர் ...மலை சிம்ரானின் உடன் பிறந்த ...ளவில் தான்.

...கான், சன்னி தியோலுடன் ... 'மாத்ரு ஜே சலாம்' என்ற இந்திப் ...த்து வரும் மோனல் தமிழில் விஜய் ... அறிமுகமாகிறார்.

...டன் 'காதலர் தினம்' குணால் ஜோடி ...மை' ஒன்றே போதுமே' என்ற படத் ...க்கவுள்ளார்.

## சேரன் இயக்கித் தயாரிக்கும் 'ஆட்டோகிராஃப்'

'பாரதி கண்ணம்மா' உட்பட பல வெற்றிப்படங்களை இயக்கிய சேரன் முதல் தடவையாக தயாரித்து இயக்கும் படம் 'ஆட்டோகிராஃப்'.

பிரபுதேவா நாயகனாக நடிக்க ஜோடியாக நான்கு புதுமுக நடிகைகள் அறிமுகமாகிறார்கள். இவர்களுடன் விவேக், சார்லி, ரமேஷ்கண்ணா உட்பட பலர் நடிக்கின்றனர்.

ப்ரியன் ஒளிப்பதிவு செய்ய பரத்வாஜ் இசையமைக்கும் இப்படத்தை கதை, திரைக்கதை, வசனம் அமைத்து தயாரித்து இயக்குகிறார் சேரன்.

## இளைஞர்களின் இயக்குநர்

அஜித்குமாரை வைத்து 'காதல் மன்னன்', 'அமர்க்களம்' ஆகிய படங்களையும், பிரசாந்தை வைத்து 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தையும் இயக்கிய சரண் தற்போது மனோஜ் நடிக்கும் 'அல்லி அர்ஜுனா' படத்தை இயக்கி வருகிறார்.

இப்படம் முடிந்ததும் விஜய் மற்றும் சூர்யா நடிக்கும் இரண்டு படங்களை இயக்கவுள்ளார் சரண்.

## பூமிகா விலகல்

சரத்குமார் இரட்டை வேடங்களில் நடிக்க பவித்ரன் இயக்கும் 'புகழ்' படத்தில் பூமிகா என்ற தெலுங்கு நடிகை நாயகியாக நடிப்பதாக இருந்தது. தயாரிப்பாளர் சொன்ன சம்பளம் ஒத்து வராததால் பூமிகா விலகிக் கொள்ள பூனம் என்ற வைஜெயந்தி நடிக்கிறார். இவர் 'வண்ணத் தமிழ்ப் பாட்டு' படத்தில் பிரபு ஜோடியாக நடித்தவர்.

## நக்மா போய் பானு வந்தார்

பிரசாந்த்-ஜோதிகா நடிக்கும் 'ஸ்டார்' படத்தில் நக்மாவும் முக்கிய வேடமொன்றில் நடிப்பதாக இருந்தது. ஏனோ தெரியவில்லை இப்போது நக்மாவுக்கும் பதிலாக பானுப்ரியா நடித்து வருகிறார்.

## இயக்குநரை அடித்த இளம் நாயகன்

திரையுலக மறுபக்கம் 175

தமிழ்நாட்டிலிருந்து மயன்

ஒரு படத்தின் மூலம் முன்னுக்கு வந்து விட்ட அந்த மொழுமொழு நாயகன் கையில் இப்போது பல படங்கள் உள்ளன.

முதல் படத்தின் வெற்றி அலை ஓய்ந்து விடுவதற்குள் எப்படியாவது இந்த இளம் நாயகனை தங்களது படங்களில் நடிக்க வைக்க பலர் முண்டியடித்து வருகின்றனர்.

இளம் நாயகர்களில் முன்னணியில் இருக்கும் இரண்டு நடிகர்கள் நடிக்க மறுத்து விட்டால், அந்தப் படத்தில் நடிக்க இந்த நடிகரைத் தான் முதலில் அணுகுகின்றார்கள்.

இதனால் சற்று பந்தா காட்டும் இந்த நாயகன் கொஞ்சம் இழுத்தடித்துத்தான் ஒத்துழைப்புக் கொடுப்பார்.

அண்மையில் இந்த இளம் நாயகன் நடிக்க ஒப்புக் கொண்ட படத்தை ஒரு பெரிய இயக்குநரிடம் உதவியாளராக இருந்த 'அழக' இயக்குநர் இயக்குவதாக இருந்தது.

படப்பிடிப்பு ஆரம்பமானது. படப்பிடிப்புக்கள் தமிழ்நாட்டில் உள்ள தென்காசி, மற்றும் குற்றாலம் ஆகிய இடங்களில் நடந்தது.

புதிய இயக்குநர் என்றாலும் இந்த இயக்குநர் முதலில் 'அழகான' நடிகர் ஒருவரை வைத்து படமொன்றை இயக்கும் வேலையில் ஈடுபட்டார். தயாரிப்பாளர் பிரச்சனையால் அப்படம் அப்படியே நின்று விட்டது.

உடனே அதே கதையை வைத்து மூன்றெழுத்து இளம் நடிகரை வைத்து மூன்றெழுத்துப் பெயரில் எடுத்தார். அந்தப் படம் முடிவடைந்து இன்னமும் வெளிவராமல் இருக்கிறது.

இடையில் இந்த இளம் நாயகன் அறிமுகமான படத்தில் மலையாளம் பேசும் வீட்டுக்காரராக நடித்தும் இருந்தார் இந்த இயக்குநர்.

பெரிய இயக்குநரிடம் உதவியாளராக இருந்தவர் என்ற தைரியத்தில் இளம் நாயகனை மிகவும் இம்சைப்படுத்தி வந்தார் இயக்குநர். அதுமட்டுமன்றி நடிகருக்குச் சரியாக நடிப்பு வரவில்லை என்று கிண்டல் வேறு செய்தார்.

தனது முதல் படத்தில் தன்னுடன் நடித்தவர், பெரிய இயக்குநரிடம் உதவியாளராக இருந்தவர் என்று பொறுத்துப் பொறுத்துப் போனார் இளம் நடிகர்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? கடைசிநாள் படப்பிடிப்பில் இயக்குநரது சட்டையைப் பிடித்து இழுத்து அடி அடியென்று அடித்து விட்டார் இளம் நாயகன்.

படப்பிடிப்புக்குழுவினர் தடுத்து விட்டதால் பெரிய அடிதடி ஏற்படவில்லை.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட பெரிய இயக்குநர் இருவரையும் கூப்பிட்டுச் சமரசம் செய்து வைத்தார்.

இளம் நடிகர் மற்றும் இயக்குநர் ஆகியோரின் குருநாதரான அந்தப் பெரிய இயக்குநர் சமரசம் செய்து வைத்ததில் ஒரு சுவாரஸ்யமும் இருந்தது.

ஆம், இந்தப் பெரிய இயக்குநரது சொந்தப்படம் தான் இந்தப் படம்.



விக்னேஷ்-சங்கீதா-ஆர்.சுந்தர்ராஜன்-அலெக்ஸ்
படம்: என்றும் ஆனந்தம்

## சந்தேகம்

சந்தேகம் என்று சொல்லி என்
தேகமெல்லாம் தேடியும்,
ஒன்றும் கிடைக்காவிட்டாலும்
நானின்று சந்தேகப் பிராணி!
***
வாலிபனாய் வட்டமிட்டாலும்
வலிய வரும் சந்தேகம்,
வாலைக் குமரியாய்
சுற்றி வந்தாலும் ஒரே சந்தேகம்!
***
குடும்பஸ்தனாய் வந்தாலும்
கூடவே வரும் சந்தேகம்;
குடு குடு கிழவனானாலும்
கூடியே வருகுது சந்தேகம்!
***
இளமை முதல் முதுமை வரை
கூட வந்த சந்தேகம்,
கல்லறைக்கும் வந்து
கலந்து விடும் எம்முடனே!

மெ.மரியதாஸ்-பண்டாரவளை.

## உலக சமாதான தினம்

சமாதான தினமே
தமிழர்களின் வாழ்வில்
தொல்லைகள் அகன்றிட
சமாதானப் புறா
சமாதானம்
கொண்டு வருக!
புத்துணர்ச்சியூட்டி-நீ
புதுப் பொலிவு தருக
ஈழமண்ணில் சமாதானம்
முகைவிரிக்க
இக்கணமே வருக!
துன்பங்களை நீக்கி
இன்பங்களை அருள்க!
தமிழர்கள் வாழ்வினில்
வசந்தம் வீசிட
சமாதான தினமும்
இனவாதம் இன்றி வாழ்ந்திட
உலக சமாதான தினமே
உவகை தந்து
உயிர்ப்பூட்டிட வருக!
சமாதான உரிமைகள்
இக்கணமே கிடைத்திட
ஐப்பசி பதிரோந் திகதியில்
ஈழமண்ணிலும்
சமாதானம் பெற்ற சமுதாயம்
வோ ஊனறிடவே
தமிழர்கள் இன்புற்று திளைத்திட
வருவாய் எழில் வசந்தமாய்!
வற்றாத சமாதான நதி உதயமாகிட
வாஞ்சையுடன் அழைக்கின்றோம்!

அ.அச்சுதன்-சேனையூர்


## தேன் கிண்ணம்

### கூப்பிடு தூரத்தில் வாழ்க்கை

என்
கவிதைகளை
காதலிப்பதாய்
சொன்னவளே!
இந்த
கவிதைக்காரனை
அழவைத்துப்பார்த்தது
ஏனோ?
•••
அடியேய்,
என் உயிருக்குள்
வேர்விட்ட
உன் உறவுகளின்
லப்.... டப்....
லப்..... டப்....
இறுதித்துடிப்பு!
•••
எறும்பாய்
சேமித்த
என் சந்தோசங்களுக்கு
கொள்ளி வைத்தவளே!
அன்று
நம் உறவுக்கு
துணை வந்த
நிலா விளக்குக்கூட
களவு போய்விட்டது!
•••
நந்தவனத்தில்
பயணம் செய்த
நம் நேசிப்புக்கள்
இப்போது
கரடு முரடான பாதையில்....
•••
உம்மா
வாப்பாவின்
வாழ்வின்
இயக்கத்தில்
திளைத்திருப்பவளே!
இவ்வாழ்வு
இன்னும்
எத்தனை நாளைக்கு
உனக்கு
சோறு போடப் போகிறது?
•••
மண்ணோடு சரிவதற்குள்
அடியேய்,
உனக்கு
இந்த
மச்சானின்
உறவு தேவைப்படும்;
அப்போது,
இந்தப் பிரபஞ்சத்தில்
யார் பெரிது...?
இன்னொன்றும்
மறவாதே.....!
எனது காற்றை
உன்னைத் தவிர
இன்னொருத்தி
சுவாசிக்க முடியாது!
•••
உன்
குமரித்தனம்
முப்பதுகளைத் தாண்டி
பூபாளத்திற்கு மறுக்கலாம்;
அப்போதுகூட
உன்
அனுமதியோடுதான்
நான்
உன்னை வாசிப்பேன்...!

கிண்ணியா-
ஏ.நஸ்புள்ளா.

## 'பாரதி' படநாயகனின் பல முகங்கள்


நிஜ ஷிண்டே

திரையுலகில் படத்திற்குப் படம் வித்தியாசமான தோற்றம்-வேடம் என நடிப்பு பசிக்குத் தீனி போட்டுக் கொள்வது போல் சவாலான பாத்திரங்களில் நடிப்பவர்கள் மிகவும் குறைவு. தமிழில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்குப் பின் கமலஹாசன் வித்தியாசமான வேடங்களில் நடித்து வருகிறார். இந்த


'பாரதி' படத்தில் பாரதியாக


'டாமன்' இந்திப் படத்தில் சேடிஸ்ட்டாக

வரிசையில் அண்மையில் தமிழில் 'பாரதி' படம் மூலம் முகம் தாட்டிய மராத்தி நடிகர் ஷாராஜி ஷிண்டேயையும் சேர்க்கலாம்.

நாடக மேடையில் இருந்து சிலவருடங்களுக்கு முன் வெள்ளித் திரைக்கு வந்த ஷிண்டே நடித்த படங்கள் யாவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. ஷிண்டேயின் படத்தோற்றங்களைப் பார்த்தாலே புரியும்.


'டர்மியன்' இந்திப் படத்தில் அலியாக

## ஆறுதல்

என்னைக் காதலித்து
ஏமாற்றி விட்டு நீ செல்கையில்
எனக்கொரு சிறு ஆறுதல்....
"அண்ணா!" என்று அழைக்காமல்
"நண்பா!" என்று
உன் இதழ்கள் அசைந்ததற்கு....!

ஏறாவூர் அ.அஸீஸ்-குவைத்.

## தீராத வியாதி

சாதி
இரண்டொழிய
வேறில்லை என
சாற்றி விட்டு
ஒளவைப் பாட்டியும்
சென்று விட்டார்
ஆனால்;
அது
இன்னமும்
தீராத வியாதிதான்!

ப.அஜித்தா-
வவுனியா.


## பொன்மொழிகள்

* ஆசைகள் வளர வளரத் தேவைகள் பெருகிக்கொண்டே போகும்.
-பிலோட்டோ-

* பணம் தலைகுனித்து பணியாற்றும் அல்லது தலைகுப்புறத் தள்ளிவிடும்
-ஹோம்ஸ்-

* மருந்து பல சமயங்களில் பலனளிக்காமல் போகக்கூடும். ஆனால் நஞ்சோ ஒரு போதும் பலனளிக்காமல் போகாது.
-ரஸ்கின்-

* மனதில் பகைமையை அடக்கி வைத்திருப்பது நேரடிப் போரைவிடக் கொடியது.
-காந்தி-




## வேப்பங்காட்டு காதலி

வேப்பமரக் காட்டினிலே....
வெட்டியாக வந்தபுள்ள-இந்த
வேப்பமரச்சாரலினால்-உந்தன்
வெள்ளைச்சேலை விலகுதடி!
***
சேலைக்குள்ளே சிவந்தமச்சம்
சாரல் பட சிலிர்க்குதடி!
வஞ்சி உந்தன் இடையைக் கண்டால்
வாழைத் தண்டும் வாட்டமடி!
***
பாவை உந்தன் பாதம் பட்ட....
பாதை கூடப் பாடுதடி!
காலில் வரும் கொலுசொலியால்...
காலமெல்லாம் மறக்குதடி!
மண்ணைவிட்டு விண்ணையண்டை
பார்வையினை நகர்த்துகையில்
பால் நிலவு பக்கம் நின்று
பால் ஒளியை வீசுதன்றோ!
***
மேகமில்லா நீல வானம்
கண்ணுக்குள்ளே கொண்ட பெண்ணே!
காதலென்னும் மாததிரையை
கண்ணாலே தந்து-என்னை
கவிதை எழுத வைத்து விட்டு
கையசைத்துச் செல்கிறாயே!

த.விதுரன்-
மட்டக்களப்பு.

## நில்-கவனி-முன்னேறு

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு அதிகமாக கஷ்டப்பட்டு செயலாற்ற வேண்டும். ஒன்றுமே செய்யாமல் கால் ஆட்டிக் கொண்டு சும்மாவே உட்கார்ந்து இருந்திருந்தால் வெற்றி நமக்குக் காணக் கிடைக்காத தங்கமாகத்தான் இருக்கும்.



வெற்றிக்கும் நமக்கும் தொடர்பே இல்லாமல் போய்விடும். 'பிறந்து விட்டோம்; வாழ்கின்றவரை வாழ்வோம்' என்று அசட்டையாக இருந்தால், வெற்றி என்பதனையே அறிய முடியாது.

இரண்டு டொலர் கூலிக்காக பத்து மணி நேரம் உருளைக்கிழங்கு வயலில் வேலை செய்த ராக்பெல்லர், பின்பு உலகிலேயே கோடீஸ்வரராக உயர்வு பெற்றதற்குக் காரணம் விடாமல் வேலையைச் செய்ததுதான்.

ராக் பெல்லர் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். விவசாயத் தொழிலில் அவருக்கு நன்கு ஆர்வம் இருந்தது. வாழ்க்கையை நடத்த அவர் முதலில் உருளைக்கிழங்கு வயலில் வேலை செய்தார்.

வேலை அதிகமாகவும் கூலி குறைவாகவும் இருக்கிறதே என்று அவர் நினைக்கவில்லை: பத்து மணி நேரம் வேலை செய்தும் கொஞ்சமாகப் பணம் கிடைக்கிறதே என்று அவர் வருந்தவில்லை.

தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்துவந்தார். வயலில் வேலை செய்து கொண்டே மற்ற வேலைக்கும் முயற்சி செய்தார். எந்த வேலையில் ஈடுபட்டாலும் அதனை முழுமையாகச் செய்தார்.

அவர் முழு கவனத்தையும் செலுத்தி செய்யும் தொழிலைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார். நாளடைவில் அவர் சொந்தமாகவே ஏதாவது தொழில் நடத்த வேண்டும் என்று எண்ணினார்.

அதன் பயனாக அவர் எண்ணெய் தொழிற்சாலையை ஆரம்பித்தார். அவருடைய கடுமையான உழைப்பாலும், இரவு பகல் என்று பார்க்காமல் வேலை செய்ததாலும் அக்கம்பெனி சிறிது காலத்திலேயே அதிக லாபத்தைப் பெற்றுத் தந்தது. சாப்பிடும் நேரம், உறங்கும் நேரம் தவிர எப்பொழுதும் கம்பெனியிலே இருந்து செயல்பட்டார்.

நாளடைவில் அக்கம்பெனி உலகத்தின் எண்ணெய் ஏற்றுமதியையும் விலையையும் நிர்ணயிக்கக்கூடிய வகையில் வளர்ந்து உன்னத நிலையை அடைந்தது. இந்த அளவுக்கு அவரால் மட்டும் எப்படி உயர முடிந்தது?

வெற்றி பெறுவதற்கு அடிப்படையாக என்னென்ன தகுதிகள் இருக்கவேண்டும் என்று ராக்பெல்லரே விவரிக்கிறார். இதனைக் கடைப் பிடித்துத்தான் அவர் வெற்றி பெற்றார்.

வெற்றிப் பாதையில்தான் போகிறோம் என்று ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொள்ள வேண்டும். உண்மையாகவும் நம்பிக்கையுடனும் செயலாற்ற வேண்டும். எக்காரணம் கொண்டும் மனதைத் தளர விட்டுவிடக் கூடாது.

உண்மையுடனும் விசுவாசத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். சிறிய வேலை தானே என்று அலட்சியம் செய்யக்கூடாது. செய்யும் தொழிலைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். கஷ்டப்பட்டு வேலை செய்யாவிட்டால் முன்னேற்றத்தைக் காண முடியாது. விளையாட்டு, பொழுது போக்குகளில் வீண் ஈடுபாடு கொள்ளக் கூடாது.

மற்றவர் எதிர்பார்ப்பதை விட அதிகமாகச் செயலாற்ற வேண்டும். லாபம் சம்பாதிக்கும் வழியில் மட்டுமே கவனத்தைக் குவிக்கவேண்டும். இவருடைய அறிவுரையின் படி நடந்தால் நிச்சயம் நம்மாலும் வெற்றியை அடைய முடியும்.

அவருக்கு இருக்கும் ஆற்றல், திறன், மூளை எல்லாம் நமக்கும் இருக்கிறது. அவரைப் போன்றே கை கால்களும் உள்ளன. ஆனால் அவர் எப்படி செயல்பட்டாரோ அதே தன்மையில் செயல்படாமல் போவதனால் தான் வெற்றி நம்மிடம் வரத் தயங்குகிறது.

இன்றைய தினத்திலிருந்து அவர் எப்படி செயல்பட்டாரோ அதன்படியே நாமும் செயல்பட ஆரம்பிப்போம். அவரைப் போலவே நம்முடைய பெயரும் நான்கு திசையிலும் தெரியும்படி வாழ்வோம்; வளம் பெறுவோம்.

## பேனா நண்பர்கள்



பெயர்: சி.சிவதர்ஷன்
வயது: 19
முகவரி: உமா மில் வீதி,
கொம்மாதுறை,
செங்கலடி.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: சி.மஞ்சுபீரிஸ்
வயது: 17
முகவரி: ஜீவநகர்
நலன்புரி நிலையம்,
பரிகாரி கண்டல், முருங்கன்.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## இந்தவாரம் உங்கள் பலன்

19.11.2000 முதல் 25.11.2000வரை

ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
சனி வக்கிரகபலன் எதிர்பார்த்திருந்த திருமணம், பயணம் என்பன வெற்றி பெறும். தொழில் கிடைக்காதோருக்கு வசதிகள் காணப்படும். கல்வி எதிர்காலத் திட்டங்கள் போடப்படும். அச்சுவினிக்காரருக்கு யோகமான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

**இடபம் :**
மனதை வாட்டும் கஷ்டம் தீரும். குடும்பத்தில் உள்ள பணச்சிக்கல் கடன் பிரச்சனைகள் நண்பர்கள் உறவினர்களால் தீரப்பெறும். தொழில் நிலை மந்தமாகக் காணப்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். ரோகிணி, மிருகசீரிடக்காரர் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: ஊதா; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 20, 24.

**மிதுனம் :**
தொழில் விருத்திபெறும். கடன் பிரச்சனைகள் பைசலாகும். உள் முரண்பாடுகள் தீரும். வெளியூர் பிரயாணம், எடுத்த கரும வெற்றி பெற நீண்ட நாள் ஆலய நேர்த்திக் கடன் செலுத்தவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : வெண் மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 25.

**கடகம் :**
பொருளாதாரம் சீரடையும். உறவினரிடையே பிணக்குகள் தோன்றக்கூடும். பிள்ளைகளின் கல்வி வசதிகள் அபிவிருத்தியடையும், வாகன பயணம் மற்றும் கொடுக்கல் வாங்கல்களில் கவனம் எடுக்கவும். பொன்னுடன் தொழில் செய்வோர் அதிகவருவாய் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 19, 24.

**சிம்மம் :**
பிரயாணம் வெற்றிதரும். பிரிந்த உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். காதலில் வெற்றி கிட்டும். தாய் வழியால் உதவிகள் கிட்டும் வாகனயோகமுண்டு. பிள்ளைகளின் மகிழ்ச்சிக்குரிய சுப சம்பவங்களும் நடைபெறும், மகர, பூர நட்சத்திரக்கு நன்மைகள் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

**கன்னி :**
பயண அலைச்சலுக்கு இடமுண்டு. புதிய தொழில் வாய்ப்பு வசதிகள் அமையும். மாமன் வழியோகத்தால் பெரிய நன்மைகள் ஏற்படும். தொழில் நுட்ப, இயந்திர தொழில் செய்வோர்கள் முன்னேற்றம், இலாபம் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**துலாம் :**
கஷ்டமான நிலை மாறும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். பணவசதிகள் அதிகரிக்கும். காரிய சித்தியும் கணவரால் சிற்சில நன்மைகளும் காணப்படும். பல நாட்கள் நிலவிய தடைகள் நிவர்த்தி பெறும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் ; 19, 23.

**விருட்சிகம் :**
எதிர்பார்த்த இரகசிய விடயங்கள், கைக்கு வந்து சேரும். மனதில் பெரிய மாற்றம் ஏற்படும். பொருளாதார வசதிகூடும். வெளியூர் தொடர்புகள் பலனளிக்கும். விவசாயம் விருத்தியடையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மரூன் வர்ணம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 24.

**தனுசு :**
கல்வி முயற்சி தொழில் சிக்கல்கள் தீரும். சில மாறுபட்ட தொழிலும் புதிதாக அமையும். திருமணப் பேச்சுக்கள் துரிதப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு வர்ணம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

**மகரம் :**
மனதில் மகிழ்ச்சி தோன்றும். பெண்களுக்கு பெரிய வசதிகளுடன் பணப் பெருக்கமும் காணப்படும். பரீட்சைகள், கல்வி முயற்சிகள் வெற்றியடையும். விவசாய, கைத்தொழில் செய்வோர்கள் இலாபம் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : ரோஸ் வர்ணம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 22, 25.

**கும்பம் :**
குடும்பத்தில் கலகம் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்கள், பிரச்சனைகளைக் கொடுக்கும். வார இறுதியில் நோய் துன்ப மருத்துவச் செலவுகள் அமையும். பிள்ளைகள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவேண்டும். முதலீடுகளில் கவனமாக இருக்கவும். சதய, பூரட்டாதிக்காரர் எச்சரிக்கையாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண: 07.
அதிஷ்ட திகதிகள் : 20, 25.

**மீனம் :**
பிரயாண ஒழுங்குகள் இடம் பெறும். பிரிந்த உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். சிக்கல்கள் மறையும். ஆலய தரிசனமும் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கிடைக்கும். உத்திரட்டாதி பெண்களுக்கு உயர்வான பலன்கள் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்


## உங்கள் குழந்தைகளும் நல்ல புத்தகங்களும்

உங்கள் குழந்தைகளுக்கு நல்ல நண்பர்கள் அமைய வேண்டும் என நீங்கள் விரும்பினால் அவர்களுக்கு நல்ல புத்தகங்களைக் கொடுங்கள்.

மனிதனை முழுமனிதனாக ஆக்குபவை புத்தகங்களே.

இளம் பிராயத்திலேயே புத்தங்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி வளர்த்து விட்டீர்கள். எனில். உங்கள் குழந்தை சீரும். சிறப்பும் பெறும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் பெற்றோரில் பெரும்பாலானோர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்துவதில்லை. ஏதோ பள்ளிக்கூடப்புத்தகங்களை வாங்கிக் கொடுத்துப் பொதி சுமக்க வைத்து விட்டால் அதுவே பெரிய சாதனை என்கின்ற நினைப்பில் அவர்கள் காலம் ஓடிக் கொண்டிருக்கிறது.



இப்படிச் சொல்வதால் பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள் கல்வி போதிக்கவில்லை என்ற அர்த்தமில்லை. அவை மட்டும் போதாது என்பது தான் உண்மை.

குழந்தையின் கற்பனை சக்திக்கும், படைப்பாற்றலுக்கும், துடிப்பிற்கும் தீனி போடும் புத்தகங்கள் அவர்களுக்குத் தேவைப் படுகின்றன. இந்த தேவை நிறைவு செய்யப்படும் போது அவர்களது உள்ளமும் சிந்தையும் விரிந்து மலர்கிறது. நிச்சயமாகக் குழந்தைகளுக்கெனவே தனியாகப் புத்தகங்கள் படைக்கப்படுகின்றன. கருத்துக்களைச் சுமையாகத் திணிக்காமல் சுலபமாக ஊட்டுவதே குழந்தைகளுக்கான படைப்புகளின் இலக்கு. இவற்றின் தனித் தன்மைகளாவன:

- ⋆ எளிய நடை.
- ⋆ குறைவான உரை நடை.
- ⋆ தெளிவான, பெரிய அச்செழுத்துக்கள்.
- ⋆ அதிகமான படங்கள்-குறிப்பாக வண்ணப் படங்கள்.
- ⋆ தரமான தாள்.
- ⋆ நல்ல பைண்டிங்.
- ⋆ மிக அதிகமான பக்கங்கள் இல்லாமல் இருந்தல்.

## பாலும் பயனும்

புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்க, கண்டுபிடிக்க புதிய நோய்களும் வருகின்றன. முற்காலத்து மனிதன் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து வந்தான். நோய்தீர்க்கும் பொருட்கள் எவ்வாறு நோயைக் குணப்படுத்துகின்றன. என்பதை 'வர்ம சூத்திரம்' என்ற நூல் வழி காட்டுகின்றது. அதில் சில வகைப் பால்கள் தரும் நலன்கள் என்ன என்பதைக் கூறியுள்ளது.

**பசுவின் பால்:**

புண், சூலை, வெள்ளை, வலுவின்மை, மெலிவு ஆகியவற்றைப் போக்குகின்றது.

**வெள்ளாட்டுப்பால்:**

வாத பித்தம், உயிர்ப்பு நோய், சளி, சீதபேதி, வாதவீக்கம் போன்றவற்றை நீக்கிப் பசியை ஏற்படுத்தும்.

**செம்மறியாட்டுப் பால்:**

இது. சிலேத்தும நோய், பித்தநோய், வயிற்றுப் பெருமல் ஆகியவற்றைக் குணப் படுத்தும்.

**ஒட்டகப்பால்:**

இது பசி மந்தம், வாத சூலை, பலவகைக் கரப்பான், இருமல், இளைப்பு, ஆகியவற்றைக் குணப்படுத்தும். உடலுக்கு வலுவைக் கொடுக்கும்.

**எருமைப்பால்:**

திமிர்வாதம் ஏற்படுத்தும். அறிவுக் கூர்மையைக் குறைக்கும். மந்தகுணம் ஏற்படும்.



## வீட்டுக் குறிப்புகள்

⋆ வெள்ளைத் துணிக்கு நீலம் போடும் போது திட்டுத்திட்டாகப் படிந்து விடுகிறதா? கவலைப்படாதீர்கள். ஒரு சிட்டிகை சுத்தமான உப்பை நீலத்துடன் கலந்து போட்டுப் பாருங்கள். ஒரே சீராக இருக்கும்.

⋆ தோலில் செய்யப்பட்ட பொருட்களை பாலில் நனைத்த துணியால் துடைத்தால் அது புதிது போல ஆகிவிடும்.

⋆ நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள் தினசரி காலையிலும், மாலையிலும் பசும்பாலில் இரண்டு தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால் நரம்புகள் உறுதிபெறும். திடகாத்திரமாகத் திகழலாம்.

⋆ பற்கள் பளபளக்க பற்பசை மட்டுமல்ல உங்கள் பிரஷ்ஷும் கூடத் துணை செய்யும். பற்பசை கொண்டு பல் துலக்கும் முன் உங்கள் பிரஷ்ஷை சில நிமிட நேரம் எலுமிச்சைச் சாற்றில் ஊறவைத்து விட்டு அதன் பின் பசையை அதில் படிய வைத்து பல்துலக்கினால் பற்கள் பளபள ஒளி பெறும்.

⋆ இரசம் அல்லது குழம்புக்கு அவசரமாகப் புளி கரைக்கும் போது வெந்நீரில் கரைத்தால் விரைவில் கரைத்துவிடலாம் என்பதைப் பலரும் அறிவர். அதே போல குளிர்ந்த ஐஸ் தண்ணீரில் கரைத்தாலும் விரைவில் புளி கரைந்துவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

⋆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

⋆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

⋆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** IP

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-11-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 63 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

பில் கிளின்ரன் முன்னர் அரக்கன்சாஸ் மாநிலத்தின் ஆளுநர் பதவியில் இருந்தார். அவருடைய அலுவலக பணியாளர்களில் ஒருத்தியாக பவுலா ஜோன்ஸ் கடமை பார்த்தாள். இக்காலகட்டத்தில்-1991ஆம் ஆண்டு மே மாதம் எக்ஸ்செல்சியர் ஹொட்டலில் வைத்து, கிளின்ரன் தன்னை பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்த தூண்டினார் என்று பவுலா ஜோன்ஸ் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தாள்.

ஜனாதிபதி கிளின்ரனுக்கு எதிராக பவுலா ஜோன்ஸின் சார்பாக வழக்கை நடத்தியவர் கென் ஸ்டார் என்ற செனெட்டர்.

எக்ஸ்செல்சியர் ஹொட்டலில் தங்கியிருந்த போது, தன்னை அருகே அணைத்த கிளின்ரன், தன்னை ஒருகையால் அழைத்தவாறு, "மறு கையை எனது முழங்காலை முதலில் தொட்டு மெல்ல மெல்ல மேல் நோக்கி மெதுவாக அரக்கிக் கொண்டிருந்தார். ஆரம்பத்தில் இந்த அதிர்ச்சியைத் தாங்கமுடியாமல் வியப்புற்று செயலற்றிருந்த நான், துடித்தெழுந்து அறையைவிட்டு வெளியேற முயன்றேன். ஆனால் அறையின் கதவை உள்ளிருந்தவாறே கிளின்ரன் பூட்டி விட்டிருந்தார்," என்று பவுலா ஜோன்ஸ் தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தாள்.

இந்த வழக்கில், அதிபர் கிளின்ரன் பெண் பித்துப்பிடித்தவர் என்று நிரூபிப்பதற்கான சான்றுகளைச் சேகரிப்பதற்கு கென் ஸ்டார் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார். அவருடைய குழுக்களைச் சேர்ந்த ஒருவரிடம் லிண்டா ட்ரிப் மாட்டிக் கொண்டாள்.

லிண்டா மூலமாக மோனிக்காவுக்கும் கிளின்டனுக்குமிடையேயுள்ள உறவுகள் பற்றிய விபரங்கள் கிட்டின. முக்கியமாக கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்கும் இடையில் இடம்பெற்ற நெருக்கமான காதல் தொடர்பு பற்றிய விவரங்கள் அடங்கிய தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்பட்ட நாடாக்களும் அகப்பட்டன.

தனது உயிருக்கு உயிரான சிநேகிதி என்று மோனிக்கா நம்பியிருந்த லிண்டா ட்ரிப் பணத்துக்காக நம்பிக்கை துரோகியாக மாறி மோனிக்காவை மாட்டி விட்டிருந்தாள்.

அதிபர் கிளின்ரன் ஜனநாயகக் கட்சியை சார்ந்தவர். ஆனால் செனெட்டர் கென் ஸ்டார் குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர். தனது மாற்றுக்கட்சிக்காரரான அதிபர் கிளின்ரனை குற்றவாளியாகக் கண்டு அவருடைய பதவியை பறிக்கவே ஸ்டார் திட்டமிட்டிருந்தார். இதற்குச் சாதகமாக மோனிக்காவின் கிளின்ரனுடனான தொடர்பு பற்றிய முக்கியமான தகவல்களும் கிடைத்திருந்தன. செனேட்டர் கென் ஸ்டாரின் உதவியாளர்கள் சேகரித்த கிளின்ரனின் பாலியல் லீலைகள் தொடர்பான மற்றுமொரு தகவலில், 20 வருடங்களுக்கு முன்னர் கிளின்ரனுடைய பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட அரகன்ஸ்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் தகவலும் கிடைத்தது. ஆனால் வாக்கு மூலமளிக்க தான் தயாரில்லை என்று அப்பெண் மறுத்துவிட்டாள்.

டிசம்பர் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தபடி மோனிக்கா வெள்ளை மாளிகைக்கு போய்ச் சேர்ந்தாள்.

முன்னதாகவே அங்கு வந்திருந்த பெட்டி கியூரி ஒவல் அலுவலகத்தில் இருந்து வெளியேறி தன்னுடைய அலுவலகத்திற்கு போய் விட்டாள்.

கிளின்ரன் ஒரு மேசையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பையை சுட்டிக்காட்டி, "அதோ அதை எடுத்துக்கொள்! நான் குறிப்பிட்ட எனது கிறிஸ்மஸ் பரிசுகள் அதற்குள்ளே தான் இருக்கின்றன" என்று கூறினார். மோனிக்கா அதனை எடுத்தாள் பிரித்தும் பார்த்தாள் அந்த பையினுள் பலவகையான பொருட்களுடன் சொக்கலட்டுகளும் காணப்பட்டன.

ஏற்கனவே கிளின்ரன் மோனிக்காவுக்கு கொடுத்திருந்த-தொப்பியில் அணியும் ஊசி பற்றிய சமாச்சாரத்தை ஒட்டியே பவுலா ஜோன்ஸ் வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காகவே மோனிக்காவுக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கப்பட்டிருந்தது. இது தெரிந்திருந்தும் கூட, கிளின்ரன் மென்மேலும் மோனிக்காவுக்கு பரிசுகளை வழங்கி இருந்தார். மோனிக்காவும் தன்னுடன் பல பரிசுப் பொருட்களை எடுத்துக் கொண்டு போய் கிளின்ரனுக்கு கொடுத்தாள். மோனிக்காவின் பரிசுப் பொருட்களில் பிரதானமாக ஒரு கறுத்த கண்ணாடியும் இருந்தது. மோனிக்கா கொடுத்த கறுத்தக் கண்ணாடியை அணிந்திருந்த மாதிரியான கிளின்ரனின் ஒரு தோற்றம் 1998 ஜனவரியில் வெளியான ஒரு சஞ்சிகையில் பிரசுரமாகி இருந்தது. கிளின்ரன்-மோனிக்கா இருவருக்குமிடையிலான தொடர்பு பற்றிய தகவல்கள் வெளியான பின்னரே கிறிஸ்மஸ் பரிசுகள் இருவருக்கு



மிடையே பரிமாறப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, மோனிக்கா ஆவலுடன் எதிர்பார்த்த முக்கியமான பரிசு அவளுக்குக்கிடைத்தது. அவளை இழுத்து அவளுக்கு முத்தம் கொடுத்தார். ஒவலின்

## கடைசிச் சந்திப்பு



பின்புறமாகவிருந்த கிளின்ரனின் ஒய்வு அறையில்தான் அப்போது இருவீரும் இருந்தனர்.

முத்தமிடும் போது, கிளின்ரனிடம் வழமையாக இருக்கும் ஈடுபாட்டை அப்போது மோனிக்காவால் அவதானிக்க முடியவில்லை. தனது கண்களை மெல்லத்திறந்து கிளின்ரனை நோக்கினாள். அவருடைய கண்கள் அகலத்திறந்து வேறொருபுறம் பார்த்த வண்ணம் இருந்ததைக் கண்டாள். உடனடியாகக் கிளின்ரனை தனது கைகளால் தள்ளி விட்டாள். அவளுடைய கண்களில் நீர் சுரந்திருந்தது. "விருப்பமில்லாமல் தரும் முத்தம் எனக்குத் தேவையில்லை" என்று சிணுங்கினாள்.

கிளின்ரன் மன்னிப்புக் கோரினார். "கோபித்துக் கொள்ளாதே கிடோ; யாராவது பார்க்கிறார்களோ என்ற பயம் ஏற்பட்டு விட்டது. அதுதான் கண்களைத்திறந்து பார்த்தேன்!" என்று கெஞ்சினார்.

மோனிக்கா கிளின்ரனின் கையைப்பற்றி இழுத்துக் கொண்டுபோய் மற்றுமொரு அறைக்குள் புகுந்தாள். அங்கு எந்தவிதமான அச்சமுமின்றி இருவரும் நிம்மதியாக முத்தமிட்டனர்.

அன்றைய தினம் இருவரும் ஒரு மணிநேரம் வரை உரையாடிக் கொண்டிருந்தனர். பவுலா ஜோன்ஸ் விசாரனைகளின்போது தான் எந்த வகையிலும் கிளின்ரனைக் காட்டிக்கொடுக்கப் போவதில்லை என்று வாக்குறுதி அளித்தாள்.

மோனிக்கா நியூயோர்க் போகப் போவது தொடர்பாகவும் பேச்சுக்கள் இடம்பெற்றன. வாஷிங்டன்-முக்கியமாகத் தன் அன்புக்குரியவர் வாசம் செய்யும் ஒரிடத்தை விட்டு வெளியேறப் போவதை எண்ணியதும் மோனிக்கா கண்ணீர் சிந்தினாள்.

கிளின்ரன் அவளை அணைத்து ஆறுதல் கூறினார். அவளை விட்டு பிரிந்து இருப்பது துயரம் தரும் செய்தியாகவே அவருக்கும் இருந்தது. ஆனால் இருவரும் நெருக்கமாகப் பழகி அன்னியோன்யமாக உறவாடும் சந்தர்ப்பம் இனிமேல் ஏற்படப்போவதேயில்லை என்ற உண்மையை அவர்கள் இருவருமே அப்போது உணர்ந்து இருக்க வில்லை.

கண்களை துடைத்துக் கொண்டு அறையில் இருந்த கண்ணாடியில் தனது முக அலங்காரங்களைச் சீர் செய்து கொண்டு ஒவலை விட்டு மோனிக்கா வெளியேறினாள்.

கிளின்ரனும் மோனிக்காவும் அன்றைய தினம் பேசிக் கொண்டபடி, கிளின்ரன் அவளுக்கு அளித்த சகல பரிசுப் பொருட்களையும் சிலகாலம் வரை பெட்டிக் கியூரியிடம் ஒப்படைப்பதென முடிவு செய்தனர். அன்று மதியம் பெட்டி கியூரியின் இல்லத்துக்கு தொலைப்பேசி மூலம் தொடர்பு கொண்ட மோனிக்கா, பரிசுப் பொருட்களை ஒப்படைப்பது தொடர்பாக பேசிக் கொண்டனர். கிளின்ரன் கொடுத்திருந்த தொப்பியில் அணியும் அலங்கார ஊசியை தனியானதோர் சிறிய பொதியாக அமைத்து 'இதனை தூர எறிந்துவிட வேண்டாம்' என்று எழுதி வைத்தாள். அவற்றை அன்று மாலையில் கொண்டு போய் கியூரியின் இல்லத்தில் ஒப்படைத்தாள். தொப்பி ஊசி பொறிக்கப்பட்டிருந்த அந்த குறிப்பிட்ட பொதியை, கியூரி தனது படுக்கையின் தலையணையின் கீழ் பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

புது வருடம் மோனிக்காவை பொறுத்த மட்டில் மிகவும் சோகமயமாக இருந்தது. தனது சிநேகிதியான ஆஸ்லே ரேயின்ஸ் என்பவளை அழைத்துக் கொண்டு, அப்பொழுது பிரபலமாக பேசப்பட்ட 'டைட்டானிக்' திரைப்படத்தைப் போய் பார்த்தாள். இப்படம் அவளுக்கு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் இருந்தது. அக்கதை தன்னுடைய சொந்த வாழ்க்கையையே பிரதிபலிப்பது போல் இருந்தது. உயர்ந்த குடியில் பிறந்து செல்வச் சீமாட்டியாக வாழ்ந்த ஒரு பெண்ணை அடைவதற்கு முடியாமல் ஒர் ஏழை இளைஞன் படும் துயரத்தைச் சித்தரிக்கும் டைட்டானிக் கதை அவளை வெகுவாக உலுக்கிவிட்டது. துயரத்தை மறக்கப் போய் துன்பக் கடலில் குதித்தது போல் இருந்தது.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

**கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!**


**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

தி.மீரா,
இல.192/110, கிரான்பாஸ் வீதி,
கொழும்பு-14.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



## பாப்பா முரசு சிறுகதை

# செய்யுளுக்கு என்ன பொருள்

மகான் ஒருவர் மன்னனிடம் வந்தார். சமஸ்கிருதச் செய்யுள் ஒன்று எழுதப்பட்ட ஓலை ஒன்றை மன்னரிடம் கொடுத்தார்.

மன்னனுக்கு சமஸ்கிருதம் படிக்கத் தெரியாது.

"இது என்ன?" என்றான்.

"இது ஓலை. இதில் செய்யுள் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருளை உன்னால் ஒரு வருடத்தின் பின்னர் தான் புரிந்து கொள்ள முடியும்," என்று கூறி விட்டு அவர் போய்விட்டார்.

உடனே அரசன், மகான் சொன்னது உண்மையா எனச் சோதிக்க விரும்பினான்.

புலவர்களை வரவழைத்தான். ஓலையைக் காட்டினான். அவர்கள் அதைக் கையில் வாங்கியதுமே, படித்துப் பொருள் கூறி விட்டனர்.

'அந்த மகான் இதன் பொருளைப் புரிந்து கொள்ள ஒரு வருடம் ஆகும் என்றல்லவா கூறினார்? இவர்கள் ஓலை நறுக்கைப் பார்த்ததுமே பொருள் கூறுகிறார்களே....? எனவே, நிச்சயம் இவர்கள் கூறும் பொருள் தவறாகத் தான் இருக்கும்,' என்று நினைத்தான் மன்னன்.



இப்படி எண்ணியவன் செய்யுளுக்குப் பொருள் கூறிய அத்தனை புலவர்களையும் சிறையில் அடைத்து விட்டான்.

சில நாட்களின் பின் ஒரு பெரும் புலவர் அரசனிடம் வந்தார். அரசன் அந்த ஓலையை அவரிடம் கொடுத்து,

"இந்தச் செய்யுளின் பொருளை உங்களால் கூற முடியுமா?" என்று கேட்டான்.

"ஓ முடியுமே...." என்ற புலவர், "ஆனால்...." என்று பின்வாங்கினான்.

"ஒன்றுமில்லை..... இதன் பொருளைக் கூற, எனக்கு ஓராண்டு அவகாசம் வேண்டும்," என்றார் புலவர்.

அதைக் கேட்டதும், அரசனுக்கு இந்தப் புலவரிடம் நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

"சரி.... அப்படியானால் அந்த ஓராண்டு முழுவதும் இந்த அரண்மனையிலேயே இருந்து, என் குருவாகச் செயற்படுங்கள்!" என்று வேண்டிக்கொண்டான்.

புலவரும் அதற்குச் சம்மதித்தார்.

அரண்மனையில் அரசன் தனியாக இருக்கும் போது, புலவர், சில சமஸ்கிருத எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்தார். பிறகு சொற்களைக் கற்பித்தார்.

பின்னர் சிறுசிறு வாக்கியங்கள், அதன் பிறகு இலக்கண விதிகள்.... கடைசியாகச் சில சமஸ்கிருதப்புத்தகங்களைப் பயிற்றுவித்தார். இவ்விதம் ஒரு வருடகாலம் மெல்ல மெல்லக் கடந்து, கெடு முடியும் நாள் வந்தது. அப்போது புலவர் மன்னனிடம்,

"எங்கே அந்தச் செய்யுள் எழுதப்பட்ட ஓலை நறுக்கு?" என்றார்.

"இதோ" என்றவாறு அரசனே போய் எடுத்து வந்தான்.

"அதில் உள்ள செய்யுளுக்கு நீங்களே பொருள் கூறிப் பாருங்கள்," என்றார் புலவர்.

அரசன் நறுக்கைப் படித்தான். உடனே அவனுக்கு அச் செய்யுளின் பொருள் புரிந்து விட்டது.

"இதற்கு முன்பு எல்லாப் புலவர்களும் கூறிய அதே பொருள் தானே எனக்கும் தோன்றுகிறது. அப்படியானால், அவர்கள் எல்லாம் கூறியதை ஏற்காமல் அவர்களைச் சிறையில் தள்ளி விட்டேனா?" என்றான் புலவரிடம்.

"ஆம் மகாராஜா," என்ற புலவர், "எந்தச் செயலும் மெல்ல மெல்லத்தான் நிறைவேறும். ஒரே நேரத்தில் எல்லாமாக எதுவும் நிறைவேறாது. அதாவது ஒவ்வொரு படியாகக் கடந்து ஏறினால் தான் வீட்டின் மேல் மாடியை அடைய முடியும்," என்றார்.

புலவர் சொன்னதை அரசன் நன்கு புரிந்து கொண்டான்.

அவன் தான் செய்த தவறை உணர்ந்து திருந்தினான். சிறையில் இருந்த புலவர்களை விடுதலை செய்து, அவர்களுக்குப் பொன்னும், பொருளும் வாரி வழங்கி அனுப்பி வைத்தான்.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **25.11.2000.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 369**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 367

**பரிசுக்குரியவர்:**
ஏ.எம்.ஐ.எஃப்.ஜெரோஸா
மஹ்முட் மகளிர் கல்லூரி, கல்முனை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| க.தயாளன், தமிழ் மத்தியமகா வித்தியாலயம், வவுனியா. | எஸ். ஜோசப் எடிசன், இஸ்பிரிங்வெளி, 7ம் பிரிவு, பதுளை. |
| பா.பானுஷா, சாந்தகிளேயர் மகளிர் வித்தியாலயம். கொழும்பு 06. | சி.நிஷந்தன், புனி.செபஸ்தியார்(ஆ)ம.ம.வி, மன்னார். |
| ச.துஷாந்தினி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரி, ஹட்டன். | எஸ்.நிரோசன், நு/கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம், கொட்டகலை. |
| கே.சந்திரிக்கா, புனித அன்னம்மாள் கல்லூரி, வத்தளை. | தி.யோகினி, ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| ப.போல்ராஜ், 40/15, புகையிரதநிலைய விடுதி, கொழும்பு 02. | ச.மயூரா, மட்/வின்சன்ற் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு, |

# காண்டாமிருகம்



நிலத்தில் வாழும் மிகப் பெரிய மிருகங்களில் காண்டாமிருகமும் ஒன்று. ஐந்துவகைக் காண்டாமிருகங்கள் உள்ளன. அவற்றில் மூன்று வகை ஆசியாவிலும், இரண்டு வகை ஆபிரிக்காவிலும் உள்ளன. இந்தியாவில் வசிக்கும் ஒற்றைக் கொம்புக் காண்டாமிருகம் ஆசிய வகைக்காண்டா மிருகங்களில் மிகப் பெரியது. நேபாளம், இந்தியாவில் உள்ள மேற்கு வங்கம், அசாம் ஆகிய காடுகளில் மட்டும் தான் இவை காணப்படுகின்றன.

காண்டாமிருகங்களுக்கு மிகப் பெரிய உடலும் சிறிய கால்களும் உள்ளன. அவற்றிற்கு ஒன்று அல்லது இரண்டு கொம்புகள் உண்டு. இதன் தோல், மடிப்பு, மடிப்பாகக் காணப்படும். அவை ஐந்தடி உயரம் வரை வளரும். இதைப்பார்க்கும் போது காண்டா மிருகங்கள் கவச உடை அணிந்தது போல இருக்கும். அதன் தோல் மிகக் கடினமானதாக இருக்கும். எனினும் துப்பாக்கிக் குண்டோ, கத்தியோ பாய்வதை இதனால் தடுக்க முடியாது.

பயங்கரமாகத் தோற்றமளிக்கும் இந்த மிருகம் ஒரு சைவப்பிராணி. புல், இலை, வேர், பழங்களை இரவில் சாப்பிடும், பகலில் ஓய்வு எடுக்கும். தண்ணீரிலோ, சகதியிலோ படுத்துக் கிடக்கும். இதன் தோலில் வியர்வைச் சுரப்பிகளே கிடையாது.

கடுமையாக வேட்டையாடப்பட்டுவருவதால் காண்டாமிருக எண்ணிக்கை வேகவேகமாகக் குறைந்துவருகிறது. காண்டாமிருகத்தின் ஒவ்வொரு பகுதியும் மருத்துவ



சக்தி கொண்டது என்பதால் இவை கடுமையாக வேட்டையாடப்படுகின்றன.

# உங்களுக்குத் தெரியுமா?

1. நவீன விண்வெளியுகத்தின் தந்தை யார்?
   -சியோல் கோவஸ்கி-
2. லீனா II(Lina II) என்ற விண்கலம் எந்நாட்டினரால் நிலவுக்கு அனுப்பப்பட்டது?
   -ரஷ்யா-
3. இந்தியாவின் முதலாவது விண்வெளி வீரர் யார்?
   -ராகேஷ் சர்மா-
4. சி.ஒஃப்.நொக்டா (Sea of Nacda) என்பது என்ன?
   -நிலவில் உள்ள ஓர் இடம்-
5. பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரக் கூட்டம் எது?
   -அன்றோமீடா-
6. சந்திரனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் என்ன?
   -2 40 000 மைல் (384 000 கிலோ மீட்டர்)-
7. உலகிலேயே மிகப் பெரிய கோள் மண்டலம் எங்குள்ளது?
   -ரஷ்யாவில் மோஸ்கோ நகரில்-
8. வியாழனின் உப கோள்களில் மிகவும் பெரியது எது?
   -கனிமீர்-
9. செவ்வாய்க் கிரகத்தின் விட்டம் எவ்வளவு?
   -4200 மைல் (6720 கிலோ மீட்டர்)-
10. கோள்களில் எதிர்ப்பக்கம் சுழலும் கோள் எது?
    -யுரேனஸ்-

தொகுப்பு: எம்.சுதாஹரன்-
ஹாகலை, கண்டி.

# மூன்றின் மகிமை

மூன்று என்ற எண்ணிற்கு நம் முன்னோர் கொடுத்த சிறப்பினைச் சில வரிகளில் பார்ப்போம்.

1. **மும்மலை** : கொல்லி, நேரி, பொதியம், ஆகிய மலைகள்.
2. **முந்நாடு**: சேர, சோழ, பாண்டிய ; நாடுகள்.
3. **முந்நதி** : பூர்ணாநதி, வைகை, காவிரி.
4. **முப்பதி** : வஞ்சி, உறையூர், மதுரை.
5. **மும் முரசு** : மங்கலமுரசு, வெற்றிமுரசு, கொடைமுரசு.
6. **முத்தமிழ்** : இயல், இசை, நாடகம்.
7. **முக்கொடி** : வில், புலி, மீனக் கொடிகள்.
8. **மும்மா** : கனவட்டம், கோரம், பாடலம். என்னும் மூன்று குதிரைகள்.
9. **முப்பால்** : அறம், பொருள், இன்பம்.
10. **முக்காலம்** : நிகழ்காலம், எதிர்காலம், இறந்த காலம்.
11. **மும்மூர்த்தி** : பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்.
12. **முப்படை** : தானை, யானை, குதிரை.

இன்னும், புலவர் சீத்தலைச் சாத்தனாரின் ஒரு பாடலையும் நோக்குவோம்.

"மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ
பாமுறை தேர் வள்ளுவர் முப்பால்"

நுணாவிலூர் கா.விசயரத்தினம்-
லண்டன்.



விறு விறு தொடர்

22

கிழவன் நடுங்கிப் போயிருந்தான்.

அந்த வீட்டில் இருந்த தொழில் முறைப் பெண்கள் நான்கு பேர் ஒரு ஓரமாக நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

ரஞ்சித், தங்கியிருந்த அறையில் அவனுடைய சூட்கேஸ் மட்டும் இருந்தது.


"அந்தத் தம்பி சாயங்காலமா மறுபடி வர்றேன், பெட்டி இங்கேயே இருக்கட்டும், சுரேகாவுக்கும் தெரியும். சுரேகா வந்தா இங்க எனக்காகக் காத்திருக்கச் சொல்லுங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு!" என்றான் கிழவன்.

"ச்சே!" என்று தன் உள்ளங்கையில் குத்திக் கொண்டான் பரத்.

"மறுபடியும் இவ்வளவு நெருக்கமா வந்து மிஸ் பண்ணிட்டமே!" என்றாள் சுசீலா.

பரத் கட்டில் மேல் இருந்த அந்த சூட்கேஸை ஆராய்ந்தான்.

வெளிநாட்டு சூட்கேஸ். திறந்து பார்த்தான், முடியவில்லை. பூட்டப்பட்டிருந்தது. தவிர நம்பர் லாக் சிஸ்டமும் இருந்தது.



"உடைச்சிப் பார்த்துடலாமா பரத்?" என்றார் நியூட்டன்.

"ஆமாம். ஏதாச்சும் க்ளூ கிடைக்கலாம்."

உத்தரவிட்டார் நியூட்டன்.

ஒரு கான்ஸ்டபிள் கடப்பாரை கொண்டு வந்து நெம்பி பெட்டியை உடைத்துத் திறந்தார்.

உள்ளே இருந்தவற்றை அப்படியே கட்டில் மேல் கவிழ்த்தான் பரத்.

உடைகள், ஷேவிங் செட், பணக்கட்டுகள். உபயோகமாய் வேறு ஏதும் இல்லை.

"நீங்க என்ன தேடறீங்க?" என்றாள் சுரேகா.

"இப்ப அவன் எங்கே போயிருக்கணும்னு தகவல் சொல்ற ஏதாச்சும் தடயம் கிடைக்குமான்னு பார்க்கறோம். உனக்குத் தெரியுமா இப்ப அவன் எங்கே இருப்பான்னு?"

"இப்ப எங்கே இருப்பான்னு தெரியாது. ஆனா முகூர்த்த நேரம் முடிஞ்சதும் அவன் எங்கே இருப்பான்னு தெரியும்."

"எங்கே இருப்பான்?"

"அந்தக் கல்யாண மண்டபத்துக்குப் பக்கத்தில உள்ள ஏதோ ஒரு மொட்டை மாடில அவன் பதுங்கிட்டிருப்பான். ஆனா எந்த மொட்டை மாடின்னு தெரியாது."

"அப்படியா? நிச்சயமாத் தெரியுமா?"

"தெரியும். அவன் இந்தக் கொலைத் திட்டத்துக்கு என்னை உதவச் சொன்னானே."

"என்ன உதவி?"

"நான் பணக்கார வீட்டுப் பொண்ணு மாதிரி பட்டுப் புடவை எல்லாம் கட்டிகிட்டு மண்டபத்துக்கு கல்யாணத்துக்கு வரணும்."

"வந்து?"

"முகூர்த்தம் முடியறவரைக்கும் காத்திருக்கணும். முகூர்த்தம் முடிஞ்சதும் மாப்பிள்ளை ஆகாஷ்கிட்டே போயி, ஒரு முக்கியமான விஷயம் தனியாப் பேசணும்னு சொல்லி, அவனை அவனுக்குண்டான ரூமுக்கு அழைச்சிட்டு வர வேணும்!"

"அப்புறம்?"

"அந்த ரூம்ல பால்கனி மாதிரி இருக்குமாம். பேசிக்கிட்டே அவனை அந்தப் பகுதிக்குக் கூட்டிட்டு வந்துடணுமாம். ஏதோ ஒரு மொட்டை மாடில பதுங்கி தயாரா இருக்கிற அவன் துப்பாக்கியால குறி பார்த்து அவனைச் சுட்டுடுவானாம்."

"அவன் கிட்ட துப்பாக்கிகள் இருக்கா-நீ பார்த்தியா?"

"நான் பார்த்தேன். இருக்கு. அதனால் தான் பயந்து அவனோட திட்டத்துக்கு ஒத்துக்கற மாதிரி நடிச்சேன்."

"வெரிகுட்." என்ற பரத் நியூட்டனைப் பார்த்தான், "நாம் அவனைத் தேடறதால அவன் மண்டபத்துக்குள்ளேயே வராம வேற ஏதாவது திட்டம் தான் யோசிப்பான்னு நான் சொன்னது சரியாப் போச்சு."

"ஆமாம் பரத்! இப்பவே நாம அங்க போய் அந்த ரூம் பல்கனிக்கு எதிரில வாகா இருக்கிற எல்லா மொட்டை மாடிகள்லயும் ஆளுங்களைப் போட்டுடலாம்!" என்றார் நியூட்டன்.

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

"வேணாம் சார். அவன் அலர்ட் ஆயிடுவான். அவனை அவன் போக்குல விட்டுப் பிடிக்கலாம். அவனை அவன் மனசுல வெச்சிருக்கிற மொட்டைமாடிக்கு வர அனுமதிக்கணும். அதனால வேற சில இடங்கள்லர்ந்து அந்த மெட்டை மாடிகளை கண்காணிக்கலாம். அப்புறம் தன் திட்டப்படி சுரேகா கல்யாண மண்டபத்துக்குள்ளே போய்ட்டாளான்னு எங்கேர்ந்தாவது கவனிச்சுட்டு, அப்புறம்தான் தன் பதுங்குமிடத்துக்கு அவன் வருவான்னு நான் எதிர்பார்க்கிறேன்."

"அதனால?"

"அதனால இந்தப் பொண்ணு அவன் சொன்ன திட்டப்படியே பணக்காரத்தனமா டிரெஸ் பண்ணிக்கிட்டு ஒரு பார்சலைத் தூக்கிக்கிட்டு ஒரு ஆட்டோல வந்து இறங்கி மண்டபத்துக்குள்ளே வரட்டும்."

"நல்ல ஐடியா!" என்றார் நியூட்டன்.

ரஞ்சித் அந்த சலூன் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். மொட்டையடித்து பதினைந்து நாட்கள் ஆன மாதிரி அத்தனை குளோசாக சம்மர் கட். தாடையில் ஃபிரெஞ்ச் தாடி. மீண்டும் அவனது சொந்த அடையாளங்கள் தொலைந்து போயிருந்தன.

நேரம் பார்த்தான். ஒன்பது மணி.

சுரேகா கல்யாண மண்டபத்திற்குப் போயிருப்பாளா?

போயிருக்க வேண்டும். அவள் கல்யாண மண்டபத்திற்குள் இருக்கிறாள் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு பிறகு அந்தக் குறிப்பிட்ட மொட்டை மாடிக்குப் போக வேண்டும்.

அதை எப்படித் தெரிந்து கொள்வது?

ரஞ்சித் ஒரு ஆட்டோ அமர்த்திக் கொண்டு கல்யாண மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான்.

கார்கள் நிறுத்துமிடத்தில் நின்றபடி கவனித்தான்.

முகப்பில் இரண்டு வீடியோ கேமிராக்கள் வருகிற ஒவ்வொரு நபரையும் நிதானமாக படம் பிடித்துக்கொண்டிருந்தது.

திருமணத்திற்கு வந்த உறவினர்கள், நண்பர்கள் ஒரு வரிசையில் ஒழுங்கு படுத்தப்பட்டு மெட்டல் டிட்டெக்டர் ஃபிரேம் வழியாக உள்ளே அனுமதிக்கப் பட்டனர்.

அது மட்டுமல்லாமல் அவர்கள் கொண்டு வந்த பேகுகள், பரிசுப் பார்சல்களும் தடவிப் பார்க்கப்பட்டு திருப்பித் தரப்பட்டன.

அங்கங்கே பொலிஸ் தலைகள் தென்பட்டன.

மண்டபத்திலிருந்து உச்ச கட்டத்தில் நாதஸ்வரம் இசைவந்து கொண்டிருக்க, இன்னொரு பகுதியில் நின்றிருந்த இருபதுக்கும் மேற்பட்ட பேண்ட் வாத்திய கோஷ்டியும் பிரதேசத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தது.

ஏராளமான கார்களில் ஒரு காரை சும்மா துடைத்தபடி இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்தான் ரஞ்சித்.

யார் பார்த்தாலும் தன் முதலாளியை இறக்கி விட்டு விட்டுக் காத்திருக்கும் டிரைவர்களில் ஒருவனாகத்தான் அவனை நினைப்பார்கள்.

முகப்பையே பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சித்தின் விழிகள் பிரகாசமாயின.

வந்து நின்ற ஒரு ஆட்டோவிலிருந்து பரிசுப் பார்சலுடன் பட்டுப் புடவை மின்னலடிக்க இறங்கினாள் சுரேகா.

'வெரிகுட்! சொன்னபடியே வந்து விட்டாள்.'

சுரேகா மெதுவாக நடந்தாள். சோதனைக்கான வரிசையில் போய் நின்றாள். அவள் கண்கள் அலை பாய்ந்தன. சுற்றிலும் இரகசியமாகத் தேடின.

அவள் முறை வந்தபோது ஒரு பெண் கான்ஸ்டபிள் அவளின் கைபையைச் சோதனையிட்டு விட்டு, பார்சலை கருவி கொண்டு தடவி விட்டு உள்ளே அனுமதித்தாள்.

நகர்ந்த சுரேகா பரத்தைப் பார்த்தாள். புன்னகைத்தாள். ஜாடைகாட்டி தன் அருகில் அழைத்தாள்.

பரத் அவளிடம் வந்தான்.

"என்ன?"

"இப்ப நான் என்ன செய்யணும்?"

"உனக்கு இங்கே எந்த வேலையும் இல்லை. போய் அமைதியா உக்கார்ந்து கல்யாணத்தைப் பாரு. சாப்பிடு. வீட்டுக்குப் போ!"

"சார், எனக்கு அவனை நினைச்சா பயமா இருக்கு."

"என்ன பயம்?"

"நான் அவனைக் காட்டிக் கொடுக்கறதால வஞ்சம் வெச்சி என்னை எதுவும் செஞ்சிட்டான்னா?"

"ஒண்ணும் ஆகாது. அவனைக் கைது பண்ணிடுவோம். அஞ்சி வருஷமாவது தண்டனை கிடைக்கும். தைரியமா இரு. போய் உக்காரு!"

அவள் சென்று ஒரு நாற்காலயில் அமர்ந்தாள்.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சித்தின் புருவங்கள் சுருங்கின. இவள் பேசின நபர் பரத் தானே? அவனிடம் இவளுக்கு என்ன வேலை? என்ன பேசினாள்? வார்த்தைகள் புரியவில்லை. ஆனால்...

இவள் ஏதோ கெஞ்சுவது போலிருந்தது.

அவன் ஏதோ சமாதானப் படுத்துவது போலிருந்தது.

"சுரேகா எனக்குத் தெரியாமல் ஏதாவது திட்டம் போட்டு விட்டாளா? சுரேகா இப்போது எனக்கு ஒத்துழைக்கிறாளா இல்லை, பொலிசுக்கு ஒத்துழைக்கிறாளா?"

ரஞ்சித் மனதில் விழுந்த இந்த சந்தேகப் பொறி வளரத் துவங்கியது.

'ஏதோ ஒரு சதி வலை இருக்கிறது! அதில் சிக்கக் கூடாது! ஆகாஷைக் கொலை செய்ய வேறு புதிய திட்டம் உடனடியாக யோசிக்க வேண்டும்!'

'என்ன செய்யலாம்?'

தீவிரமாக யோசித்தான் ரஞ்சித்.

(வரும் வாரம் முற்றும்)

# ஒரு நடிகையின் கதை

அந்தப் பத்திரிகை நிருபருடன் பேசப் பேச, நான் ஏதோ பொன்னுலகம் நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாக உணர்ந்தேன். என்னை, இந்த இக்கட்டிலிருந்தும், அவமானகரமான வாழ்க்கையில் இருந்தும்

நம் சினிமாக்காரார்கள் இன்னும் பாலியல் வல்லுறவை பூனை பாலைக்குடித்து விட்டதாகத்தான் காட்டுகிறார்கள்.



## தனது பெயரை வெளியிட முடியாத நடிகையின் சோகக் கதை

ரட்சிக்க வந்த கடவுளாகவே நான் கருதினேன்.

சதாசர்வகாலமும்அவன் நினைவாகவே இருக்கலானேன். அவன் வேலை செய்யும் பத்திரிகை அலுவலகத்துக்கு அடிக்கடி ஃபோன் செய்து அவனை அழைத்துப் பேசினேன்.

வளர்பிறையாக எங்கள் நட்பு வளர்ந்து கொண்டே இருந்தது. சினிமாவைப் பற்றி அவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று எனக்குத் தோன்றும். அந்த அளவுக்குப் புத்திசாலித்தனமாகப் பேசுவான்.

"ஒரு பிரெஞ்சுப் படம். ஹீரோ, ஹீரோயின் இரண்டு பேருக்கும் அன்பு வளர்ந்து கொண்டே இருக்கும்.

பின்னணியில் ஃபிரேமுக்குள் ஒரு கட்டிடம் வளர்ந்து கொண்டேயிருக்கும். கண்ணை உறுத்தாத, நம் மண்டைக்குள் எதையும் திணிக்க முயற்சிக்காத 'இமேஜ்' அதுதான் ஐரோப்பிய சினிமா.

'நம் சினிமாக்காரர்கள், இன்னும் பாலியல் வல்லுறவைப் பூனை பாலைக்குடித்து விட்டதாகத்தான் காட்டுகிறார்கள். பால் முழுசாக குடிக்கப்பட்டது என்றால் என்ன அர்த்தம்? பெண் அதற்குப் பிறகு தாம்பத்தியம் நடத்தத் தகுதி இல்லாதவள் என்றல்லவா அர்த்தம் ஆகிறது? இதென்ன பைத்தியக்காரத்தனம்?"

நான் நடித்த படங்களைக் கூட அவன் கிண்டல் பண்ணுவான். நானும் அதை ரசிப்பேன்.

"அது என்னம்மா கதை? சின்ன வயசில் ரெண்டு குழந்தைகளும் தொலைந்து போய் பல வருஷங்களுக்குப் பிறகு ரெண்டுபேரும் ஒரு திருடனாகவும், ஒருத்தன் பொலிஸ்காரனாகவும், சந்திக்கிறபோது, பாசம் பார்வையிலேயே பீச்சி அடிக்கிறது. அது எப்படி?

அந்தக் காலத்திலே ஒரு படம் வந்தது 'மங்கயர்க்கரசி' என்கிறது அதன் பேர். சின்னப்பா கதாநாயகன். ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு, அம்மா கண்ணாம்பாளைப் பார்க்கிறான். உடனே கண்ணாம்பாள் மாரிலேந்து பால் பீச்சி அடிக்கும். அது என்ன, பிளட் பாங்க் மாதிரி, மில்க் பாங்க்காம்மா?"

எனக்கு வெட்கமாக வரும். நான் சிரிப்பேன்.

இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதே, நான் கேட்டேன்,

"இதோ பாருப்பா! அவன் சரியில்லை, இவன் சரியில்லைன்னு சொல்லிக்கிட்டுத்திரியாதே. உன்னாலே முடிஞ்சா, ஒரு நல்ல படம் எடேன்.... பார்ப்போம்."

"சரி"

என்னிடம் பணம் இருந்தது. மாமாவும் இப்போது என்னுடன் இல்லை. எல்லா டீலிங்கும் நானே செய்துவிட்டதால், எல்லாவகையிலும் பணம் என்னிடமே நேராக வந்தது. தேவைப்பட்டால், சம்பாதித்துக் கொள்ளலாம். எனக்கென்று பல முக்கிய பிரமுகர்கள் என் வாடிக்கையாளராக இருந்து வருகிறார்கள். மதுரைவேந்தன் என்கிற தொழில் மன்னர், ஒரு ஜமீன்தாரின் வாரிசு. திருச்சிக்கு அருகில் இருக்கும் ஒரு துணித் தொழிற்சாலை உரிமையாளர்கள், நான் எத்தனை இலட்சம் கேட்டாலும் கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

"உடனே ஆரம்பி."

"நீதான் ஹீரோயின்."

"நான் உனக்கும் தான்."

இரவு பகலாக உழைத்து, அத்தனை இலட்சங்களையும் திரட்டி, அவனிடம் மொத்தமாகக் கொடுத்தேன். ஒரு ஆம்பிள்ளை, பணத்துக்காக அடிக்கடி என்னைப் பணம் கேட்கக் கூச்சப்படலாம் அல்லவா? அதற்குத்தான் அந்த ஏற்பாடு.

வி.ஜி.பி. காட்டேஜில் கதை டிஸ்கஷன் நடந்தது. மளமளவென்று வேலை நடந்து கொண்டிருந்தது. லொக்கேஷன் என்று பல இடங்களுக்குப் போய்வந்தான் அவன். இந்த நேரத்தில், அவனை நான் அதிகமாக இழந்தேன். நாங்கள் சந்திப்பதே வாரத்துக்கு ஒருமுறை என்று ஆயிற்று. வந்தால் நாள், இரவு என்று 24 மணி நேரங்களை என்னுடன் அவன் செலவிட்டுக்கொண்டிருப்பான்.

"எப்போ ஷூட்டிங் போகிறாய்?"

"சீக்கிரம்" என்று அவன் சொன்னான்.

(தொடரும்)

# நட்சத்திர மண்டலத்துள் பிரவேசித்தேன்!

இரா. பத்மநாதன்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களை திரைப்படங்களில் பார்த்து அவரை ஒரு தெய்வத்திற்குச் சமமாக மதிப்பவர்கள் பல்லாயிரக்கணக்கில் தமிழ் நாட்டில் மட்டுமல்ல கடல் கடந்த பிரதேசங்களிலும் வாழ்கிறார்கள். அன்னாரைப்போய்ப்பார்த்துப் பேசுவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்காதா? என்று ஏங்கியவர்களுள் நானும் ஒருவன்.

1958ம் ஆண்டு நான் தமிழ் நாடு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட கதை அரசியல் நோக்கம் கொண்டதாகும். அதனை பிறிதொரு சமயம் கூறுவேன். இப்பொழுது புரட்சித் தலைவரை நான் சந்திக்க நேர்ந்த கதையைக் கூறுகிறேன்.


'இலங்கையில் கலைவாணர்' என்ற கட்டுரையை எழுதி 'நடிகன் குரல்' மாத சஞ்சிகையின் கலைவாணர் நினைவு மலரில் பிரசுரிப்பதற்காக நான் எழுதிக் கொடுத்த கட்டுரை தென்னிந்திய நடிகர் சங்கத்தில் தலைவராகவிருந்த எம்.ஜி.ஆர். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் பல தடவைகள் நடிகர் சங்கப் பணிமனைக்குச் சென்று, பணிமனையின் முகவர் திரு.ஆர்.எம்.சோமசுந்தரம் அவர்களிடம் எம்.ஜி.ஆர் அவர்களைப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும்படி கோரிக்கை விடுத்திருந்தேன். 'நாடோடி மன்னன்' திரைப்படத்தை பிரமாண்டமான முறையில் தயாரித்துக் கொண்டிருந்தார். 'நாடோடிமன்னன்' திரைப்படத்தைப் பார்த்திருப்பீர்கள். எம்.ஜி.ஆர் அவர்கள் இருவேடங்களில் இப்படத்தில் தோன்றுகிறார். ஏராளமான பொருட்செலவில் இப்படத்தைத் தயாரித்தார். இப்படத்தில் "பணத்தை எம்.ஜி.ஆர் வீணாகச் செலவு செய்கிறார். இப்படம் வெற்றியளிக்கப் போவதில்லை!" என்று திரையுலக ஜாலம்பவான்களே ஆரூடம் கணித்திருந்தனர். ஆனால் இப்படம் மகத்தான வெற்றியையீட்டிக் கொடுத்தது. இருப்பினும் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரையிலும் இப்படத்தின் மூலம் பேரும் புகழும் தலைசிறந்து ஓங்கினவே தவிர, பொருள் வரவில் அவருக்கு பெரு நட்டமே.

இப்படத்தின் மூலம் பெரும் பொருள் சம்பாதித்தவர்கள் இப்படத்தை தமிழ் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் திரையிடுவதற்கு உரிமை பெற்றவர்களே என்றால் மிகையாகாது.

ஔவை டி.கே.சண்முகம் அவர்கள் அடுத்த நாளே என்னை எம்.ஜி.ஆர் சந்திப்பார், என்று கூறியதும் நான் ஆனந்தக் கடலிலாடினேன். எம்.ஜி.ஆர். அவர்களை ஏற்கனவே நான் பார்ப்பதற்கு விரும்பியது அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரமுகராக இருந்ததும் ஒரு காரணம். இலங்கைப் பிரச்சனை பற்றி அவருடன் கலந்துரையாடுவதற்கும் நாட்டம் கொண்டிருந்தேன்.

நாடோடி மன்னன் திரையிடப்பட்டு அடுத்த நாளன்று மாலையில்தான் தன்னைச் சந்திக்கும்படி எம்.ஜி.ஆர். அவர்கள் கோரியிருந்தார். அன்று பிற்பகல் நடிகர் சங்கப் பணிமனையில் நடிகர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டம் முடிந்ததும் தான் நான் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னையில் மின்னியல் பட்டப்படிப்பை மேற் கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த நல்லையா என்ற நண்பரும் நானும் அன்று பிற்பகல் மூன்று மணிக்கு நடிகர் சங்கப் பணிமனைக்குச் சென்று விட்டோம். நான் வந்திருப்பது பற்றி திரு.சோமசுந்தரம் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். சற்றுப் பொறுத்திருக்குமாறு அவர் கேட்டுகொண்டார். நாலு மணியளவில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த கொட்டகைக்கு வருமாறு தகவல் கிடைத்தது. வாழ்க்கையில் இலகுவில் கிடைக்க முடியாத ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கிறதே என்ற பதட்டத்துடன் கொட்டகை வாயிலினுள் பார்வையை படர விட்டோம்.

அங்கு தென்னிந்திய திரை நட்சத்திரங்கள் எல்லாம் ஒன்று கூடி, தரைவிரிக்கப்பட்டிருந்த கம்பளங்களில் அமர்ந்திருந்தனர். அவர்களுள் முதன்முதலில் என்



கண்களில் தென்பட்டவர் அஞ்சலி தேவியவர்கள். அவர் முன்வரிசையில் வேறுசில பெண் நடிகைகளுடன் அமர்ந்திருந்தார்.

வலது புறம் என் பார்வையைத் திருப்பியபோது பளபளக்கும் தங்க நிற மேனியராக எம்.ஜி.ஆர். அவர்கள் தரைவிரிப்பிலேயே அமர்ந்திருந்தார். அவர் அருகில் டி.கே.சண்முகம், வீ.நாகையா, முன்னாள் ஆந்திர முதலமைச்சர் என்.ரி. ராமராவ் ஆகியோருடன் வேறுபலரும் இருந்தனர்.

என்னைக் கண்டதும் திரு.சண்முகம் அவர்கள் எழுந்து வந்து என்னை கையில் பிடித்து அழைத்துக் கொண்டு எம்.ஜி.ஆர். அருகில் நிறுத்தினார். குனிந்து அவருடைய காதில் என்னைப்பற்றிச் சொன்னார். எம்.ஜி.ஆர். அவர்கள் என்னை தன்னருகில் அமரும்படி சைகை செய்தார். என்னுடன் வந்திருந்த நல்லையா அவர்களும் நானும் அமர்ந்து கொண்டோம்.



ஔவை டி.கே.சண்முகம்

"வேறு அலுவல்கள் உங்களுக்கு இருக்கின்றனவா? சற்றுத் தாமதிக்கலாமா? இங்கு நாம் எதையும் பேசமுடியாது. வெளியே சென்று பேசலாம்." என்று என்னிடம் கேட்டார்.



எம்.ஜி.ஆர். அவர்கள் அவ்வாறு என்னிடம் கேட்ட வினாக்கள் எதுவுமே நான் அப்போதிருந்த நிலையில் புரியாமல் போய் விட்டது. இதனை உணர்ந்த சண்முகம் அவர்கள், எம்.ஜி.ஆர். என்னிடம் என்ன கேட்டார் என்பதை விளக்கிச் சொல்லிய போதுதான் புரிந்து கொண்டேன். நான் பதில் கூறும் போது, "எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் காத்திருக்கத்தயார்", என்று கூறினேன். அங்கிருந்த வேறொரு துணை நடிகரை அழைத்து எங்களிருவரையும் அருகில் இருந்த எம்.ஜி.ஆர். அவர்களின் அண்ணன் திரு.சக்கரப்பாணி அவர்களுடைய இல்லத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

நாங்களிருவரும் அந்தக் கொட்டகையிலுள்ள நட்சத்திரங்கள் அனைவரையும் எங்கள் கண்கொள்ளக் கூடிய வரை திரும்பிப்பார்த்து விட்டு சக்கரபாணி அவர்களுடைய இல்லத்தைப் போய்ச் சேர்ந்தோம்.

ஐந்து மணியளவில் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார். மூவருக்கும் சூடான காப்பி கிடைத்தது. இதற்கிடையில் அங்கிருந்த தொலைபேசி எம்.ஜி.ஆர். அவர்களை பல தடவைகள் அழைத்தது. திரு.சக்கரபாணி அவர்கள் தான் தொலைபேசியில் அழைத்துக் கொண்டிருந்தார்.

'நாடோடி மன்னன்' திரைப்படத்தைப் பார்த்தவர்களுக்கு அதில் வரும் பல வர்ணக் காட்சிகள் நினைவுக்கு வரும். படத்தின் பெரும்பாலான பகுதிகள் கறுப்பு வெள்ளையாக இருந்தபோதிலும், சில முக்கியமான கட்டங்கள் கெவா வர்ணத்தில் எடுக்கப்பட்டிருந்தன. பம்பாயிலிருந்து வந்த கெவா கலர் நிறுவனத்தினர் தான் இந்த வர்ணத்தை படத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தனர். அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் மூவர் அப்போது சென்னைக்கு வந்திருந்தனர். அவர்களுக்கு சென்னை வூட்லண்ட்ஸ் ஹொட்டலில் அன்று எம்.ஜி.ஆர். அவர்கள் தனது எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் பாராட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார். சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு எம்.ஜி.ஆரின் வருகைக்காக சக்கரபாணி அவர்கள் காத்திருந்தார். அவர்தான் உடனடியாக வரும்படி எம்.ஜி.ஆருக்கு தொலைபேசியில் அழைப்பு எடுத்துக் கொண்டிருந்தார்.

ஏனோ தெரியவில்லை அந்த உபசாரத்தில் கலந்து கொள்ள எம்.ஜி.ஆர். விரும்பவில்லை. அடிக்கடி தொலைபேசி அழைப்பு வரவே எம்.ஜி.ஆர். அவர்களுக்கு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. உள்ளே திரும்பி "பத்மநாபா!" என்று குரல் கொடுத்தார். என்னைக்தான் அழைக்கிறாரோ என்று எனக்கு சற்றுத் தோன்றியது. இதற்கிடையில் எம்.ஜி.ஆர். அருகில் ஆஜானுபாகுவான ஓர் இளைஞர் வந்து நின்றார். அவரைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவரும் ஏற்கனவே எனக்கு அறிமுகமான ஒருவர். கலைவாணர் என்.எஸ்.கே. நாடகக் குழுவினர் இலங்கை வந்திருந்தபோது அக்குழுவில் திரு.பத்மநாபனும் வந்திருந்தார். நாடகங்களுக்கு ஒலி-ஒளி அமைப்புக்களை ஏற்பாடு செய்யும் பொறுப்பு அவருடையது. என்னை அங்கு கண்டதும் "எப்போ வந்தீங்க?" என்று கேட்டார். நான் பதில் கூறும் முன்னரே? "என்ன இலங்கையில் இருந்து வந்திருக்கும் பத்மநாதன் இங்கு தமிழ் நாட்டிலிருக்கும் பத்மநாபாவை எப்படி அறிந்து கொண்டார்?" என்று கேட்டார். "இருவரும் கலைவாணர் குழுவினருடன் அறிமுகமாகிக் கொண்டோம்" என்று பத்மநாபாவே சொன்னார். **(இன்னும் வரும்)**

**'கலையுலகில் கருணாநிதி'** அடுத்த வாரம் இடம்பெறும்

---

# நிமலநாயகம் படுகொலை! பின்னணியில்.............

(3ம் பக்கத் தொடர்ச்சி.....)

**திரு.** நிமலநாயகத்தைச் சுட்டவர்கள் ஏற்கனவே அந்த இடத்திற்கு வந்து அவரை எதிர்பார்த்து காத்திருந்துள்ளனர் என்று அப்பகுதியிலுள்ள சிலர் கூறியிருக்கின்றனர். அவர்கள் வந்த வேலை முடிந்ததும் கடற்கரைப் பக்கமாகத் தப்பிச் சென்றதையும் பலர் பார்த்திருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்டகால உறுப்பினரான நிமலநாயகம் அவர்கள் விடுதலைப் புலிகளுடன் நெருங்கிய உறவு வைத்திருந்தார் என்றும், குறிப்பிட்ட தினத்தன்று 9ம் திகதியன்று பாராளுமன்றத் திறப்புவிழாவுக்குதான் செல்லவிருப்பதாகவும், பாராளுமன்றத்தில் தான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று புலிகளின் ஆலோசனையைப் பெறுவதற்காகவே அவர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்துக்குச் சென்று வந்துள்ளார் என்றும் தகவல் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

நிமலநாயகம் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தில்தான் முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா பயணம் செய்த குண்டு துளைக்க முடியாத வண்டியை மறித்து சிலர் சுட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த நிமலநாயகம் அவர்களை யார் சுட்டுக்கொன்றனர் என்ற கேள்வி தான் விடைகாண முடியாத ஒன்றாக இருக்கிறது. புலிகள் தாங்கள் இக் கொலையைச் செய்யவில்லையென ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

1994ல் இடம்பெற்ற தேர்தலிலும் போட்டியிட்ட நிமலநாயகம் மிகக் குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் தோல்விகண்டார். அப்போது நடைபெற்ற தேர்தலில் திரு.ஜோசப் பரராசசிங்கம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இம்முறை நடைபெற்ற தேர்தலில் திரு.பரராசசிங்கத்தை விட மிகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றார்.

இவர் கூட்டணியைச் சார்ந்தவராக இருந்தபோதிலும், அக்கட்சியின் சில நடவடிக்கைகளுடன் ஒத்துப் போகாதவராக இருந்தார்.

தேர்தல் பிரசாரங்களின்போது நிமலநாயகம் அவர்களை நோக்கி கிரனைட் வீசப்பட்டது. கிரானில் வைத்தே இச்சம்பவமும் நடைபெற்றது. ஆசிரியராகக் கடமை பார்த்த இவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மூன்று வருடங்கள்



சிறைசென்று மீண்டவர். சிலகாலம் 'நொராட்' என்ற தனியார் நிறுவனத்தின் சமூக நலப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தியிருந்தார்.

பாராளுமன்ற உறப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதும், ஏனைய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதுபோல், இவருக்கும் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டபோது, தனக்கு அத்தகைய பாதுகாப்பு எதுவும் தேவையில்லை என்று ஏற்க மறத்துவிட்டார்.

'நிமலன் மாஸ்டர்' என்று மக்களால் வாஞ்சையுடன் அழைக்கப்பட்டுவந்த நிமலநாயகம் அவர்கள் மக்களிடம் பெற்று வந்த தனிப்பட்ட செல்வாக்கும் பலருடைய கண்களை உறுத்திக் கொண்டே வந்தது.

நிமலன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதற்குப் பின்னர் புலி, களைச் சென்று சந்தித்து வந்தது மக்கள் அறிந்ததே. புலிகளுடன் நேரடியாக உறவு வைத்துக் கொண்டு மக்களுக்குச் சேவையாற்றும் புதிய பாணியை கூட்டணிக் கட்சியும், அதன் தலைமைகளும் குறிப்பாக ஜோசப் பரராசசிங்கம் போன்றோரும் பெரும் வயிற்றெரிச்சலாகவே கண்டிருப்பர். பாதுகாப்புத் தரப்பினர் கூட இதனைப் பொறுத்துக் கொள்ள வாய்ப்பில்லை.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக தங்களிடம் நட்புறவுள்ளதைக் காட்டி பொதுமக்களிடம் நிமலன் அதிக செல்வாக்குப் பெறுவதை புலிகளும் விரும்பியிருக்க வாய்ப்பில்லை. இந்தத் தேர்தல்களில் நம்பிக்கை வைக்காத புலிகள் அரசின் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டு அவ்வப்போது அரசின் சலுகைகளை அனுபவித்து வரும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசியல் சக்தியாக மதிக்கப் போவதில்லை.

தனது வெற்றி குறித்து மக்களுக்கு நன்றிதெரிவித்து நிமலன் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தார்.

அதில்; "இந்த வெற்றியின் மூலம் மட்டக்களப்பு மண்ணையும் தமிழினத்தின் தன்மானத்தையும்-கட்சியின் கொள்கைகளையும் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு என்மீது சுமத்தப் பட்டுள்ளது. நடைபெற்ற தேர்தலிலே என்னை-என் கொள்கைகளை-என் கட்சியை மதித்து உங்கள் உயிரை-உதிரத்தை-சதைகளை சக்தியை அர்ப்பணித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், எனக்கும் வாக்களித்து என்னை மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்துள்ளீர்கள். எனக்குத் தரகர்கள் எவரும் கிடையாது. நான் மக்களின் கைக்கு எட்டக்கூடிய பாராளுமன்ற உறுப்பினராகவே இருக்க விரும்புகிறேன். யாராவது எனது பெயரைச் சொல்லி ஏதோ ஒரு வகையில் எனது இலட்சியத்தைக் களங்கப்படுத்தும் வகையில் நடந்து கொண்டால், மனதுக்குள் வைத்திருக்காமல் எனக்கு நேரடியாக அறியத் தாருங்கள். எனது குரல் பாராளுமன்றத்தில் எமது உரிமைக்குரலாய் ஒலிக்கும்!" என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆத்மீக நூல்


ஈழத்தின் இலக்கிய உலகில் மிகவும் சிலாகித்துப் பேசப்பட்ட இலக்கிய வாதியின் பவளவிழாவினைச் சிறப் பிக்கும் முகமாக வெளியிடப்பட்ட அந்தச் சிறப்புமலர் பிரசவிக்குமுன் ஏற்படுத்திய கற்பனைக் கோட்டைகள் அனைத்தும், அந்தச் சிறப்புமலர் பிரசவித்தபின் இடிந்து சுக்குநூறாகியது.

அந்த மலர் சிறப்பாகப் பிரசவிக்க (பிரசுரிக்க) வேண்டும் என்பதற்காக அவன் எடுத்த முயற்சிகள்-சிரமங்கள் சொல்ல முடியாது. பல மாதங்கள்-பல கடிதத் தொடர்புகள்-உள் நாடு-வெளிநாடு, பேட்டி-சிலர் பதில் உறுத்தியும் விடயதானம் அனுப் பியும், சிலரிடமிருந்து எதுவுமே......

இவ்விதசிரமங்களுக்கு மத்தியில் பிரசவிக்கும்போது, ஏற்பட்ட விலைவாசி களின் திடீர் திடீர் உயர்வுகள், இதனால் ஏற்பட்ட பிரசவி(பிரசுரி)க்கும் செலவின் வீக்கம்-இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும் சுகப் பிரசவம்(பிரசுரம்) மலரைப் பார்த்தோர் வியர்ந்தனர். பலர் பலவிதமாகப் புகழ்ந்தனர். ஆனால் அதைச் சந்தைப் படுத்த முயன்ற போதுதான், எந்த அளவிற்கு வரவேற்பும் மதிப்பும் இருந்தது என்பதை அறியக் கூடிய தாக இருந்தது.

இருநூறு பக்கங்கள். அழகிய வர்ண அட்டைப்படங்கள் இருபுறமும் பல் வகைப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள்-பவளவிழா நாயகனின் பல்வகை நிகழ்ச்சிப்படங்கள்-அவரின் சிறுகதை, கவிதை, நாடகம், ஆகியன அடங்கிய மலரின் விலையோ மிகவும் குறைவுதான். ஆனால் சிறுகதை, நாவல், கவிதை, நாடகங்கள் வாசிக்கும் அளவிற்கு ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய நூலை வாசிக்க ஆர்வம் இருப்பதாகத் தெரிய வில்லை. சராசரி வாசகர்கள் தரும் ஆர்வத் தைக் கூட, பாடசாலையில் ஒப்படை, மற்றும் கையெழுத்துப்பத்திரிகைகளை முன் எடுத்துச் செல்லும் ஆசிரியர்கள் தருவதில்லை என் பதை நினைக்கும்போது, அவனுக்கு வேதனையாக இருந்தது.

இன்றைய நவீன யுகத்தில், பார்க்கவும் கேட்கவும் அதிக வாய்ப்பும் வசதியும் ஏற் பட்டதின் காரணமாக, வாசிப்புப் பழக்கம் அருகிக்கொண்டே போகின்றது. அன்றைய காலகட்டத்தில் இவை போன்ற சாதன வச திகள் இன்மையால், இல்லாததினால் வாசிப் பொன்றின் மூலம்தான் தகவல்களை அறிந்து கொண்டார்கள்.



அன்றைய காலகட்டத்தில் ஒரு சமுதாயத்தின் வழிகாட்டிகளாக முன்னோடிகளாத் திகழ்ந்தார்கள் ஆசிரிய கள். அவர்கள் வாசித்தலையும் கற்பித் தலையும் தம் இரு கண்களாகக் கருதினர். மதித்தனர். வாசிப்பின் மகத்துவத்தை அனுபவரீதியாகக் கண்டு உணர்ந்து மாணவர்களையும் வாசிக்கத் தூண்டி னார்கள். ஆனால் இன்று......

மூன்று மாதகாலத்திற்குள் ஆயிரம் பிரதிகளைச் சந்தைப்படுத்தியவனுக்கு அந்தக்கால எல்லைக்கு முன்னூறு பிரதிகளைக் கூடச் சந்தைப்படுத்த முடிய வில்லையே என்று வேதனைப்பட்டான் அவன். உள்ளூரில்தான் இப்படியென் றால், இருந்தும் ஓர் இலக்கியவாதிகூட இந்த எழுத்தா ளனைப் பற்றியோ, எழுத் தாளனின் பவள விழாவைப் பற்றியோ, அதன் சிறப்புமலர் பற்றியோ கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இல்லை யெனில் இதுநாள்வரை ஓர் இலக்கிய வாதியிடமிருந்தோ இல்லை இலக்கியரசிகரிட மிருந்தோ ஒரு கடிதம் இல்லை ஒரு அட்டை.....

இத்தனைக்கும் சகல ஊடகங்களும் இவர் பற்றியும் இவர் பவளவிழாபற்றியும், சிறப்புமலர்பற்றியும் நன்றாகவே விளம்பரம் செய்திருந்தன. இதில் இருந்து அவனுக்கு ஒன்றுமட்டும் விளங்கியது. ஒவ்வொரு படைப் பாளிகளும் தங்களைச் சுற்றி ஒரு வட்டத்தைப் போட்டுக்கொண்டு, அதற்குள் இருந்து கொண்டு கனவுகாண்கிறார்களேயன்றி மற் றைய படைப்பாளிகளையும் மதிக்க வேண்டும் ஆதரிக்க வேண்டுமென்றோ சிந்தித்தார் களில்லை. இந்தப்போக்கை இவர்களது வட்டங்களை உடைத்தெறிந்து இவர்களை வெளிக்கொணர வழியே இல்லையா.....?

ஈழத்தில் பல பாகங்களில் உள்ள படைப்பாளிகள் ஆளுக்கொரு பிரதிகளைப் பெற்றாலே போதுமே.... சந்தைப்படுத்தல் இலகுவாகுவது மட்டுமன்றி பரவலாக்கவும் படுகின்றது. என்று ஈழத்து இலக்கியவாதிகள் தங்கள் காப்புணர்வுகளைக் களைத்தெறிந்து மனம் திறந்து ஒவ்வொருவரை மற்றவர் மனம் திறந்து மதித்துக் கௌரவித்து படைப் புக்களை பரிமாறிச் சந்தைப்படுத்துகின்ற காலம் வருமோ அன்றுதான் ஈழத்து இலக் கியம் செழிப்போடு வளர வழிபிறக்கும்.

சிதறுண்டு எங்கெல்லாமோ அலைந்த சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தான். நீண்ட பெருமூச்சொன்று அவன் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு வெளிவந்தது. மேடை ஏறி நூலை விமர்சிக்கும் கூட்டத்தில் ஒருவர் தானும் பணம் கொடுத்து ஒரு பிரதியைத் தானும் பெறாதது ஒரு கனம் நினைவுக்கு வந்தது. தன்னை அறியாமலே வாய்விட்டுச் சிரித்தான். தன் அறியாமையை நினைத்து இவர்களெல்லாம் ஓ.சியில் வாங்கி விமர்சிப் பதற்காக மட்டும் வாசித்துப் பழக்கப்பட்ட கூட்டம் தானே.

அவன், தான் முன்பு சந்தைப்படுத்திய பெயர்ப் பட்டியலைப் புரட்டிப் பார்த்தான். ஒவ்வொரு பெயர்களாக வாசித்துக் கொண்டு பேனவனுக்கு அந்தப் பெயர் தட்டுப்பட்டது. அவன் முகம் மலர்ந்தான். நம்பிக்கையோடு சிறப்புமலரும் கையுமாகப் புறப்பட்டான்.

சிவராமலிங்கம் அவர் ஒரு வர்த் தகர். அத்தோடு கொந்தராத்துக் கார ரும் கூட வயது சிறியவராக இருந்த போதிலும் தொழிலில் கொடிகட்டிப்பறந் தார். முப்பது வயது நிரம்பாத சிவராம லிங்கம் பார்ப்பதற்கு அழகாகவே இருந் தார். மன்மதனோ என்று ஐயுறும் வண் ணம் அவ்வளவு அழகு. ஆனால் அவர் மனைவி கயல்விழியோ அவரைவிட ஒரு படி விஞ்சியே இருந்தாள். பெயருக் கேற்ற விழிகள். குடும்பப் பெண்ணுக்குரிய சமுத்திரிகா லட்சணங்களும் பொருந்தி யிருந்தது. அவளிடத்தில், சிற்பி செதுக் காத பொற்சிலையாக இருந்தாள். உண் மையில் அவள் ரதி தான்.

செல்வச் செழிப்பில் வளர்ந்தபோதும் அவள் அடக்கமாகவே காணப்பட்டாள். அவள் உடலில் தங்கம் புரண்டு விளை யாடியது. அத்தனையும் வெளியில்

## வீணைவேந்தன்

தெரியதவாறு தன் முந்தானையால் உடலைமறைத்தே இருப்பாள். அவள் நடக்கும் போது பூமி சிரிக்கும்; தன்னை மட்டுமே பார்த்துக் கொண்டு நடக்கின்றாள் என்ற பூரிப்பில்.

ரதியும் மதனும் போன்ற இளம் தம்பதியி னருக்கு ஒரு குழந்தைப் பாக்கியத்தை ஏனோ கடவுள் இதுவரை கொடுக்கவில்லை.

தன்னுடைய ஒவ்வொரு வெளியீடு களையும் வாங்கி ஆதரித்து வந்த சிவராம லிங்கத்திடம், மலர்ந்த முகத்தோடு அந்தச் சிறப்புமலரை நீட்டினான் அவன். அவளும் சிரித்துக் கொண்டே "நான் இப்போ இவை களை வாசிப்பதை நிறுத்திவிட்டேன். ஏதாவது ஆத்மீக நூல்கள் இருந்தால் கொண்டு வாருங்கள்!" என்றார்.

அவன் அதிர்ந்துவிட்டான். இந்தவயதில் இப்படி ஒரு மாறுதலா? அவனை அறியா மலே இராமலிங்கத்தின் மேல் ஒரு வித மரி யாதையான பக்தி உண்டாகியது.

ஆலய உற்சவங்களில் எல்லாம் இவர்களைக் காணும்போது அவனை அறியா மலே இருகரங்களும் மேலெழுந்து மார்புக்கு நேரே இணைந்து நிற்கும். எந்தக் கட்டளை யையும் எதிர்பார்க்காமல் வாய் வணக்கம் சொல்லும். மனதில் ஒரு மகிழ்ச்சி தோன்றும்.

சமயச் சொற்பொழிவுகளிலும் சரி, சாது சன்னியாசிகளின் சொற்பொழிவுகளிலும் சரி முன்வரிசையில் அமர்ந்திருப்பார் சிவராமலிங் கம். எப்போதும் அவர் கையில் ஒரு நூல் உறை போட்ட வண்ணம் இருக்கும். அவரது நூலகத்தில் உறைபோடாத நூல் ஒன்றையும் காண்பதரிது. அவரைக் காணும் போதெல் லாம் அவருக்கு எப்படியாவது ஒரு நல்ல ஆத்மீக நூலைக் கொடுக்க வேண்டும் என்று அவன் உள்ளம் துடிக்கும்.

அன்று மதியம், சாமியார் கடையில் பத்திரிகை வாங்கச் சென்றிருந்தான். அவன் கடையில் வழக்கத்துக்குமாறாக சிறிது கூட்டம் அதிகமாகவே இருந்தது. வழமையாகக் காரில் செல்லும் சிவராமலிங்கம், அன்று சைக்கிளில் வந்திருந்தார். கையில் உறை போடப்பட்ட நூல் ஒன்று. அவரைக் கண்டதும், அவன் மரியாதையாக அவர் முன் சென்று இருகை கூப்பி வணக்கம் சொன்னான். அவருக்கு வேண்டிய பத்திரிகைகளை தானே முந்தியடித்து முன்சென்று வாங்கியும் கொடுத்தான். பத்திரிகையைப் பெற்றுக் கொண்டதும், ஆசனத்தில், இருந்தவாறே உடலை வளைத்து, பின் கரியலில் உள்ள வில்லை நிமிர்த்திக் கரியலில் பத்திரிகையை வைத்து வில்லைவிட்டார். அது பத்திரிகையை அமுத்திப் பிடித்தது. 'நன்றி' என்று கூறிக் கொண்டே சைக்கிளை மிதித்தார். ஒரு அடி முன்னேறும் போது, கையில் இருந்த நூல் தவறிக் கீழே விழுந்தது. இதைக் கண்ட அவன் ஓடிச் சென்றான். அதற்குள் மேல் உறைகழன்று காற்றில் அடிபட்டுப் போய்க்கொண்டிருந்தது. அவன் முதலில் நூலைப் பொறுக்கிக் கொண்டு, அதிவேகமாக ஓடி அந்த உறையைப் பற்றிக் கொண்டான். முன்போன்று நூலுக்கு உறையைப் போட் டான். அப்போது தான் அது ஓர் ஆங்கில நூல் என்பதைக் கண்டான். பெயரைப் பார்த்தான். அது 'ஹௌ ரு சற்றிஸ்ஃபை ஏ வுமன்!' (HOW TO SATISFY A WOMAN) (ஒரு பெண்ணைத் திருப்திப்படுத்துவது எப்படி).

# நட்பு

கவலையோடு கலங்கிப் போயிருக்கிறேன் நான். நீண்ட நாட்களாக தங்கையின் கடிதத்தை காணாததுதான் காரணம். மாதம் இரு கடிதம் அனுப்புபவள் அவள். இன்றோடு இரண்டு மாதமாகியும், இன்னும் அவள் கடிதம் ஏதும் வர வில்லையே? தங்கைக்கு ஏதும் சுக யீனமோ? அல்லது வேறு ஏதும் பிரச்சனைகளோ? இன்று நாட்டு நிலமை அப்படித்தானே இருக் கிறது. இன்று இருப்பவர் நாளை எங்கேயோ? அகதியாக அல்லது காணாமல் போனவராக? இல்லை பிணமாக. எதுவுமே சொல்லமுடி யாத இந்த நாட்கள். "கவனமாக இருங்கள் அண்ணா. நாட்டு நிலமை மோசம்!" என ஒவ்வொரு மடலிலும் எனக்குப் புத்தி சொல்பவள் அவள். அந்த தங்கைக்கு என்ன நடந்ததோ? எதுவும் புரியவில்லையே? என் பாசத்தங்கையின் பெயர் பகீரதி. அவள் என் உடன்பிறப்பல்ல. என்



## ஆரையம்பதி-பூ.இதயரெத்தினம்

கவிதை படித்து பாராட்டி மடல் வரைந்து பேனா நட்புமூலம் உற வானவள் அவள். "எனக்கு உடன் பிறந்த அண்ணாமார் யாரும் இல்லை. உங்களை அண்ணா என்று அழைக்கட்டுமா?" என்றவள். அவளை நானும் தங்கை என்றே அழைப்பேன். என் மீது அளவிலா அன்பு வைத்திருக்கும் அவள் மீது, எனக்கு சரியான பாசம். ஒரு நாள் அவள் வீட்டில் சாப்பாட்டு வேளை யில், "தங்கச்சி ரதி நம்ம நட்பும் உறவும் எதுவரைக்கும் தொடரும் எண்டு நினைக்கிறீர்?" நான் கேட் டேன். "என்ன அண்ணா இப்படி கேக்கிறீங்க. என் உயிர் உள்ள வரைக்கும் நம் உறவு நீடிக்கும். இதை யாராலயும் தடுக்க முடி யாது!" என்றாள். "இல்லை ரதி அப்பிடி சொல்ல முடியாது. நாளைக்கு உனக்கு கல்யாணம் ஆச்சுன்னா அதோட நம்ம நட்பு முடிஞ்சிடும். இதுதான் நெஜம்!" நான் முடிக்கவில்லை. "அண்ணா அப்படி சொல்லாதீங்க. எனக்கு கணவரா வர்ரவரு என்னோட சுதந்திரத்துல தலையிடக் கூடாது. என்னோட இலக்கிய ஆர்வத்த புரிஞ்சிக்கிட்டவரு. இப்படிப்பட்ட ஒருவரத்தான் நான் தேர்ந்தெடுப்பன் அப்படி இல்லேன்னா எனக்கு கல்யாணமே வேணாம் எண்டு அம்மாகிட்ட சொல்லிடுவேன்!" என்றாள்.

"தங்கச்சி அப்பிடியெல்லாம் சொல்லக் கூடாது. நட்ப பெரிசா மதிச்சி திருமணமே வேண்டாம் என் கிறது தப்பு. ஒரு ஆணும் பெண்ணும் நட்பா பழகினா லும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிற இந்த சமுதாயம் நம்ம நட்புக்கும் சாபம் போட்டிடும்!" நான் கூற "அண்ணே! இந்த சமுதாயத்தப் பற்றியெல்லாம் எனக்குக் கவல இல்ல எனக்கு நான்தான் நீதிபதி."

"இல்ல ரதி நீ சொல்லுறத ஏற்க முடியாது. இந்த சமுதாயத்தில் நாமும் ஒரு அங்கம். அதனால சமுதாய கோட் பாடுகளுக்கு நாமும் கட்டுப்பட்டுத் தான் வாழவேணும்!" நான் எவ்வளவு சொல்லியும் எதை யும் ஏற்றுக் கொள்ளாத அந்தப் பெண்ணின் தைரியத்தை மனதுக் குள் நான் பாராட்டிக் கொண்டேன்.

அந்த துணிச்சல்கார தங்கை ஏன் மடல் போடாமல் விட்டாள். என் மூன்று மடல்களுக்கும் பதில் போடவில்லையே? இறுதியாய் அவசரமாக சிறியதாய் ஒரு மடல் எழுதி, தபாலில் சேர்ப்பதற்காக விரைந்தேன். வீதியில் எதிரே வைதேகி வந்து கொண்டிருந்தாள். பகீரதியின் பள்ளித் தோழி அவள். "என்ன ராஜான்னே போன மாதம் பகீரதிட கல்யாணம் நடந்திச்சி ஏன் நீங்க வரயில்லை. பகீரதி உங்களுக்கு காட் அனுப்பல்லயா? ஒரு வேள வருங்கால கணவருக்கு உங்க நட்ப புரிஞ்சிக்கமுடியாம போயிட்டா. அதனால பிரச்சன வரலாமின்னு சொல்லாம விட்டி ருக்கலாம் என்ன?" வைதேகி கேள்வியும் கேட்டு பதிலையும் தந்து போக. "ஓமோம் அப்படித் தானிருக் கும்" என தலையாட்டிவிட்டு நகர்ந் தேன். தங்கை கல்யாணத்துக்கு சொல்லவில்லையே என கோபம் வரவில்லை. மாறாக மொத்தக் கவலையும் தீர்ந்து போன திருப்பி யில் மெதுவாய் கையிலிருந்த அந்த மடலை கசக்கி எறிந்து விட்டு வீட்டை நோக்கி நடக்கிறேன். ■

# மில்லேனியக் காதல்

இளைஞன். கட்டுக்குலையாத தேகம். அலை பாயும் வயது. கட்டுக்கடங்காத காளையாக, அந்த சலசலத்தோடும் நதிக்கரையில், வசந்த மண்டபத்தில், சிந்தனையோடு அமர்ந்திருந் தான்.

"மறந்துவிடு; அவள் மன்னன் மகள்!"

இரும்பு உலை ஆகியது நெஞ்சம். இருதலைக் கொள்ளி எறும்பாகியது உள்ளம். கரும்பு அவள். கனி அவள். எரிகிறதே இந்த நள்ளிரவு நிலவு! அருவியை தொட்டு குளிர் அள்ளிவரும் தென்றல் தீயாக மாறியது. மல்லிகை, முல்லை, செண்பக மலர்கள் மணக்கவில்லை அவனுக்கு. நடுநிசி உலகமே உறங்கிவழிந்தது. அந்தவீரனின் உறக்கமற்ற இரவு அது. உருண்டு, திரண்டு, முறுக்கேறிய அவன் புஜங்களிலும், மார்பிலும் ஆயிரம் வாள் முனைகள் பட்ட போது கூட கலங்காத அவன் கல்நெஞ்சம் இன்று கலங்கியே இருந்தது.

முதலாம் ஜாமம். அவன் வதனம் 'நிலவை நோக்கும் அல்லியாக' அந்த அரண்மனையின் அந்தப்புரம் நோக்கி தவம் இருந்தது. ஆம். அதோ அவள்....! மோகன நிலா, வேல்விழியாள், இளவரசி மதிவதனா! களங்கமில்லா வதனம், காந்த விழிகள், செதுக்கிய சிலையாக தரை எங்கும் காணாத பாவையாக.

ஒருகணம்! உலகம் நின்றது. இதயம் இயங்கவில்லை. சுதாகரித்துக்கொண்டான். உதிர்ந்த மலர்கள் ஒத்தடம் கொடுக்க, அவள் மென்பாதம் அன்னத்திற்கு நடை பழக்கியது. நெருங்கிவந்தாள். கோலமயில், குளிர்நிலவு இதோ.....

"ஹலோ குட் ஈவினிங் மிஸ்டர் அருணாசலம்!"

நிமிர்ந்தான் போனாவுடன்.

'ரோகிணி!' நீலநிறசுரிதாருடன் கோல மயிலாக அந்த நீண்டமேசை முன். தடுமாறிப் போனவன் தன்நிலைக்கு வந்தான். "ரோகிணி இருங்க!" அந்த நூல் நிலையத்துக்கு வரும் வாசகருள் ரோகிணியும் ஒருத்தி. அவள் ஒருபுதுமைப் பெண். விஞ்ஞானத் துறையில் ஈடுபட்டு இருந்தாள். "ரோகிணி!" நிமிர்ந்தாள். கண்வழியே கதிர்வீச்சு. "உங்களிட்டை இருந்து ஒரு நல்ல பதிலை!"

"அதுதானே உடனேயே சொல்லிவிட்டேனே அருண்!"

அவனுடைய உள்ளம் அழுதது. இதயத் துடிப்பின் இடைவெளி குறைந்தது.

"இதோ பாரும் மிஸ்டர் அருணாசலம். நான் உங்களை காதலிக்கவே முடியாது. எங்களுக்கிடையிலை அடிப்படையிலேயே நிறைய வேறுபாடுகள். நான் இன்ரநெற் யுகத்திலை இருக்கிறேன். நீங்கள் சங்ககாலத்திலை இருக்கிறீங்கள். கதர்சேட்டு, விபூதி, கழுத்திலை உருத்திராட்சம் கொட்டை, சரியாய் அந்த அருணாசலம் ரஜனிகாந்த் மாதிரித்தான். நீங்கள் சுவாமியார் ஆகிப்போய் விடுங்கோ. அதுதான் நல்லது. பிளீஸ்! என்னை தொந்தவு பண்ணாதை யுங்கோ!"

"என்ன ரோகிணி இந்த வெளித்தோற்றங்கள் கூட காத லுக்கு ஒரு தடையா?"

"நிச்சயமாக. இப்பெல்லாம் சமூகத்திலை இதுகளைக் கொண்டுதான் ஒருதரை ஒரு ஜென்ரில்மேனாக கணிக்கினம். அதுதவிர ஒரு ஸ்போட்ஸ்மேன், எக்கவுண்டன், கொம்பியூட்டர் ஒப்பரேற்றர், அற்லீஸ்ற் வெளிநாட்டிலையாவது இருக்கவேணும். இதுகளுக்குத்தான் மரியாதை. சும்மா எழுத் தாளன், இலட்சியவாதி, அரண்மனை, அந்தப்புரம். சீ யூஸ் லெஸ் ஃபலோ."

"மிஸ்டர் அருண் உங்கடை ஜொப் என்ன? கிறடிற்காட் என்ன? பாங் பலன்ஸ் என்ன? ஒரு சுரிதார் எடுத்து தர முடியுமா? உங்களாலை எனக்கு என்ன கொடுக்க முடியும்?"

"என்ரை இதயத்தை கொடுக்கிறன் ரோகிணி!"

"வட்டிக்கடையிலை அடைவுகூட வைக்கமுடியாது. யாருக்குத்தேவை அது!"

அவளுடைய அலட்சியப் பேச்சு அவனுக்கு வேதனையாக இருந்தது.

"ரோகிணி அப்பிடி என்றால் உண்மை யான அன்பு, காதல் இதுகளுக்கெல்லாம் இங்கை பெறுமதி இல்லை என்றா சொல்லு றீங்கள்?"

"ஒரு வகையிலை அப்படித்தான் அருணாசலம். காதல் என்கிறது இப்ப கற்பனையிலையும், கதைகளிலையும் தான் உயிர்வாழுது. நடைமுறையிலை காற்றடிக்கிற பக்கம் எல்லாம் அது சாய்ந்திடும். 'கண்ணே உன் கையில் கஞ்சிதந்தாலும் கற்கண்டு பாகுபோலே ஆகுமடி' என்று நீங்கள் கவிதை பாட, உங்களோடைசேர்ந்து கஞ்சிக்கு அலைய நான் தயாரில்லை. 'கார், வீடு, வாசல்' என்று ஒரு வசதியான வாழ்க்கையிலையும் சந்தோசமாக இருக்கமுடியும்தானே! அப் படியான ஒருவாழ்க்கையை தான் நான் விரும்புறன். லாஸ்ரா உங்களுக்கு ஒரு அட்வைஸ். என்னை நினைசசு மூன்று நாள் தூங்காமல் எல்லாம் கவிதை எழுதாதை யுங்கோ. பிளீஸ்! 'உயிரே, உயிரே' அது வென்ன உயிர்? டோன் வேஸ்ட் டைம். வாழ்க்கையிலை முன்னேறப் பாருங்கோ. தற்சோல்ட்!" அவள் எழுந்து போய்க் கொண்டு இருந்தாள்.

அவனுடைய உள்ளம் உடைந்தது. கோட் டைகள் சரிந்தன. வேதனையாக இருந்தது. அவமானமாக இருந்தது. வெறுப்பாய் இருந் தது. உலகத்தின் மீது ஏன் ஒவ்வொன்றின் மீதும் கோபம் மெல்ல மெல்ல அவனை விழுங்கத்தொடங்கியது. நிமிர்ந்தான் போனாவை கையில் எடுத்தான்....

"மாடமாளிகை, கோட்டை, கோபுரம், செல்வம், சிறப்பு, கீர்த்தி எதுவுமே வேண் டாம். உன் நிழலே போதும். என் உள்ளத்து மன்னன் நீயே! கொற்றவனே குற்றுயிராகி விட்ட இந்த ஜீவனையும் சேர்த்துக்கொள். மடிந்தாலும் மன்னவன் மனைவியாக மடிவேனே தவிர, மன்னன் மகளாக அல்ல! மாற்றான் ஒருவன் மாலைசூடும் மண விழாவை மறந்துவிடும்!" மன்றாடிக் கொண்டு இருந்தாள் மதிவதனா.

"மன்னவா கோபாலா கிரிதரா!" ஆறாகியது கண்ணீர்.

அவன் சிலையாக நின்றான். ஐம்புலன் களும் அடங்கியவனாக அவளை தேற்றும் மார்க்கம் தொலைந்தவனாக. மன்னன் மார் பில் மாலையானாள். தழுவியது கரம் அவள் கூந்தலை. நழுவியது நிலவு. நாகரீகம் கருதி கிழக்கு வானில் விடிவெள்ளி. பொழுது புலரத் தொடங்கியது. விடைபெறும் நேரம். விம்மலுடன் துடித்தாள், துவண்டாள் தேற்றினான்.

"சென்றுவா பெண்ணே! வென்றால்



## இணுவில் உத்திரன்

வாழ்தல். தோற்றால் மரணம். காதல் காவியம் ஆகிவிடும் தேவி!" நகர்ந்தாள். நாளிகை நாளாகியது. வேதனை வாழ்க்கை ஆகியது. அடுத்த இரவு நடு நிசிவரை

பேனாவை மேசை மீது வைத்துவிட்டு நிமிர்ந்தான் அருணாசலம். இப்போது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அவன் நினைத்துக்கொண்டான் 'பாவம் பெண்கள்! பாவம் ரோகிணி!' என்று. ■

# மழைக் கண்கள்

# இலக்கிய நயம்

"என்னடா உறைநிலையில் அமர்ந்திருக்கிறாய்? ஆட்டம் அசைவு எதுவுமில்லாமல்... தூரத்தே உன்னை அடையாளம் கண்டுகொள்வதே சிரமமாகிவிட்டது. இந்த மரக்குற்றிகளிலிருந்து வேறுபட்டுத் தெரிய மறுத்தது உன் உருவம்....."

அமலன் சிரித்தான். "ஓரறிவுப் பொருளோடு உரையாட முடியுமோ? அதுதான் உன்கவலை. பேச்சை நிறுத்தினால் உன் மூச்சு நின்றுவிடும்.அந்தப் பயம் உனக்கு... வா கதிர், பேச ஆளில்லாமல் தவித்திருப்பாய்.... அதுதான் தேடிக்கொண்டு வந்துவிட்டாய்."

கதிர் வந்தருகே அமர்ந்தான்.

"ஆடாமல் அசையாமல் விறைத்த நிலையில் அப்படியென்ன மெய்மறப்பு? எனக்கு அதைச் சொல்லேன்."

"எந்த நேரமும் அசைவுடனிருக்க நானென்ன கடலலையா?" சிரித்தபடியே நீட்டியிருந்த காலை மடக்கி சம்மணமிட்டு அமர்ந்தான். கதிர் எழுந்து போகும்வரை வாய்க்கு ஓய்வு கொடுக்க அவன் அனுமதிக்கப் போவதில்லை. உரையாடலைத் தொடர தன்னை வாகாக இருத்திக் கொண்டான் அமலன்.

"நீ அசையும் உயிர். அசைய வேண்டும். சோம்பேறிக் கணவனைப் பெற்றிருந்த பெண்ணொருத்தி தங்கள் வனக்குடிசை முகப்பில் இப்படி எழுதிவைத்திருந்தாளாம்: 'வேட்டைக் காரர்களே! இங்குள்ள அசையாப் பொருட்கள் எதனையும் சுட்டுவிட வேண்டாம். அது என் கணவராகவும் இருக்கக் கூடும்."

"என்னைச் சோம்பேறி என்கிறாயா?"

"இல்லை. திடீர் திடீரென்று உறைநிலைக்குப் போய்விடுகிறாய். என்ன மர்மம் என்று கேட்டேன்."

"பூவை நாம் கொய்வதுண்டு. பூவே நம்மைக் கொய்வதுண்டோ?"


"என்னடா இது, உன் மயக்க நிலையின் மர்மம் கேட்டால், பூக்கொய்வதில் புதிர் போடுகிறாய்?"

"புதிரில்லை நண்பனே! இரண்டு அழகிய பூக்களைப் போன்றிருந்த கண்கள், என்னை மகிழ்வித்த மறுகணமே, கூரிய அம்பாகி என்னைக் குதறியும் போட்டன.... உயிரை யாரோ குழாய் வைத்து உறிஞ்சி எடுத்துச் சென்றுவிட்டது போலிருக்கிறது. அதனால்தான் அடிக்கடி உறைநிலைக்குப் போய்விடுகிறேனோ தெரியவில்லை... உயிரற்ற உடல் உறைந்துவிடுவது இயல்புதானே!"

"அடடா! உன் மனத்தைத் திருடி உன்னை மயக்கிச் சென்றவை எந்த மலர்க் கண்கள் அமலா, சொல்வாயா எனக்கு?"

"மலர்க் கண்கள் என்பது என் கற்பிதம்தான். உண்மையில் அவை மழைக் கண்கள். கருமையும் குளிர்ச்சியும் ஒருங்கே பொருந்தியவை."

"இவ்வளவு வர்ணிக்கிறாயே, உன்னைப் பார்த்தனவா அந்தக் கண்கள்?"



"பார்க்காத கண்களை நான் எப்படிப் பார்க்க முடியும்? மற்ற உறுப்புகளுக்கில்லாத, கண்களுக்கு மட்டுமேயுரிய பெருஞ்சிறப்பு அதுதானே. கண்ணும் கண்ணும் பார்த்துக் கொண்டால்தான் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதாக ஆகும். ஒருவரை யொருவர் உணர்த்துதல், உலுக்குதல், உயிருறிஞ்சி உறைவித்தல் எல்லாமே கண்வழியேதானே சாத்தியம். வேறெந்த உறுப்புக்கு அத்துணைத் திறமையெல்லாம்...?"

"யாரடா அந்த மந்திரக்காரி? கண்களினால் நீண்ட குழாய் அனுப்பி, உன் கண்களைக் குத்தி உயிர்வரை சென்று உறிஞ்சி எடுத்திருக்கிறாளே.. யார் அவள்? எங்கு கண்டாய்?"

"தேனினுமினிய பேச்சு, திரண்ட மெல்லிய தோள்கள் உலகிலுள்ள ஒவ்வொரு மலரையும் நினைவூட்டும்

**தருவது முழடில்யன்**

அங்கங்கள், அதிலும் அந்த முகத்திலிருந்த இரு மலர்களும் சுழன்று சுழன்று... ஆம், அம்புகளைத் தான் வீசின. வட்டமாகச் சுழலும் பந்துபோன்ற ஒரு பொறியிலிருந்து ஈட்டிகள் எல்லாத் திசையிலும் வீசி எறியப்படுமாமே! அதுபோன்ற யுத்தசன்னத்தளாய்த் தன் அம்புகளை விசிறியபடி தினைப்புனப் பரணிலே நின்றிருந்தாள். என்னைத் தற்காத்துக் கொள்ள நான் கண்களை மூடித் திரும்பி நடந்திருக்க வேண்டும். அது முடியவில்லை. எதிரிகளைக் கவர்ந்திழுத்துக் கொல்வதற்கும் ஏற்ற படைக்கலங்கள் அவளிடமிருந்திருக்க வேண்டும். மலைச் சாரலில் பருத்தியும் சேர்ந்து விதைத்திருந்த தினைப் புனத்திலே கூச்சலிட்டுக் குருவிகளை விரட்டிக் கொண்டிருந்தவள் விழிகளை நான் பார்க்க நேர்ந்தது. அதுதான் நான் செய்த மகா பிழை! அவள் படைக்கல ஆற்றல் தெரியாத பாமரப் படைவீரனாக நானிருந்தேன். முதலில் அந்த மலர்கள் என்னைக் கவர்ந்தன. கண்கொடுத்தேன். அவ்வளவுதான்! மலர்களிலிருந்து வீசப்பட்ட கயிறுகள் என்னைக் கட்டியிழுத்துச் சென்று அவள் காலடியில் போட்டன. உடல் என்னிடம்தான் அசைவற்று உறைந்து நின்றது. ஆனால் உடலினுள் ஓடிக்கொண்டிருந்த உயிரின் சாரமனைத்தும் அவள் கண்கள் வீசிய கயிற்றில் கட்டுண்டு போய்விட்டன. அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியவில்லை; நான் இன்னும். அதுதான் நீ நகைக்கும் படியான என் அலங்கோலத்திற்கும் நோய்க்கும் காரணம்......"

**பூ ஒத்து அலமரும் தகைய, ஏ ஒத்து**

**எல்லாரும் அறிய நோய் செய்தனவே;**

**தேமொழித் திரண்ட மென்றோள்,**

**–மாமலைப்**

**பரீஇ வித்திய ஏனல்**


**குரீஇ ஒப்புவாள் பெருமழைக்**

**–கண்ணே.**

*(குறுந்தொகை 72)*

# ஸ்போர்ட்ஸ்

## கன்னி டெஸ்ட் தோல்வி



அமீனுல் இஸ்லாம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இந்திய அணிக்கெதிராக விளையாடிய கன்னி டெஸ்டில் 9 விக்கெட்டுகளால் தோல்வியடைந்துள்ளது.

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடந்த இப்போட்டியில் பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் இந்த அணி 400 ஓட்டங்களைப் பெற்றது. பங்களாதேஷின் அமீனுல் இஸ்லாம் 145 ஓட்டங்களை எடுத்து முதல் போட்டியிலேயே சதமடித்த சாதனையாளர் வரிசையில் இணைந்தார். சுனில் ஜோஷி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 429 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி சார்பாக சுனில் ஜோஷி 92 ஓட்டங்களை எடுத்தார். பங்களாதேஷ் கப்டன் நைமுர் ரஹ்மான் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களைக் குவித்த பங்களாதேஷால் 91 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. ஜோஷி, ஸ்ரீநாத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் 29 ஓட்டங்களால் முன்னணியில் இருந்த இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கைத் தொட்டது. துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் ஜொலித்த ஜோஷி ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

முதல் டெஸ்ட்டை தனது நாட்டில் விளையாடிய பங்களாதேஷ் அடுத்த வருடம் ஸிம்பாப்வே மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அந்த நாட்டு அணிகளுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

பங்களாதேஷ் அணி 2003ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் உலகக் கோப்பைப் போட்டிகளுக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்வதற்காகவே அடுத்தவருடம் ஏப்ரலில் ஸிம்பாப்வேக்கும், டிசம்பரில் நியூஸிலாந்துக்கும் சுற்றுப்பயணம் செய்யவுள்ளது.

அத்துடன் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளுடன் விளையாடவும் பங்களாதேஷ் அணி எண்ணியுள்ளது.

## பெண்கள் உலகக் கோப்பை போட்டி

ஏழாவது பெண்கள் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் நியூஸிலாந்தில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டி நியூஸிலாந்து நகர்களில் ஒன்றான கிறைஸ்ட்சேர்ச்சில் நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற 6 உலகக்கோப்பை பந்தயங்களில் அவுஸ்திரேலிய அணி 4 தடவைகளும் இங்கிலாந்து அணி 2 தடவைகளும் சம்பியன்களாகின.

நடந்து முடிந்த பெண்கள் உலகக்கோப்பை போட்டிகளில் சாம்பியனான அணிகள், வருடம், எதிர்த்தாடிய அணிகள், போட்டி நடைபெற்ற இடங்கள் போன்ற விபரங்கள் வருமாறு:

| சாம்பியன் | வருடம் | எதிரணி | இடம் |
|---|---|---|---|
| 1. இங்கிலாந்து | 1973 | அவுஸ்திரேலியா | பேர்மிங்காம் (இங்கிலாந்து) |
| 2. அவுஸ்திரேலியா | 1978 | இங்கிலாந்து | ஹைதராபாத் (இந்தியா) |
| 3. அவுஸ்திரேலியா | 1982 | இங்கிலாந்து | கிறைஸ்ட்சேர்ச் (நியூஸிலாந்து) |
| 4. அவுஸ்திரேலியா | 1988 | இங்கிலாந்து | மெல்போர்ன் (அவுஸ்திரேலியா) |
| 5. இங்கிலாந்து | 1993 | நியூஸிலாந்து | லோர்ட்ஸ் (இங்கிலாந்து) |
| 6. அவுஸ்திரேலியா | 1997 | நியூஸிலாந்து | கல்கத்தா (இந்தியா) |

# சிந்தியா பதில்கள்

**சிந்தியா! நான் உங்களை முட்டாள் என்று சொன்னால்.....?**

வி.வி.ஏ.கரன், கோப்பாய்.

நான் உங்களைப் புத்திசாலி என்று சொல்வேன். முட்டாளுக்குத்தான் பார்ப்பதெல்லாம் முட்டாள்தனத்துடன் தெரிவதும், புத்திசாலிக்கு பார்ப்பதிலெல்லாம் புத்திசாலித்தனம் தெரிவதும் இயற்கைதானே?

**'களவும் கற்று மற' என்பதன் பொருள் என்ன? வில்லங்கம் கலந்த விளக்கம் தான் எனக்கு வேண்டும்.**

எஸ்.எம்.ஏ.மனோஹரன், ஹற்றன்.

நீங்கள் வைத்திருப்பதுதான் வில்லங்கம் கலந்த விளக்கம் என்று ஓர் இலக்கியச் சொற்பொழிவில் கேட்டேன். அது கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகிற முதுமொழியாம். கல்வியறிவைப் பெறுவதன் மூலம் களவு எண்ணங்களை மறந்துவிடலாம். ஒழித்துவிடலாம் என்பதைச் சொல்கிறது.

**'தெனாலி' பார்த்துவிட்டீர்களா?**

எச்.எம்.றிபாஜி, திருகோணமலை.

'எல்லாம் சிவமயம் எண்டு சொல்லுவினம், எனக்கு எல்லாம் பய மயம்....' என்று தொடங்கி மூச்சு விடாமல் யாழ்ப்பாணத் தமிழை வெளுத்து வாங்கியிருக்கிறார் கமல். யாழ்ப்பாணத்தில் காலடி வைக்காமலே, அந்தத் தமிழை அந்த ராகம் மாறாமல் பேசுவதில் தன் நடிப்புத் திறமையையும் உழைப்பையும் காட்டியிருக்கிறார். ஆனால் அவருக்குப் போட்டுக் காட்டப்பட்ட யாழ்ப்பாணத் தமிழ் நாடக ஒலிப்பேழைகளில் இருந்ததெல்லாம் வயதான கதாப்பாத்திரங்கள்தான் போலிருக்கிறது. இன்றைய யாழ்ப்பாணத் தமிழ் இளைஞனின் பேச்சு அவரிடமிருந்து வரவில்லை என்பது குறை. மற்றப்படி கதை என்று பார்த்தால் படத்தில் ஒன்றுமில்லை. கமலின் யாழ்ப்பாணத் தமிழ்தான் படம் முழுக்க ஒரே விசேஷம்.

**சிந்தியா! யாரைப். பார்த்தாலும் ஒரு சின்ன, விடயத்திற்குக் கூட 'மனசுதான் காரணம் மனசுதான் காரணம்' என்று வார்த்தைக்கு வார்த்தை கூறுகிறார்களே. இந்த மனசு எங்கே உள்ளது?**

மாணிக்கம் வசந்தன், திருகோணமலை.

அவரவர் மூளையில்.

**'எல்லாம் நன்மைக்கே' என்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அலட்டிக் கொள்ளாது இருப்பது எப்படி சிந்தியா?**

எஸ்.பத்மா, கொழும்பு-10.

அவருக்குப் பார்வை இல்லை. கண் தெரியாதவராக இருந்தாலும், அவர் எப்போதும் இயற்கையை ரசித்து சிலாகித்துக் கொண்டிருப்பார். இயற்கையை ஆராதிப்பதுதான் அவரது இறை வழிபாடு.

"விழிகளில்லாமல் படைத்து, உன்னைத்தான் இயற்கை வஞ்சித்துவிட்டதே.... அப்படியிருந்தும் உன்னால் எப்படி இயற்கையைப் பாராட்டிப் பேச முடிகிறது?"

"என் பார்வையைப் பறித்து இயற்கை என்னை வஞ்சித்து விட்டதாகத் தோன்றும் போதெல்லாம் மூக்கில்லாமல் மட்டும் இயற்கை என்னைப் படைத்திருந்தால் எவ்வளவு சிரமப்பட்டிருப்பேன் என்பதை நினைத்து மகிழ்ச்சியுறுவேன் நான்."

**ஃபோட்டோ எடுத்துக் கொண்டால் ஆயுள் குறைவாமே?**

ரெங்கநாதன் அசோக்குமார், டிக்கோயா.

ஆமாம், இப்போது நீரினால், தேய்வினால் பாதிப்படையாதவாறு 'லமினேற்' முறைகள் இருக்கின்றன. அதன் மூலம் முன்னரைவிட நீண்ட காலத்திற்குப் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. ஃபோட்டோக்களின் ஆயுள் குறைவாக இருக்கிறதே என்ற கவலை இனி வேண்டாம்!



**இந்த வாழ்க்கையில் நடக்கின்ற ஒவ்வொன்றையும் பார்க்கும் போது வெறுப்புத்தானே வருகிறது?**

சி.மகாலெட்சுமி, ஏறாவூர் 04.

எதையும் எதிர்மறையாகப் பார்க்காது, *Positive* ஆக பார்க்க வேண்டும் என்று விஷயமறிந்த பெரியவர்கள் சொல்கிறார்கள். நமக்குத் தரப்பட்டிருக்கும் வாழ்வின் இந்தக் குறுகிய காலத்தில், மகிழ்ச்சியும் மனநிறைவுமாக இருந்துவிட்டுப் போக அதுதான் முக்கிய வழி என்று தோன்றுகிறது.

ஒரு குரு, சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "எதிலும் நிறைவைப் பார்க்கத் தெரிய வேண்டும். இந்தக் குவளை பாதி தண்ணீரோடு இருக்கும்போது, 'பாதி நிறைந்திருக்கிறது.' என நினைப்பவனுக்குக் கடவுள் கதவுகளைத் திறந்து விடுகிறார்" என்று சொன்னார் குரு.

ஒரு சீடன் எழுந்து சென்று, அந்தக் குவளையிலிருந்த நீர் முழுவதையுமே கீழே கவிழ்த்து ஊற்றி விட்டு, "இப்போது என்ன சொல்கிறீர்கள்?" என்றான்.

"இப்போதும் இந்தக் குவளை வெறுமையால் நிறைந்திருக்கிறது!" என்றார் குரு.

**பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டு வருகிறார்களே.... அது பற்றி சிந்தியா என்ன நினைக்கிறீர்கள்?**

ஜெ.சர்வானந்தன், ஏறாவூர் 05.

அந்த வரிசையில் நம் பத்திரிகை ஆசிரியரும் கொல்லப்பட்டு ஒரு வருடமாகி விட்டது. மீடியா தொடர்புடையவர்கள் என்ற வகையில் இதுவரை கொல்லப்பட்ட தமிழர்களின் பட்டியலே நீளமாக இருக்கிறது. செல்வி. சிவரமணி, திருச்செல்வம், ராஜினி திராணகம, கே.எஸ்.ராஜா, எஸ்.எஸ்.கணேசபிள்ளை, குகமூர்த்தி, ரமேஷ் நடராஜா, அன்ரன் மரியதாஸ், செழியன் பேரின்பநாயகம், இப்போது நிமலராஜன்... ஒவ்வொரு கொலையின் போதும் உள்ளம் நடுங்குகிறது. ஓங்கிக் கண்டனம் எழுப்பும் குரல்களோடு கலந்து கொள்வதைத் தவிர வேறுவழியிருப்பதில்லை. நிமலராஜன் கொலையைக் கண்டித்து நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது, இரு பத்திரிகையாள நண்பர்கள் பேசுகையில், நான் கேட்டுக் கொண்டிருக்க நேர்ந்தது.

" இப்போது இவ்வளவு உணர்ச்சிகரமாகப் பத்திரிகையாளர்கள் திரண்டிருக்கிறார்களே... சமீபத்தில் அன்ரன் மரியதாஸும் செழியன் பேரின்பநாயகமும் கொல்லப்பட்டபோது ஏன் யாரும் ஆர்ப்பாட்டம் நடத்தவில்லை?"

"அவர்கள் வெறும் பத்திரிகையாளர்களில்லை. அரசியல் பின்னணி உடையவர்கள்...! அரச சார்பானவர்கள்!"

"எந்தப் பத்திரிகையாளர் தனக்கென்று ஓர் அரசியல் சார்பு இல்லாதிருக்கிறார்?"

"அரசு சார்பான மீடியாக்காரர்களுக்குப் பாதுகாப்பு உண்டு, பாதுகாப்பற்ற உதிரிப் பத்திரிகையாளர்களுக்காகத்தான் நாம் நமது சக்தியைத் திரட்டிக் குரல் எழுப்ப வேண்டும்!"

"அரச சார்பான அல்லது தமிழ் போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும், அவர்கள் குடும்பங்கள் நிர்க்கதியாவதும் உங்களுக்கெல்லாம் சம்மதம்தானா?"

"மக்களுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் அழிந்துபோவதை தடுத்து நிறுத்த நாம் யார்?"

"அவர்கள் சொல்லப்படுவது பிழையில்லை என்பது இந்தக் கொலைக்கும் ஏதோ ஒரு நியாயத்தை வழங்கிவிடுவதாகாதா? சிலரது கொலைகளை இத்தகைய ஆர்ப்பாட்டமான கண்டனத்துக்கு உரியதல்ல என்று கண்டு கொள்ளாமல் விடுவதும், சிலதை உயர்த்திப் பிடிப்பதுமான இந்தக் கண்டன முறை ஒரு பகுதிக் கொலைகளை ஊக்குவிக்கும் வன்முறையாகாதா?"

"சக பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். கண்டிக்கிறோம். அதையேன் கண்டிக்கவில்லை, இதையேன் கண்டிக்கவில்லை என்று கேட்டுக் கொண்டிருக்க இது நேரம் அல்ல..."

"கண்டனத்துக்கான உங்கள் தேர்ந்தெடுப்பிலும் கொலைகளை நியாயப்படுத்தும் வன்முறை இருக்கிறது!"

"கொலைகளிலும் சரியானவை தவறானவை என்ற பாகுபாடு இருக்கிறது. எல்லாவற்றையும் ஒன்றுபோலக் கண்டித்து விட முடியாது..."

அவர்கள் விவாதம் முடிவடையாமல் நீண்டது. நமக்கு நிமலராஜன் உயிர் பறிக்கப்பட்ட கொடுமைக்காகவும் வருத்தப்படுவதே மிஞ்சியிருந்தது.

# மன்னாதி மன்னன் 32

போஜமன்னன் நான்காவது நாளன்று தனது காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, விக்கிரமாதித்த மாமன்னனுடைய சிம்மாசனம் வைக்கப்பட்டிருந்த மண்டபத்தை அடைந்தான். சிம்மாசனத்தைச் சுற்றி மூன்று முறை வலம் வந்து பிரார்த்தனை செய்து விட்டு முதல் மூன்று படிகளையும் ஏறிக் கடந்து, நான்காவது படியில் தனது வலக்காலை எடுத்து வைத்தான்.

நான்காவது படிக்குக் காவலாயிருந்த மங்களகல்யாணிப் பதுமை போஜமன்னனை மறித்தது. "போஜமன்னரே! மேற்கொண்டு மேலே ஏறுவதற்கு முன்னர் மாமன்னர் விக்கிரமாதித்தருடைய ஆற்றல்ளை விளக்கும் கதையைக் கேட்டு விட்டுச் செல்லலாம்!" என்றது.

போஜமன்னரும், அதே நிலையில் நின்றவாறு மங்களகல்யாணிப் பதுமை கூறும் கதையைக் கேட்டார்.

ஏலக்கரம்பையையும் வேதகோவிந்தனின் மகளையும் அழைத்துக் கெண்டு உஜ்ஜைனி மாகாளி பட்டணம் சென்ற மன்னன் விக்கிரமாதித்தன் ஆறு மாதங்கள் நல்லாட்சி புரிந்தான். அவருக்கும் அவருடைய தம்பியும் அமைச்சருமான பட்டிக்கும் இடையிலிருந்த உடன்பாட்டின்படி விக்கிரமாதித்தனுக்கு காடாறுமாதம் செல்ல வேண்டிய காலம் வந்தது.

காடாறுமாத கால வாசத்தைத் தொடங்கு முன் பட்டியையும் வேதாளத்தையும் அழைத்துக் கொண்டு தனது இஷ்ட தெய்வமான



காளிகாம்பாள் திருக்கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வது வழக்கம்.

கானத்திலிருந்து புறப்பட்டு அடுத்த ஊருக்குச் செல்லும் வரை மன்னர் விக்கிரமாத்தித்தனை மந்திரி பட்டி அழைத்துச் சென்று விடை கொடுத்து விட்டு வருவார்.

இதேபோல் காளி கோயிலிருந்து அவ்விருவரும் வேதாளத்துடன் செல்லும் வழியில், வழிப்போக்கர்கள் தங்குவதற்குரிய ஒரு சத்திரத்தைக் கண்டனர். அங்கு சற்று நேரம் இளைப்பாறிவிட்டுப் பயணத்தைத் தொடங்குவதற்குத் தீர்மானித்தனர்.

அந்தச் சத்திரத்தின் திண்ணையில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது மிகவும் உயர்தரமான வாடையொன்று அவர்களுடைய மூக்கைத் துளைத்தது. அதனை முகர்ந்த மந்திரி பட்டி, "அண்ணா இந்த வாசம் மிக அபூர்வமான சண்பக மலரின் மணமாகும். இந்தச் சோலையில் இருந்துதான் இந்த நறுமணம் வருகிறது என நினைக்கிறேன்," என்று கூறி சத்திரத்தின் அருகே இருந்த பூஞ்சோலையைச் சுட்டிக் காட்டினான்.

சண்பக மலரின் நறுமணத்திலே தன் கருத்தைப் பறிகொடுத்த மன்னன் விக்கிரமாதித்தன் பட்டியிடம் "தம்பி பட்டி, பூஞ்சோலைக்குள் சென்று இத்தனை வாசனை தரும் சண்பக மலரொன்றைப் பறித்துக் கொண்டு வாரும்!" என்று கூறினார்.

விக்கிரமாதித்தனின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு, பட்டி பூஞ்சோலைக்குள் புகுந்தான். பூஞ்சோலையெங்கும் மணம் பரவியிருந்ததே தவிர, சண்பக மலர்ச் செடியை அங்கு எங்குமே காணமுடியவில்லை.

சோலையில் எண்ணற்ற மலர்ச்செடிகளிருந்தும் நறுமணத்தைப் பரப்பும் சண்பக மலரைக் காணமுடியவில்லையே என்று வருந்திய மந்திரி பட்டி, களைத்துப் போய் ஏமாற்றத்துடன் மன்னன் விக்கிரமாதித்தனிடம் வந்து, "மணம் பரப்பும் மலரைக் காணமுடியவில்லை," என்று கூறினான்.

பட்டியின் இக்கூற்று விக்கிரமாதித்தனுக்கு ஏமாற்றத்தையும் பெருந்துயரத்தையும் தந்தது.

## ஆண்வாடை விரும்பாத அரசிளங்குமரி

இந்தக் காலகட்டத்தில் சத்திரமிருந்த வீதியால் வயதான இருவர் வந்து கொண்டிருந்தனர். சத்திரத்தின் திண்ணையில் ஆண்களிருவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அந்த வயோதிபர் இருவரும் துணுக்குற்றனர்.

வீதியின் மறுமுனையில் நின்றவாறே அந்த வயோதிபர்களில் ஒருவர், "தம்பிமாரே! உனடியாக அங்கிருந்து எழுந்து இப்பக்கம் வந்துவிடுங்கள். அல்லாவிட்டால் உங்கள் உயிருக்கே ஆபத்தாகிவிடும்!" என்று கலவரத்துடன் கூச்சலிட்டுச் சொன்னார்.

தங்கள் வாழ்நாளில் எத்தகைய சவால்களையும் எற்பதில் ஆர்வம் கொண்ட மன்னன் விக்கிரமாத்தனும், பட்டியும் அந்த வயோதிபரின் எச்சரிக்கையைக் கேட்டுச் சிரித்து விட்டு அப்படியே அமர்ந்திருந்தனர்.

இவ்விருவருடைய விடாப்பிடியான நடவடிக்கையைக் கண்ட வயோதிபர் இருவரும் மேலும் பயந்தனர். அடுத்த வயோதிபர் சற்று முன்னால் சென்று "தம்பிமாரே! நாங்கள் சொல்வதைக் கேளுங்கள். இந்தச் சந்திரத்தில் ஆண்கள் எவரும் தங்கமுடியாது. இந்தப் படிக்கட்டுகளில் கூட எக்காலத்திலும் எந்த ஆணும் மதித்தது கிடையாது. எந்த ஆணாவது இந்தச் சத்திரத்தை நெருங்கினாலே அரண்மனைக் காவலர்கள் ஒடோடி வந்து அவர்களின் தலையை, எதுவிதமான விசாரணையுமின்றிச் சீவிவிடுவார்கள். உங்களைப் பார்த்தால் பெரிய இடத்துப் பிள்ளைகள் போல் தோற்றமளிக்கிறீர்கள். ஆகவே தயவு செய்து அங்கிருந்து எழுந்து ஒடி வாருங்கள்!" என்று கூறினார்.

விக்கிரமாதித்தனும், பட்டியும் சத்திரத்தில் ஆண்கள் தங்கக்கூடாது என்பதற்கான காரணத்தை அறிய அவாக் கொண்டார்களாக அங்கிருந்து எழுந்து வயோதிப வழிப்போக்கர்களின் அருகே சென்றனர்.

"இந்தச் சந்திரத்தில் ஆண்கள் வாடையே கூடாது என்று கூறினீர்களே! இதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்ல முடியுமா?" என்று கேட்டனர்.

அந்தவயோதிபர்கள் இருவரும் காரணத்தைக் கூற ஆரம்பித்தனர்.

இந்தப் பூஞ்சோலைக் கப்பால் விஜயநகரம் என்ற ஒரு நகரம் இருக்கிறது. விஜயரங்கன் என்ற அரசன் இந்நகரிலிருந்து ஆட்சி புரிந்து வருகிறான். அவனுக்கொரு பெண் குழந்தை பிறந்தது. அக்கழந்தை பிறக்கும் போதே சண்பக மலரின் நறுமணத்துடன் பிறந்தமையினால் அக்குழந்தைக்கு சண்பகவல்லி என்று பெயர் சூட்டினர்.

சண்பகவல்லி மிகவும் அழகாக வளர்ந்து பன்னிரண்டாவது வயதில் ஒரு சபதமிட்டாள். "எனக்கு எந்த ஆணையும் பிடிக்காது. ஆகவே நான் கலியாணம் பண்ண மாட்டேன்" என்று சபதம் பூண்டாள். தனக்கென ஒரு தனி மாளிகை அமைத்துத் தரும்படியும் தன் தந்தையைத் தவிர வேறு எந்த ஆண் மகனும் தன் அரண்மனைக்கு அருகிலேயே வரக் கூடாது என்றும் கூறிவிட்டாள். தன் மகளின் விருப்பப்படி சண்பகவல்லிக்கு ஒரு மாளிகையை அமைத்து சுற்றிவளைத்து கோட்டை மதில்போல் ஒரு சுற்று மதிலையும் அரசன் கட்டி முடித்தான். சுற்று மதிலுக்கு வெளியே தான் ஆண்காவலர்கள் காவல் காக்க முடியும். உள்ளே எந்த ஆணும் செல்ல முடியாதவாறு கடும் பாதுகாப்பு அமைக்கப் பட்டது. அரண்மனையுள் சண்பகவல்லிக்கு சகல உதவிகளையும் செய்ய பெண் தோழிகளே நியமிக்கப்பட்டிருந்தனர்.

இப்பொழுது சண்பகவல்லிக்கு இருபத்திரண்டு வயதாகிறது. அவளுக்கு ஒரு நல்ல வரனைத் தேடிப்பிடித்து திருமணம் செய்து கொடுக்க முடியாமல் மன்னன் விஜயரங்கன் பெருந் துயரடைந்தான்.

சண்பகவல்லி வெள்ளிக்கிழமை தோறும் தன்னுடைய தோழியர் புடைசூழ, இந்தப் பூஞ்சோலையிலுள்ள தடாகத்துக்கு வந்து நீராடுவாள். பின்னர், இந்தச் சத்திரத்தில் வந்து தன் தோழியருடன் சற்று நேரம் சதுரங்கவிளையாட்டில், ஈடுபடுவாள். மாலையானதும் அரண்மனைக்குத் திரும்பிவிடுவாள்.

நாளை வெள்ளிக்கிழமையானதால் இன்று மாலையே இந்தப் பகுதியெங்கும் பெண் காவலர்கள் வந்து காவல் காப்பார்கள். அவர்களுடைய கண்களில் ஆண்கள் எவராவது தென்பட்டால் விசாரணை எதுவுமின்றி, அப்பெண் காவலாளிகளே அவர்களை சிரச்சேதம் செய்து விடுவார்கள். ஆகவே மாலை நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. "உங்களோடு நாங்களும் நின்றால் எங்களுடைய தலைகளும் தப்பாது. ஆகவே நாங்கள் போகிறோம்!" என்று வயோதிபர்கள் இருவரும் கூறிவிட்டு வேகமாக நடந்தனர்.

பயணிகள் சொன்ன சண்பகவல்லியின் கதையைக் கேட்ட விக்கிரமாதித்தனுக்கு குதூகலம் பிறந்தது. பட்டியைப் பார்த்து, "தம்பி பட்டி, சண்பகவல்லியை நான் எப்படியாவது மனைவியாக்க வேண்டும்!" என்று தன் ஆசையை பட்டியிடம் வெளிப்படுத்தினான்.

இதனைக் கேட்ட பட்டி "இந்த ஆபத்தான ஆசையை விட்டெறிந்து விட்டு, நீங்கள் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்

இராஜகுமாரன்

நான் நாடு திரும்புகிறேன்!" என்றார்.

விக்கிரமாதித்தன், "தம்பி அரச கும்பத்தைச் சேர்நத ஒரு பெண் தனது ஆசைகளை அடக்கிக் கொண்டு இவ்வாறு சபதமிட்டு வாழ்வது நடக்கக் கூடாத காரியம். இத்தகைய சபதமொன்றை அந்தப் பெண் சண்பகவல்லி பூணுவதற்கு என்ன காரணம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதற்கு என்ன வழி என்று யோசித்து ஒரு முடிவினைக் கூறு!" என்று கேட்டுக் கொண்டார்.

"அண்ணா! நான் பெண்வேடம் பூண்டு, குளத்தில் நீராடவரும் சண்பக வல்லியின் தோழியர்களுடன் சேர்ந்து அவளுடைய உண்மையான நோக்கத்தை அறிய முயற்சிக்கிறேன்!" என்று கூறிவிட்டு சண்பகவல்லியும் தோழிமாரும் வருவதை எதிர்பார்த்து மறைந்திருந்தனர்.

(மன்னன் வருவான்...)

# கத்தரித்த கடி ஜோக்ஸ்



"மானேஜர் காலையில் ஏன் உன்னைக் கன்னா பின்னா வென்று திட்டினார்?"

"அவர் கொடுத்த லெட்டரில் 'கன்' என்று வரவேண்டிய இடத்தில் 'பின்' என்று டைப் அடித்துக் கொடுத்தேன்!"



"பைரவி ராகத்தை இவ்வளவு கீழ் ஸ்தாயியிலே பாடறீங்களே...?"

"இது பாதாள பைரவி!"



"சரித்திரப் படம் எடுத்தீங்களே, என்ன ஆச்சு?"

"வரலாறு காணாத அளவுக்கு நஷ்டம்!"



"ஆறுமுகம் எப்படித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?"

"ஒரு' முகமா!"





பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
108, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436337

# அவதானிப்பு





SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

மனிதனின் சாதாரண உணர்வுகள் திடீர் திடீரென்று மாற்றமடைகின்றன. அதிகமகிழ்ச்சியோ, துக்கமோ ஏற்படும்போது மனிதனின் உள்ளுணர்வுகள் மாற்றத்துக்குள்ளாகின்றன.

உள இறுக்கம் காரணமாக மனிதனின் உள்ளமும், உடலும் பாதிப்படைகின்றன. தெளிவான காரணம் இல்லாமலும் உள இறுக்கம் அதிகரித்து, வேண்டாத பல பிரச்சனைகள் தோன்றுகின்றன.

உள இறுக்கம், மனத்தாக்கம் ஆகியவை மனிதவுடலுக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் புதிய சாதனங்கள் மூலம் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதனை ஜெனிஃபர் ஹீலி என்ற மின்னியல் பொறியியலாளர் தன்னுடைய ஆய்வு கூடத்தில் ஆராய்ந்து வருகிறார்.

# மலைப்பு



# அலங்கரிப்பு



உலகில் இந்துப் பெருமக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தீபாவளித் திருநாள் வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கோலாலம்பூர் நகரில் கடந்த தீபாவளித் தினத்தன்று ஓர் இல்லத்தில் செய்யப்பட்டிருந்த தரையலங்காரத்தையே இப்படத்தில் பார்க்கிறீர்கள். நூற்றி ஐம்பது கிலோ எடையுள்ள வண்ணப் பொடிகளைப் பயன்படுத்தி ஒரிளம் பெண் வண்ண மயிலொன்றை தரையில் அமைத்தார். தீபாவளியைத் தொடர்ந்து பல நாட்கள் வரை இந்த அமைப்பினைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

அமெரிக்காவின் ஹொய்றோ மாநிலத்திலுள்ள சான்டஸ்கி நகரிலுள்ள ஸெடர் பொயின்ட் உல்லாசப் பொழுதுபோக்குப் பூங்காவில் உருவாக்கப்பட்டுள்ள கோபுரம் இதுவாகும். மயிர்க்கூச்செறியும் பங்கி ஜம்ப் எனப்படும் துள்ளிப் பாய்தல் விளையாட்டில் ஈடுபடுவோருக்காக மட்டும் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொண்ணூற்றொரு மீற்றர் உயர கோபுரத்தின் உச்சியிலிருந்து மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் துள்ளிக் குதித்து தரையில் பத்திரமாக வந்து சேரலாம். விண்வெளிப் பயணிகள் போல அந்தரத்தில் மிதந்தவண்ணமே தரையைத் தொடும் எவருக்கும் எந்தத் தாக்கமும் ஏற்படாது. இந்த அமைப்புக்குள் காற்றழுக்க முறையை ஏற்படுத்தியிருப்பதனால் இந்தக் கோபுரத்திலிருந்து கீழே பாயும் சாகசக்காரர்களின் பாதுகாப்பு அதிகரித்தவண்ணமேயுள்ளது.

# பிரமிப்பு



பிரிட்டனின் குடியேற்ற நாடாக ஒரு நூற்றாண்டு காலம் விளங்கிய ஹொங்கொங் இன்று உலகிலேயே அதி சிறந்த வர்த்தக மையமாகத் துலங்குகிறது.

சீன மக்கள் குடியரசின் பாரிய நிலப்பரப்பின் தென்முனையில் அமைந்துள்ள ஹொங்கொங் சிறு சிறு தீவுகளை உள்ளடக்கியது. இவை போதாதென்று கடலில் செயற்கைத் தீவுகளையும் உருவாக்கினர். அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு தீவில் தான் அந்நாட்டின் சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

தீவுகள் அனைத்தையும் ஒன்றிணைக்கும் பாலத்தையே இப்படத்தில் பார்க்கிறீர்கள். இரு வழி ரயில் பாதையும் ஆறு வழி வாகனப்பாதையும் ஒன்றிணைந்து 34 கிலோ மீற்றர் தூரம் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஒன்றிணைக்கப்பட்ட மிக நீளமான பாலம் உலகிலேயே இதுவொன்றே.



## 2வது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் கீர்த்தனன்

07.10.200

சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த வத்சலானந்தன் - கலாவதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கீர்த்தனன் தனது இரண்டாவது பிறந்த நாளை 07.10.2000 அன்று சுவிற்சலாந்து (ST.Gallen) இல் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடினான். இவனை அன்பு அப்பா, அம்மா இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், சித்தப்பா, மச்சான்மார், அம்மப்பா, அம்மம்மா, அன்ரா, மாமா, அத்தை, அண்ணாமார், அக்காமார், மற்றும் சுவிஸில் இருக்கும் சித்தப்பா, அத்தை, அத்தை மாமா, மச்சான், மாமா, அத்தை, ஜேர்மனியில் இருக்கும் மாமா, அத்தை, மச்சான், Hollandஇல் இருக்கும் அத்தை, அத்தை மாமா, சகுதி மாமா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் யாவரும் சுதுமலை அம்மன் அருள் பெற்று பல்கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்